ISSN-0971-8362

https://www.tnpscthervuthunaivan.com/

# திட்டம்

பிப்ரவரி – 2023 வளர்ச்சிக்கான மாத இதழ்

## இளைஞர்களும் விளையாட்டும்


**புதிய இந்தியாவுக்கான முன்முயற்சிகள்**
அனுராக் சிங் தாக்குர்

**இளையோர் ஆற்றல்**
பரத் லால்

**நலமான எதிர்காலம்**
ரஷி ஷர்மா

**இளைஞர்களும் ஆரோக்கியமும்**
சந்திரகாந்த் லஹரியா

**தரங்கம்பாடி கோட்டை**
எஸ்.கௌரிசங்கர்

**ஒத்துழையாமை இயக்கத்தில் தமிழக மாணவர்கள்**
கோ.ரெங்கராசு




https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

வெற்றிக் கதைகள்

# தேசத்தின் பெருமிதம்

## (தொழில்நுட்பம், விண்வெளித் தொழில்நுட்பம் விளையாட்டு)



**அனைத்துத் துறைகளிலும் தொழில் நுட்ப சக்தியை வார்த்தெடுப்பதில் முன்னணியில் இருப்பவர்கள் இளைஞர்கள் தான். அதுமட்டுமின்றி, தன்னிறைவு பெற்ற இந்தியா என்ற பெரும் கனவை நனவாக்குவதற்கான மிக முக்கியமான அங்கமாகவும் அவர்கள் செயல்படுகின்றனர்.**

**அறிவியல், தொழில்நுட்பம்**

தொழில், வர்த்தகத் துறையின் வளர்ச்சிக்குப் பங்காற்றியதற்காக கூகுள் நிறுவனத்தின் முதன்மைச் செயல் அலுவலரான சுந்தர் பிச்சை 2022ஆம் ஆண்டுக்கான பத்ம பூஷன் விருது வழங்கி கௌரவிக்கப் பட்டிருக்கிறார். அந்த விருதை சான்ஃபிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவரிடம் வழங்கிப் பேசிய அமெரிக்காவுக்கான இந்தியத் தூதர் தரங்ஜித்சிங் சாந்து, “சுந்தர் பிச்சையின் உத்வேகம் அளிக்கும் வளர்ச்சி உலகின் புத்தாக்கங்களுக்கு இந்தியத் திறமையாளர்களின் பங்களிப்பை மறுஉறுதி செய்திருக்கிறது” என்று கூறினார். அதைத் தொடர்ந்து, 2022ஆம் ஆண்டு டிசம்பர் 9ஆம் தேதி சுந்தர் பிச்சையை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் சந்தித்து, புத்தாக்கம், தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து பேச்சு நடத்தினார்.

தொழில் மற்றும் வர்த்தகத்துறையின் வளர்ச்சிக்குப் பங்களித்ததற்காக மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் முதன்மைச் செயல்அலுவலரான சத்யா நாதெல்லாவுக்கு, 2022ஆம் ஆண்டுக்கான பத்மபூஷன் விருது வழங்கப்பட்டிருக்கிறது. இந்த விருதை சான்ஃபிரான்சிஸ்கோவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமெரிக்காவுக்கான இந்திய துணைத் தூதர் டாக்டர் டி.வி.நாகேந்திர பிரசாத்திடம் இருந்து நாதெல்லா இதனைப் பெற்றுக் கொண்டார். இந்தியா முழுவதும் உள்ள மக்கள் இன்னும் அதிகமாக சாதிக்க வேண்டும் என்பதற்காக தொழில்நுட்பத்தை அதிக அளவில் அவர்கள் பயன்படுத்துவதற்கு உதவி செய்வதற்காக அவர்களுடன் இணைந்து தொடர்ந்து பயணிக்கப் போவதாக, சத்யா நாதெல்லா தெரிவித்தார்.

கிளான்ஸ் என்ற நிறுவனத்தை நவிதிவாரி என்பவர் 2019ஆம் ஆண்டில் தொடங்கினார். கிளான்ஸ் என்பது நுகர்வோர் இணையதள நிறுவனம் ஆகும். கிளான்ஸ், ரொப்போசோ போன்ற மிக வேகமாக ஊடுருவக் கூடிய டிஜிட்டல் தளங்களை இந்த நிறுவனம் உருவாக்கியிருக்கிறது. கிளான்ஸ் நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவுத் திறன் உதவியுடன் தனிநபர் தேவைகளுக்கு ஏற்ப மாற்றிக் கொள்ளும் வசதியுடன் கூடிய தொழில் நுட்பம் கொண்ட திறன்மிகு கைப்பேசிகளைப் பயன்படுத்துபவர்கள், இணையதள உள்ளடக்கம்,பொருள்கள் மற்றும் தாங்கள் விரும்பிய தேவைகள் ஆகியவற்றை அவர்களது திறன் செல்பேசியின் திரையில் பார்க்க முடியும்.

அதேபோல், நிக்கில் காமத், நிதின் காமத் ஆகிய இருவரும் இணைந்து சேவைக் கட்டணத்தை முழுமையாகத் தள்ளுபடி செய்யக்கூடிய தரகு நிறுவனத்தை உருவாக்கியுள்ளனர். அந்த நிறுவனம் கடந்த ஆண்டில் 4,300 கோடி ரூபாய் வருமானம் ஈட்டியுள்ளது. அதில், 1800 கோடி ரூபாய் நிகர இலாபமாகும். கனரா வங்கியில் இடைநிலைப் பணியாளராகப் பணியாற்றி வந்த அதிகாரியின் மகன்களான நிக்கில் காமத்தும், நிதின் காமத்தும் 10 ஆண்டுகளை விட சிறிது அதிக காலத்தில் இந்தியாவில் நிதிச்சேவைத் துறையில் தவிர்க்க முடியாத சக்திகளாக உருவெடுத்துள்ளனர். அவர்களின் நிறுவனமான ஜேரோதா முழுக்க முழுக்க அவர்களது சொந்த முதலீட்டை மட்டுமே கொண்டுள்ளது. அந்த நிறுவனத்தின் ஒரு பைசா கூட வெளி முதலீடு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ரவி ராமு பட்டேல் மொழி பெயர்ப்பு செய்யும் ரோபோ ஒன்றை உருவாக்கியுள்ளார். அது 14 வகையான மொழிகளிலிருந்து மொழியாக்கம் செய்யும் திறன் படைத்ததாகும். ஐஐஓடி (Industrial Internet of Things - IIOT) தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு, தானியங்கி மாதிரி ஒன்றைப் படைத்ததற்காக மாவட்ட அளவிலான புத்தாக்கப் போட்டியில் பரிசு பெற்ற பிறகு, இந்த மொழிபெயர்ப்பு ரோபோவைத் தயாரிக்கும் முயற்சியில் வெற்றி பெற்றிருக்கிறார். அவர் உருவாக்கிய தானியங்கி மாதிரி, மனிதர்களின் குரல் மூலம் பிறப்பிக்கப்படும் ஆணைகளுக்குப் பணியக் கூடியதாகும். மிகவும் வறுமையில் வாடிய துப்புரவுத் தொழிலாளி ஒருவரின் மகனான ரவி ராமு பட்டேல், திறன்மிகு கைப்பேசிகளில் விளையாடக் கூடிய விளையாட்டுகளை உருவாக்கிக் கொடுத்துள்ளார். இவரது சமீபத்திய கண்டுபிடிப்பு டோரோ எனப்படும் மொழிபெயர்ப்பு ரோபோவாகும். இதன் தனித்துவமான அம்சம் என்னவென்றால், எந்த மொழியில் மொழியாக்கம் செய்ய வேண்டும் என்பதை நாம் குறிப்பிடத் தேவையில்லை. நமது குரல் மூலமாகவே இந்த மொழிபெயர்ப்பு ரோபோ அதைத் தெரிந்துகொண்டு அதற்கேற்ற வகையில், மொழி பெயர்த்துக் கொடுக்கும்.

தொடர்ச்சி 55ம் பக்கம்

https://www.tnpscthervuthunaivan.com/


# திட்டம்

மாத இதழ்

மலர் 54
இதழ் 02

பிப்ரவரி 2023
மக – பால்குண 1944
ஸ்ரீ சுபகிருது வருடம் தை – மாசி



முதன்மை ஆசிரியர்
**ராகேஷ் ரேணு**
முதுநிலை ஆசிரியர்
**சஞ்சய் கோஷ்**



**கட்டுரையாளர்களின் கருத்துகள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துகளும் அரசின் கருத்துகளை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.**

**திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டங்களால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துக்களை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.**



**சந்தா-வை DD மூலம் அனுப்ப வேண்டிய முகவரி :**
**ஆசிரியர்** (Editor)
**திட்டம்**
**வெளியீட்டுப்பிரிவு**
A Wing இராஜாஜி பவன்
பெசன்ட் நகர், சென்னை –600 090
தொலைபேசி : 044 24465382, 044 24917673.
மின்னஞ்சல்: editorthittam@gmail.com
bmsechennai@gmail.com



தேசத்தின் பெருமிதம் 02 & 55
தலையங்கம் 04
புதிய இந்தியாவுக்கான முன்முயற்சிகள்
– அனுராக் சிங் தாக்குர் 05
டிஜிட்டல் பொருளாதாரத்தை வடிவமைத்தல்
– பாலேந்து ஷர்மா தாதீஜ் 11
இளைஞர் ஆற்றலின் மேன்மையைப் போற்றுதல்
– பரத் லால் 16
தகுதியான இந்தியா
நலமான எதிர்காலத்தை நோக்கி
– ரஷி சர்மா, புரபி பட்டாநாயக் 21
தரங்கம்பாடி கோட்டை
– எஸ்.கௌரி சங்கர் 27
ஒத்துழையாமை இயக்கமும்
தமிழக மாணவர்களின் பங்களிப்பும்
– கோ.ரெங்கராசு 32
இளைஞர்களும் ஆரோக்கியமும்
– சந்திரகாந்த் லஹரியா
ரோட்நி வாஸ் தீப் பிரியா லால் 35
கால்பந்து உலகம்
– ஷிவேந்திர சதுர்வேதி 40
சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கு
இளைஞர்களின் பங்கு
– அவிநாஷ் மிஸ்ரா
மதுவந்தி தத்தா 45
வேலைவாய்ப்பிற்கான திறன்கள்
– ஹமங் ஜானி 50



Log on to **http://publicationsdivision.nic.in/**
in collaboration with **bharatkosh.gov.in**




https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



# இளைஞர்களின் பாதைகளை ஒளிமயமாக்கல்




இந்தியாவில் இன்று இளைஞர்களின் மக்கள்தொகை மிக அதிகமாக உள்ளது. 2020 முதல் 2050ஆவது ஆண்டு வரையான ‘இந்தியப் பொருளாதாரத்தின் பொற்காலம்’ என்று கருதப்படும் நிலையில் இளைஞர்கள் மிகவும் சிறப்பான வகையில் பங்காற்ற உள்ளனர். சரியான கொள்கைச் செயல்பாடுகள் மூலம் மிகச் சிறந்த மாற்றங்களை ஏற்படுத்தி இந்தியப் பொருளாதாரத்தைப் பலவகைப்பட்ட தன்மையுடன் நிலைத்து நிற்கும் பொருளாதார வளர்ச்சியோடு அவர்கள் மிளிரச் செய்வார்கள். ஆகவே, இளைஞர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளை நாம் அணுகுவதோடு அவர்கள் மேம்படுவதற்கு வாய்ப்புகளையும் வழங்க வேண்டும்.

இளைஞர்களின் ஆக்கப்பூர்வமான புத்தாக்க ஆற்றல்களைப் பயன்படுத்த இந்திய அரசு அவர்களுக்கான சுய வளர்ப்பு, நாட்டு வளர்ப்பு என்ற இலக்குகளைச் செயல்படுத்த வேண்டும், அதாவது இளைஞர்களின் தனித்தன்மையை மேம்படுத்தி, இந்தியாவின் பலதரப்பட்ட வளர்ச்சிப் பணிகளில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும். இது அல்லாமல், மற்ற பிற துறைகளான கல்வி, வேலைவாய்ப்புப் பயிற்சி, மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலம் ஆகிய துறைகளிலும் இளைஞர்களின் மேம்பாட்டிற்கு அரசு வழி வகுக்க வேண்டும். இளைஞர்களின் திறன்களும் தன்னம்பிக்கையும் மேம்படும் போது, நாட்டு வளர்ச்சியும் பன்மடங்கு உயர்கிறது.

இளைஞர்களின் திறன் மேம்பாடுகளிலும், விரிவடையும் வேலைச் சந்தையிலும் உலகளாவிய சந்தைப் பொருளாதாரத்தை அணுகுவதிலும் அவர்களுக்கு வாய்ப்பு அளிப்பதில் தான் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியும், விரிவாக்கமும் உள்ளது. புதிய உலகச் சூழ்நிலையை எதிர் கொள்ளும் நிலையில் இந்தியா உள்ளதால் அரசு தொடர் முயற்சிகள் மேற்கொண்டு அவர்களின் திறன்களை மேம்படுத்தவும், உலகளாவிய வேலைவாய்ப்புகளுக்கு அவர்களைத் தயார்படுத்தவும் முனைந்துள்ளது. இது அல்லாமல், புதியனவற்றைத் தோற்றுவிக்கவும், தொழில்முனைவுகளை மேற்கொள்ளவும் இளைஞர்களுக்கு சிறப்பான சூழல் உருவாக்கப் பட்டுள்ளது.

இளைஞர் மேம்பாட்டிற்கு விளையாட்டுத் துறையும் முக்கியமானதாகும். விளையாட்டுகளின் அடித்தளத் தத்துவங்களான கூட்டுச் செயல்பாடு, நியாயமான செயல்பாடு, கூட்டுறவு, கட்டுப்பாடு ஆகியவை அவர்களுக்கு மற்றவர்களோடு இணைந்து செயல்படுதல், சுயமாகச் செயல்படுதல், சுயக்கட்டுப்பாடு, பொறுப்பேற்பு, குடியுரிமை ஆகிய சிறப்புப் பண்புகளை அளிக்கிறது.

விளையாட்டுத் துறையில் இந்தியா மிளிர ‘தகுதியான இந்தியா’ இயக்கத்தின் மூலம் நம் ஒவ்வொருவருடைய அன்றாட வாழ்க்கையிலும், கட்டுக்கோப்பான உடல்நலத்தை வலியுறுத்தியிருக்கிறோம். கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் இளைஞர்களின் மேம்பாட்டிற்காக உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ளவும், பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் திறன் மிகுந்தவர்களை அடையாளம் காணவும், விளையாட்டுப் போட்டிகளை நடத்தவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தியாவில் இளைஞர்களின் எதிர்பார்ப்புகளையும், தேவைகளையும் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளதோடு, அவர்கள் மேம்பட்டு, நாட்டையும் முன்னெடுத்துச் செல்லத் தேவையான தகவல்களையும் இந்த மாதத்தின் திட்டம் இதழ் வழங்குகிறது.

– ஆசிரியர்



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



# புதிய இந்தியாவுக்கான முன்முயற்சிகள்

– அனுராக் சிங் தாக்குர்

"இந்த உலகம் மிகச் சிறந்த உடற்பயிற்சிக் கூடம். நம்மை வலிமையாக்கிக் கொள்வதற்காக நாம் அனைவரும் இங்கு வந்திருக்கிறோம்"

– சுவாமி விவேகானந்தர்



உலகில் அதிக இளைஞர்களைக் கொண்ட நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்தியாவின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் 27.2 விழுக்காட்டினர் 15 முதல் 29 வரையிலான வயதுப் பிரிவைச் சேர்ந்தவர்கள். மக்கள்தொகையின் இலாபப் பங்கீடு இந்த அளவுக்கு இருப்பதால் இதைக் கொண்டு அனைத்து மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தவும், நாட்டை முன்னேற்றவும் முடியும். இந்தியாவின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு இளைஞர்களின் தீவிரமான பங்கேற்பின் வழியாக உத்வேகம் அளிப்பதற்கான திறன் எல்லை இல்லாதது. ஒட்டுமொத்த உலகமும் நம்மை கவனித்துக் கொண்டிருக்கும் நிலையில், உலக அரங்கில் இந்தியா மிக முக்கியமான பங்காற்ற வேண்டியுள்ள நிலையில், 21ஆவது நூற்றாண்டில் இந்தியாவைக் கட்டமைப்பதில் இளைஞர்களின் பங்கு மிகவும் முக்கியமானதாகும்.

நாட்டின் இளைஞர்கள் தான் வளர்ச்சிக்கான மிக முக்கியமான சொத்துக்கள் ஆவர்; சமூகக் கருவிகளும், சமூக மாற்றத்திற்கான கருவிகளும் அவர்களே; பொருளாதார முன்னேற்றத்திற்கும், தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளுக்கும் உந்து சக்தியாகத் திகழ்பவர்கள் இளைஞர்கள் தான்; உலக வேலைவாய்ப்புச் சந்தையில் போட்டியிடும் அளவுக்கு இளைஞர்களுக்குப் போதுமான அளவுக்குத் திறன்கள் வழங்கப்படுவதை உறுதி செய்ய அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. உலக விநியோகச் சங்கிலி, சேவைத் துறை, பொருளாதாரம் ஆகிய மூன்றும் இணைந்து இளம் வயதுடைய, படித்த, திறன் பெற்ற மனித சக்திக்கு மிக அதிக அளவிலான வேலைவாய்ப்பினை வழங்கும் திறன் கொண்டவை. இந்தத் தேவைகளை நிறைவேற்றும் அளவுக்கு மிகப்பெரிய அளவில் திறன் பெற்ற மனித சக்தித் தொகுப்பை உருவாக்குவதற்கான முயற்சிகளில் இந்திய அரசு ஈடுபட்டிருக்கிறது. அதுமட்டுமின்றி, இளைஞர்களிடம் புத்தாக்க நிறுவனங்களை வளர்த்தெடுக்கக் கூடிய, தொழில்முனையும் திறனை ஊக்குவிக்கக் கூடிய வலிமையான சூழல் அமைப்பையும் இந்திய அரசு உருவாக்கி வருகிறது.



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

**தூய்மை இந்தியா பரப்புரை**

இந்தியாவின் முன்னோடித் திட்டமான தூய்மை இந்தியா இயக்கத்தின் மிகப் பெரிய தூதர்களாகவும், அது குறித்துப் பரப்புரை செய்பவர்களாகவும், நமது நாட்டின் இளைஞர்கள் தான் திகழ்கின்றனர். வழக்கமான இயக்கங்கள் அல்லது அரசுத்திட்டங்களைக் கடந்து, குடிமக்கள் இயக்கமாக தூய்மை இந்தியா இயக்கம் மாறியிருக்கிறது. பொதுமக்களின் நியாயமான குறைகளைக் களைவது மட்டுமின்றி, சமூகப் பிரச்சினைகளை எதிர்கொண்டு சமாளிப்பதற்கும் தூய்மை இந்தியா இயக்கம் உறுதி பூண்டிருக்கிறது. மக்கள் இயக்கம் என்ற நிலையில் இருந்து, மக்களின் பங்கேற்பு என்ற நிலைக்கு மாறவேண்டும் என்பதை மாண்புமிகு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். அதன்படி, இளைஞர்களின் தீவிரமான பங்கேற்பு இல்லாமல் எந்தவொரு இயக்கமும் முழுமை பெறாது.

இந்தியா விடுதலை அடைந்ததன் 75ஆவது ஆண்டைக் குறிக்கும் வகையில், மத்திய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் இளைஞர் விவகாரத்துறையின் வழிகாட்டுதலில் நேரு யுவகேந்திரா அமைப்பு கடந்த 2022ஆம் ஆண்டு அக்டோபர் ஒன்றாம் தேதி முதல் அக்டோபர் 31ஆம் தேதி வரை தூய்மை இந்தியா இயக்கம் 2.0 திட்டம் சார்ந்து பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தியது. இந்தியா முழுவதும் 1.68 இலட்சம் கிராமங்களில் இத்தகைய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, குப்பைகளை அகற்றுதல், தூய்மையாக்குதல் உள்ளிட்ட பணிகள் அடங்கிய 2.22 இலட்சம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிகழ்ச்சிகளின் மூலம் இளைஞர் மன்ற உறுப்பினர்கள், இளம் தன்னார்வலர்கள் மற்றும் சமுதாயத்தின் பிற பிரிவினரைக் கொண்டு, ஒரு கோடியே 55 இலட்சம் கிலோ குப்பைகள் சேகரிக்கப்பட்டன. அவற்றில் ஒரு கோடியே 54 இலட்சம் கிலோ குப்பைகள் வகை பிரிக்கப்பட்டு அகற்றப்பட்டுவிட்டன. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், சமுதாய மையங்கள், பள்ளிக்கூடங்கள், கிராமங்கள், ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பல்வேறு முக்கிய இடங்கள் என இந்தியா முழுவதும் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பொதுமக்கள் குறிப்பாக இளைஞர்கள் இந்த நிகழ்ச்சியில் பெருமளவில் கலந்துகொள்வது மட்டுமின்றி, மற்றவர்களையும் தாமாக முன்வந்து இந்த நிகழ்ச்சியில் சேரும்படி ஊக்குவிப்பதில் மிக முக்கியப் பணியாற்றினார்கள்.

**இளம் தன்னார்வலர்கள்**

தேசத்தைக் கட்டியெழுப்புதல், ஆளுமைத் திறனை வளர்த்தெடுத்தல் ஆகிய இரு முக்கிய இலட்சியங்களை எட்டிப் பிடிக்கும் பணியில் இளம் தன்னார்வலர்களை ஈடுபடுத்துவதில், இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சகம் அதிக கவனம் செலுத்தி வருகிறது. இந்தியா விடுதலை அடைந்ததன் 75ஆவது ஆண்டை நாம் கொண்டாடி வரும் நிலையில், இந்திய விடுதலையின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் காலத்தில் நாம் எதையெல்லாம் சாதிக்க வேண்டும் என்று விரும்புகிறோமோ, எதற்கெல்லாம் பங்களிக்க வேண்டும் என்று விரும்புகிறோமோ அதற்காக உழைக்க நாம் அனைவரும் உறுதியேற்றுக் கொள்ள வேண்டும். இந்தியாவின் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் கட்டியெழுப்ப வேண்டிய மிக முக்கியமான பொறுப்பு இளைஞர்களுக்கு உள்ளது. எனது இளம் நண்பர்கள் பலர் நாட்டின் நீடித்த வளர்ச்சிக்காக மத்திய அரசும், மாநில அரசும் செயல்படுத்தும் திட்டங்களில் தங்களை ஏற்கெனவே ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றனர். தேசத்தைக் கட்டியெழுப்பும் பணியில் இளைஞர்களைத் தீவிரமாக ஈடுபடுத்துவதற்கும், குறிப்பிடத்தக்க வகையில் பங்களிப்பதற்கும் ஏற்ற வகையில், புதிய வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்; தனித்துவமான யோசனைகளை வழங்க வேண்டும்; அதன் மூலம் தாமாக முன்வந்து பணியாற்றும் கலாச்சாரத்தை ஊக்குவிக்க வேண்டும் என்று தனியார் துறைகளில் உள்ள பங்குதாரர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நேரு யுவகேந்திரா அமைப்பில் உள்ள 14 ஆயிரம் இளம் தன்னார்வலர்களுக்கு அவர்களின் வாழ்க்கைக்கான திறன்களை அதிகரிக்கும் வகையில், திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் ஒன்றை மத்திய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை தொடங்கியுள்ளது. கடந்த ஆண்டு விடுதலை நாள் விழாவில் உரையாற்றும் போது, மாண்புமிகு இந்தியப் பிரதமர் குறிப்பிட்ட அடுத்த 25 ஆண்டுகளில் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதற்கான ஐந்து இலட்சியங்களை நிறைவேற்றுவதற்கு இந்தத்



https://www.tnpscthervuthunaivan.com/

திட்டத்தின் மூலம் பயிற்சிபெறும் இளம் தன்னார்வலர்கள் மிக முக்கிய பங்காற்றுவார்கள். நாடு முழுவதும் 3.7 கோடி வீடுகளுக்குச் சென்று 9.38 கோடி இந்தியக் குடிமக்களைச் சந்தித்து, அவர்களின் வீடுகளில் இந்தியாவின் மூவண்ண தேசியக் கொடியை ஏற்ற வேண்டும் என்று கூறி, அவர்களை ஏற்கச் செய்ததில் இந்த இளம் தன்னார்வலர்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். அவர்கள் மேற்கொண்ட பிரச்சாரம் காரணமாக, 2022ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ஆம் தேதி முதல் 15ஆம் தேதி வரையிலான மூன்று நாள்கள் நாடு முழுவதும் உள்ள இரண்டு கோடி குடும்பங்கள் அவர்களின் வீடுகளில் மூவண்ண தேசியக் கொடியை ஏற்றி வைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஃபிட் இந்தியா**

விளையாட்டு, கல்வி, திறன் மேம்பாடு புதிய கல்விக் கொள்கை மூலம் மண்டல மொழிகளில் கல்வி ஆகிய துறைகளில் புரட்சிகரமான முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. உலகின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் கருவியாக இந்தியா மாறிவரும் சூழலில், இந்தியாவின் வளர்ச்சிக்கான கருவியாகத் தங்களை மாற்றிக்கொள்ளும் நோக்குடன், இளைஞர்கள் தீவிரமாகவும், புத்தாக்கத்துடனும் செயல்பட வேண்டும்; புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும்; வலிமையான கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும்; திறன், கூடுதல் திறன், மறுதிறன் பெற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைய நிலையில், இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகங்களும், கல்வி நிறுவனங்களும் தங்களின் விளையாட்டுக் கட்டமைப்பை மேம்படுத்தி வருகின்றன. அதன் மூலம் இளைஞர்கள் ஃபிட் இந்தியா இயக்கத்தில் தீவிரமாகப் பங்கேற்கவும், அதன் பயனாக "ஒரு நாளைக்கு அரை மணி நேரம் உடற்பயிற்சி செய்யுங்கள்" என்ற முழக்கத்திற்கு ஏற்ப நல்ல உடற்கட்டுடன், ஆரோக்கியமான வாழ்க்கை முறையை வாழவும் பல்கலைக் கழகங்களும், கல்வி நிறுவனங்களும் வகை செய்கின்றன.

இந்தியாவின் 74ஆவது விடுதலை நாள் விழாவைக் கொண்டாடும் நோக்கில், 2020ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14ஆம் தேதி முதல் அக்டோபர் 2ஆம் தேதி (தேசத்தந்தை மகாத்மா காந்தியின் 151வது பிறந்தநாள்) வரை ஃபிட் இந்தியா விடுதலை நாள் ஓட்டத்தின் முதல் கட்டம் நடத்தப்பட்டது. பொதுமக்கள் தாங்கள் விரும்பிய இடங்களில் இருந்தபடி, விரும்பிய வேகத்தில் ஓடலாம் என்ற வசதியுடன் மெய்நிகர் ஓட்டமாக நடத்தப்பட்ட இந்த ஓட்டத்தில், 7 கோடிக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். இந்த ஓட்டத்தின் இரண்டாம் கட்டம் இந்திய விடுதலையின் 75ஆவது ஆண்டுக் கொண்டாட்டங்களின் ஒரு கட்டமாக 2021ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13ஆம் தேதி முதல் அக்டோபர் 2ஆம் தேதி வரை நடத்தப்பட்டது. இதில், 9 கோடிக்கும் கூடுதலான மக்கள் கலந்து கொண்டனர்.

**விளையாட்டு, கல்வி மற்றும் இளைஞர் மேம்பாடு**

விளையாட்டு என்பது அனைவரையும் ஒருங்கிணைக்கக் கூடிய, சமத்துவமாக்கக் கூடிய மிகப்பெரிய சக்தியாகும். கலாச்சாரம், மொழி, நிறம், பூகோள எல்லைகள் என மக்களைப் பிரித்துப் பார்க்கும் பல்வேறு அம்சங்களைக் கடந்து, சமூகத்தின் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான மிகப்பெரிய சக்தி விளையாட்டு ஆகும். விளையாட்டை வளர்ப்பதற்காக அரசு தொடர்ந்து மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் காரணமாகவும், விளையாட்டுச் சூழல் அமைப்பை வலுப்படுத்துவதற்கு அரசு அளித்து வரும் ஊக்கம் காரணமாகவும், விளையாட்டு குறித்த பொதுமக்களின் பார்வையில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதன் பயனாக, அண்மையில் முடிவடைந்த ஒலிம்பிக் போட்டிகள், பாரா ஒலிம்பிக் போட்டிகள், காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றில் இந்திய வீரர்கள் மிகச் சிறப்பாக விளையாடி சாதனை படைத்துள்ளனர்.

சர்வதேச அரங்குகளில் இந்தியத் தடகள வீரர்கள் சாதனை படைப்பதை ஒட்டுமொத்த சமூகமும், குறிப்பாக இளைஞர்கள், குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் பார்க்கும் போது, அவர்களின் வெற்றியை நாட்டின் வெற்றியாகக் கொண்டாடும் போது, மாண்புமிகு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களே பல்வேறு தருணங்களில் தடகள வீரர்களுடன் நேரடியாக உரையாடும் போது சமுதாயத்தின் மனவலிமை அதிகரிக்கிறது. ஏராளமான பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளை விளையாட்டு வீரர்களாக்க முன்வருகின்றனர். இவை அனைத்தையும் விட முக்கியமாக, விளையாட்டுத்துறை வளர்ச்சிக்காக அரசுத் தரப்பில் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் பார்க்கும் போதும், இந்திய விளையாட்டு


https://www.tnpscthervuthunaivan.com/




வீரர்களுக்கு ஆதரவு அளிப்பதில் பெருநிறுவனங்கள் ஆற்றிவரும் முக்கியப் பங்கை பார்க்கும் போதும், விளையாட்டு என்பது கவர்ச்சிகரமான, பயனளிக்கக் கூடிய ஒரு பணி என்பதை இந்தச் சமுதாயம் உணர்ந்து கொள்வதற்கு மிகச் சரியான தருணம் இதுவாகும். விளையாட்டுத் திறனை இளம் வயதிலேயே அடையாளம் காண்பது நன்மை பயப்பதாகும். இளம் வயதிலேயே அடையாளம் கண்டால் தான், குழந்தைகளுக்கு ஒரு குறிப்பிட்ட விளையாட்டில் பயிற்சி அளிக்க முடியும். அதைக் கருத்தில் கொண்டு, பள்ளிக்குச் செல்லும் 5 முதல் 18 வயது வரையிலான 23 இலட்சத்திற்கும் அதிகமான குழந்தைகளின் திறன், கேலோ இந்தியா கைபேசிச் செயலி மூலம் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. குழந்தைகளின் விளையாட்டுத் திறனை மதிப்பீடு செய்வதற்காக, 82 ஆயிரத்திற்கும் கூடுதலான உடற்கல்வி ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டிருக்கிறது.

தரமான விளையாட்டுக் கட்டமைப்புகள் அனைத்து குடிமக்களும் சமத்துவமாக அணுகக்கூடிய அளவில் இருப்பதையும் உறுதி செய்வதுதான், விளையாட்டு இந்தியா (கேலோ இந்தியா) திட்டத்தின் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்றாகும். இதற்காக, மத்திய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சகம் நாடு முழுவதும் 234 விளையாட்டு உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றின் மதிப்பு கிட்டத்தட்ட 2,500 கோடி ரூபாய் ஆகும். விளையாட்டு இந்தியா திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு நடவடிக்கைகளின் மூலமாக, விளையாட்டுச் சூழல் அமைப்பில் உள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் பிற பங்குதாரர்களுக்கு ஆதரவு அளிப்பதில் எங்கள் அமைச்சரவையும், இந்திய விளையாட்டு அரங்கமும் போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் கேலோ இந்தியா மையங்களை அமைத்தல், கேலோ இந்தியா மாநிலத் திறன் மையங்களை அமைத்தல், ஆண்டுதோறும் கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளை (இளைஞர் விளையாட்டுகள், பல்கலைக்கழக விளையாட்டுகள், குளிர்கால விளையாட்டுகள் உள்ளிட்டவை) நடத்துதல், சமுதாயப் பயிற்சி மேம்பாட்டுத் திட்டங்கள், மகளிர் விளையாட்டு லீக்குகள் மூலமும் பல்வேறு விளையாட்டுகள் மூலமும் பெண்களின் பங்கை உறுதி செய்தல், பெரிய அளவிலான விளையாட்டு மற்றும் உடற்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சிகளை ஃபிட் இந்தியா திட்டத்தின் மூலம் நடத்துதல் ஆகியவை, இதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் அடங்கும்.

மேற்கண்டவை தவிர, விளையாட்டில் திறன் கொண்டிருப்பவர்களை இளம் வயதிலேயே கண்டறிந்து, அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி, பல்வேறு வகையான விளையாட்டுகளில் திறன் பெற்று விளங்கும் வீரர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு ஊக்கத்தொகை கேலோ இந்தியா அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி மையங்கள் மூலம் பயிற்சி ஆகியவை வழங்கப்படும். இன்றைய நிலையில், 21 வகையான

https://www.tnpscthervuthunaivan.com/

விளையாட்டுகளில் திறமைமிக்க 2745 பேர் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர். அவர்களுக்குப் பயிற்சி, பயணப்படி, விளையாட்டு அறிவியல் ஆதரவு, உணவுக்கட்டணம், மருத்துவக் கட்டணம் இவை தவிர்த்த பிற செலவுகள் என ஆண்டுக்கு 6.28 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. இத்தகைய இளம் விளையாட்டு வீரர்கள் அனைவரும் எதிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வெல்லும் சாதனையாளர்களாக வளர்த்தெடுக்கப்படுகின்றனர். இந்தியா முழுவதும் கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் பயிற்சி அளிப்பதற்காக 264 விளையாட்டு அகாடெமிகளுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டு இருக்கிறது. இந்தப் பயிற்சி மையங்களில் அடையாளம் காணப்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு அதிநவீன வசதிகளுடன் பயிற்சி அளிக்கப்படும்.

தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள இளைஞர்களின் திறனை ஆக்கபூர்வமான வழிகளில் மடைமாற்றும் நோக்குடன் அப்பகுதியில் உள்ள இளைஞர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தியாவின் விளையாட்டு மேம்பாட்டுத் திட்டம் அனைவரையும் உள்ளடக்கியதாக இருப்பதை உறுதி செய்யும் நோக்குடன், கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கும் பயிற்சி உள்ளிட்ட பல்வேறு வகையான உதவிகள் வழங்கப்படுகின்றன. இது தவிர, இந்தியாவின் பல நூற்றாண்டுகால கலாச்சார மற்றும் பாரம்பரியத்தை ஊக்குவிக்கும் நோக்குடன், கிராமப்புற மற்றும் உள்ளூர் விளையாட்டுகளை ஊக்குவிப்பதற்கான திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்திய இளைஞர்களுக்கு முழுமையான முன்னேற்றத்தை ஏற்படுத்துவதுதான் 2020ஆம் ஆண்டின் தேசிய கல்விக் கொள்கையாக உள்ளது. இந்த இலக்கை எட்டுவதற்காகவும், தற்சார்பு இந்தியாவை அடைவதற்காகவும் திறன் மேம்பாட்டில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இடைநிலை மாணவர்களுக்கு தச்சுத் தொழில், பிளம்பிங், மின்கருவிகள் சீரமைப்பு, தோட்டக்கலை, மண்பாண்டத் தொழில், எம்பிராய்டரி போன்ற தொழில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இளைஞர்களிடம் அணி உணர்வு, மனவலிமை, உடல் நலன் மற்றும் வளர்ச்சிக்கான பிற முக்கிய தேவைகளைக் கட்டமைக்கும் நோக்குடன் நமது இளைஞர்களுக்கு முழுமையான கல்வி அனுபவத்தை வழங்குவதற்காக விளையாட்டுச் சக்தியை நாம் பயன்படுத்தி வருகிறோம் என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய கல்விக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, விளையாட்டை கல்வித் திட்டத்துடன் ஒருங்கிணைப்பது என்பது இணைந்து செயல்படுதல், அணி உணர்வு, ஒழுங்கு உள்ளிட்ட திறன் மேம்பாட்டிற்காக விளையாட்டு மற்றும் விளையாட்டு சார்ந்த நடவடிக்கைகளை பயன்படுத்தும் உள்ளடக்கிய கல்வித் திட்டக் கற்பித்தல் அணுகுமுறையாகும். விளையாட்டை உள்ளடக்கிய கற்றலின் முக்கியமான நோக்கம் என்னவென்றால், மாணவர்களின் வாழ்க்கை முறையில் உடற்பயிற்சியை ஒருங்கிணைப்பதும், உடல் மற்றும் மனநலத்தை ஊக்குவிப்பதும், ஃபிட் இந்தியா இயக்கத்தால் அடையாளம் காணப்பட்டுள்ள உடற்பயிற்சி நிலைகளுடன் சம்பந்தப்பட்ட வாழ்க்கை முறைத் திறன்களைப் பெறுதல் ஆகியவையுமாகும்.

இந்திய விடுதலையின் 75ஆவது ஆண்டு விழாவின் ஒரு கட்டமாக ஃபிட் இந்தியா புதிர்ப் போட்டி என்ற பெயரில் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி சார்ந்த இந்தியாவின் மிகப்பெரிய புதிர்ப் போட்டி கடந்த 2021ஆம் ஆண்டு செப்டம்பர் ஒன்றாம் தேதி தொடங்கப்பட்டது. மொத்தம் ரூ.3.25 கோடி பரிசுத் தொகை கொண்ட இப்போட்டி, பள்ளி செல்லும் குழந்தைகளுக்கானதாகும். இந்தப் போட்டியில் 13,502 பள்ளிகளில் இருந்து 36,299 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

சர்வதேசப் போட்டிகளில் இந்தியாவின் வெற்றியைப் பல மடங்கு உயர்த்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளில் ஒன்றாக, ‘ஒரு மாநிலம் ஒரு விளையாட்டு’ என்ற கொள்கையைக் கடைபிடிக்கும்படி, மாநில அரசுகள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு மாநிலமும், அம்மாநிலத்தில் உள்ள விளையாட்டுத் திறமையாளர்கள், இயல்பான ஆர்வம், கட்டமைப்பு வசதி ஆகியவற்றின் அடிப்படையில் ஏதேனும் ஒரு விளையாட்டுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். ஒரு விளையாட்டிற்கு



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

முக்கியத்துவம் அளிக்கும் அதே நேரத்தில், மற்ற விளையாட்டுகளைப் புறக்கணிக்கக் கூடாது என்பதும் இந்தத் திட்டத்தின் முக்கியமான அம்சமாகும். இவ்வாறு செய்வதன் மூலம், ஒரு மாநிலத்தில் இருக்கும் விளையாட்டு வளங்களை பயனுள்ள வகையில் பயன்படுத்தவும், ஒரு குறிப்பிட்ட விளையாட்டின் மீது அதிக கவனம் செலுத்தவும் முடியும்.

இந்திய விளையாட்டு மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப் பட்டு வரும் மற்றொரு முக்கிய நடவடிக்கை தீவிரமான விளையாட்டுக் கலாச்சாரத்தை உட்பொதிக்கச் செய்வது ஆகும். இந்த இலக்கை எட்டுவதற்கு உள்ளூர் அளவிலும், மாவட்ட, மாநில, தேசிய அளவிலும் விளையாட்டுப் போட்டிகளை நடத்த வேண்டியது அவசியமாகும். இளம் விளையாட்டு வீரர்கள், அவர்களின் திறன்களை வார்த்தெடுப்பதற்குப் போதிய தளங்களை ஏற்படுத்தித் தருவதற்காகவும், விளையாட்டுப் போட்டிகளில் அதிக எண்ணிக்கை யிலானவர்கள் பங்கேற்பதை உறுதி செய்வதற்காகவும், இவற்றைக் கடந்து, விளையாட்டுக் கலாச்சாரம் மற்றும் சூழல் அமைப்பை விரிவுபடுத்துவதற்காகவும் பல்வேறு நிலைகளில் அதிக அளவிலான விளையாட்டுக்களும், போட்டி யாளர்களும் தேவைப் படுகின்றனர். இத்தகைய போட்டிகள் அதிக எண்ணிக்கையில் நடத்தப்பட வேண்டியதும் அவசியமாகும். நமது பல்கலைக்கழக அமைப்பு தேசிய கல்விக் கொள்கையில் கூறப்பட்டிருப்பதைப் போன்று மாற்றியமைக்கப்படும் போது, ஒலிம்பிக் போட்டிகளில் சிறப்பாக விளையாடி சாதனை படைப்பதற்குத் தேவையான திறன் படைத்த விளையாட்டு வீரர்களை உருவாக்க முடியும். அதுமட்டுமின்றி, விளையாட்டுப் போட்டிகளின் மீதான ஆர்வத்தை அதிகரிக்கவும், நீண்ட காலத்திற்கு விளையாட்டுப் போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்கச் செய்வதற்கும் வாய்ப்பு கிடைக்கும்.

இந்திய இளைஞர்களின் விளையாட்டுத் திறன்களை வளர்த்தெடுத்து, சர்வதேசப் போட்டிகளில் அவர்கள் பதக்கம் வெல்வதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளில் அரசு கவனம் செலுத்தி வருகிறது. சர்வதேசப் போட்டிகளில் சிறப்பாகச் செயல்படுவதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் கிடைப்பதையும், சிறந்த பயிற்சி வழங்கப்படுவதையும் நாங்கள் உறுதி செய்வோம். இளம் விளையாட்டு வீரர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கும், அவர்களுக்கு உத்வேகம் அளிப்பதற்கும் முன்னாள் விளையாட்டு வீரர்கள் முன்வர வேண்டும்.

**முடிவுரை**

இன்றைய இளைஞர்கள் இந்தியாவின் எதிர்காலமாக மாறுவது ஒருபுறம் இருக்க, அவர்கள் தான் இந்தியாவின் நிகழ்காலத்திற்கு மிகவும் முக்கியமானவர்கள் ஆவர். தற்சார்புப் புத்தாக்கக் காலத்தில் புதிய யோசனைகளையும், கண்டுபிடிப்புகளையும் நிகழ்த்தக்கூடிய சக்திகள் அவர்கள் தான். ஆரோக்கியமான மற்றும் உடல் திறன்மிக்க இந்தியாவுக்கு இளமை நிறைந்த மனம், உடல், ஆவி ஆகியவை மிகவும் அவசியமாகும். தேசத்தைக் கட்டமைக்கும் பணியில் இவை தான் முக்கியப் பங்காற்றுகின்றன. கிராமப்பகுதிகளில் பணியாற்றுவதற்கு அதிக அளவிலான இளைஞர்கள் முன்வர வேண்டும். இங்கு தான் அவர்கள் உண்மையான இந்தியாவையும், அதன் பிரச்சினைகளையும் அறிந்துகொள்ள முடியும். இளைஞர்கள் தான் சமூகத்தின் முற்போக்கான பிரிவைப் பிரதி நிதித்துவப்படுத்துகின்றனர். புதிய இந்தியா என்ற தொலைநோக்குப் பார்வையை சாத்தியமாக்குவதற்கான மாற்றங்களைச் செய்வதில் அவர்கள் தான் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றனர். இளைஞர்கள் தங்களின் கடமைகள் குறித்து மிகுந்த கவனத்துடன் இருப்பது மட்டுமின்றி, இந்திய விடுதலையின் 75ஆவது ஆண்டைக் கொண்டாடி வரும் இந்த வேளையில், தேசத்தைக் கட்டமைப்பதற்குப் பங்களிக்கவும் வேண்டும்.

ஜி20 நாடுகள் அமைப்பின் தலைமைப் பதவி என்ற மிகப்பெரிய கௌரவத்தை இந்த ஆண்டு (2022) இந்தியா ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், இந்திய இளைஞர்கள் தங்களின் திறன்கள், திறமைகள், கலைகள் ஆகியவற்றை வெளிப்படுத்துவதற்கும், நாட்டிற்கு நன்மை செய்வதற்கான தங்களின் உறுதிப்பாட்டையும், நம்பிக்கையையும் வெளிப்படுத்துவதற்கும் இதுதான் சரியான தருணமாகும்.

---

**– அனுராக்சிங் தாக்குர்,**

மத்திய அமைச்சர், இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு, செய்தி மற்றும் ஒலிபரப்புத்துறை, புதுதில்லி



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



# டிஜிட்டல் பொருளாதாரத்தை வடிவமைத்தல்

– பாலேந்து ஷர்மா தாதீஜ்

**டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டில் மாபெரும் வளர்ச்சியையும், விரிவாக்கத்தையும் இந்தியா சாதித்து வருகிறது. புதிய தொழில்நுட்பங்களான செயற்கை நுண்ணறிவுத் திறன் மற்றும் மேகக்கணினித் தொழில்நுட்பங்களால் இந்திய டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் பயன்பாடு வலுப்படுத்தப்பட்டிருக்கிறது. இத்தகைய தொழில்நுட்பங்களின் மிகப்பெரும்பான்மையான பயன்பாட்டிற்கு காரணம் இளைஞர்கள் தான். டிஜிட்டல் நுகர்வு அதிகரிப்பதற்கு இளைஞர்கள் காரணமாக இருப்பது மட்டுமின்றி, டிஜிட்டல் புத்தாக்கங்களுக்கும், மேம்பாட்டிற்கும் காரணமாகவும் உள்ளனர். அவர்கள் தான் தொழில்நுட்பத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றனர். இதுதான் உலகளாவிய நிகழ்வு என்றாலும் கூட, ஒட்டுமொத்த மக்கள் தொகையில் 35 வயதுக்கும் குறைவாக இருப்பவர்கள் மிகவும் அதிமான எண்ணிக்கையில் (65 விழுக்காட்டினர்) வாழும் இந்தியாவுக்கும் இது சமமாகப் பொருந்தும்.**




1980ஆம் ஆண்டில் தொடங்கி, 2000ஆவது ஆண்டு வரையிலான காலத்தில் பிறந்தவர்கள் புத்தாயிரமாண்டு குழந்தைகள் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் தொழில்நுட்பத்துடன் மிகத் தீவிரமாக இணைந்திருக்கிறார்கள் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. மிக வேகமாக மாறிவரும் தொழில்நுட்பக் காலத்தில் பிறந்து வளர்ந்த அவர்கள், டிஜிட்டல்மயத்தின் சொந்தக்காரர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். தொழில்நுட்பத்துடனான அவர்களின் உறவானது அவர்களுக்கு இரண்டாவது இயல்பு ஆகும். அவர்கள் திறன் பேசிகள், டேப்லட்டுகள், கணினிகள், உடலில் பொருத்திக்கொள்ளக் கூடிய டிஜிட்டல் கருவிகள், இணையதளம், சமூக ஊடகங்கள், செயற்கை நுண்ணறிவு மற்றும் இணையதள லிங்கோ ஆகியவற்றால் சூழப்பட்ட சூழலில் வளர்ந்தவர்கள் ஆவர். புத்தாயிரமாண்டு குழந்தைகளின் வாழ்வில் டிஜிட்டல் தொழில்நுட்பம் என்பது இயல்பான ஓர் அங்கம் என்பதையும், அவற்றை அவர்கள் மிகவும் எளிதாகப் பயன்படுத்துவார்கள் என்பதையும் சொல்லித் தெரியவேண்டியது இல்லை. இந்த வயது தான் மக்களின் தனிப்பட்ட வாழ்க்கையிலும், தொழில்நுட்ப வாழ்க்கையிலும் மிகவும் அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தும் காரணியாகும். எனவே தொழில்நுட்பங்களை அடிப்படையாகக் கொண்ட ஏராளமான விஷயங்களை உருவாக்கக் கூடிய இளைஞர்கள் ஏராளமான தொழில்நுட்பப் புத்தாக்கங்களைக் கண்டுபிடித்து வருவதை நாம் பார்த்து வருகிறோம்.

அதன் பயனாக, சில இளைஞர்கள் தங்களின் தகவல் தொடர்புக்காக தொழில்நுட்பங்களை மிக அதிக அளவில் சார்ந்திருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் தகவல் தொடர்புக்காக எப்போதும் சமூக ஊடகங்களையே சார்ந்திருக்கின்றனர் என்பது இயல்பான ஒன்றாகிவிட்டது. தொலைபேசி அழைப்புகள், மின்னஞ்சல்கள், நேருக்கு நேர் சந்தித்து உரையாடுதல்



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

ஆகியவற்றுக்கு மாற்றாக, ட்வீட் செய்தல், செய்திகளை அனுப்புதல் ஆகியவற்றின் மூலமாகவே உரையாடி வருகின்றனர். இது மிகவும் சவாலான ஒன்றானது என்றாலும் கூட, புத்தாயிரமாண்டு குழந்தைகள் இவற்றை மிகவும் எளிதாக ஏற்றுக் கொள்கின்றனர். மிகவும் வசதியாகக் கையாளுகின்றனர். புத்தாயிரமாண்டு குழந்தைகள் தங்களின் வாழ்க்கையை எவ்வாறு வாழ்கின்றனர் என்பதும் தனித்துவமான ஒன்றாகும். தங்களின் பெற்றோருடைய தலைமுறையைப் போல் அல்லாமல், தங்களது பணிக்கும், தனிப்பட்ட வாழ்க்கைக்கும் இடையிலான சமநிலையை உறுதி செய்வதற்கு அவர்கள் அதிக அழுத்தம் தருகின்றனர். நிதிநிலைத்தன்மை மட்டுமின்றி, தங்களது பணி சார்ந்த எதிர்பார்ப்புகள் மற்றும் ஆசைகளையும் நிறைவேற்றிக் கொள்ள விரும்புகின்றனர். அதன் பயனாக அவர்கள் மற்றும் பயன் சார்ந்த உணர்வுடன் உத்வேகத்துடன் இயங்குகின்றனர்.

**இந்திய இளைஞர்களின் வெற்றி**

இன்றைய இந்திய இளைஞர்களின் இலட்சியங்கள், பழக்க வழக்கங்கள், பணிமுறைகள், திறமைகள், கனவுகள், திறன்கள் ஆகியவை இன்றைய தொழில்நுட்ப உலகில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இன்றைய இணையதள காலத்தில் உள்ள பெரும்பான்மையான நிறுவனங்கள் 35 வயதுக்கும் குறைவான இலட்சிய வேட்கை கொண்ட இளைஞர்களால் தொடங்கப்பட்டவையாகும். அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகளிலும் கூட, புகழ்பெற்ற தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் தலைமைப் பதவிகளை இந்திய இளைஞர்கள் எட்டிப் பிடித்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் புத்தொழில் நிறுவனப் புரட்சி நடைபெற்று வருகிறது. புதிய சிந்தனைகளை ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருப்பது மட்டுமின்றி, வெற்றியை அடைவதற்காக கடுமையாக உழைக்கவும், சிக்கல்களை எதிர்கொள்ளவும் தயாராக இருக்கும் இளைய தலைமுறையினர் தான் புத்தொழில் நிறுவனப் புரட்சிக்கு உத்வேகம் கொடுக்கின்றனர். அண்மையில் ஊடகங்களில் வெளிவந்த ஒரு செய்தி வியப்பு அளிப்பதாக உள்ளது. ஐஐடிகள் எனப்படும் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்களில் படித்து முடித்து வெளிவரும் இளைஞர்களில் உடனடி வேலைவாய்ப்புகளுக்கான நடைமுறைகளில் பங்கேற்காமல், குடிமைப்பணித் தேர்வுகளை எழுத விரும்பும் அல்லது தங்களது புத்தொழில் நிறுவனத்தைத் தொடங்க விரும்புவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்பது தான் அந்தச் செய்தி ஆகும். பெரு நிறுவனங்கள் வழங்கும் மிக அதிக ஊதியத்துடனான வேலைவாய்ப்பை நிராகரிக்கும் அவர்கள், சிறிய புத்தொழில் நிறுவனங்களில் பணிக்குச் சேருகின்றனர். அதற்குக் காரணம் ஓராண்டு அல்லது ஈராண்டு அந்த நிறுவனங்களில் பணியாற்றிவிட்டு, தங்களுக்கென சொந்தமாக புத்தொழில் நிறுவனம் ஒன்றை தொடங்குவதற்கு தயாராக வேண்டும் என்பதுதான். அதே போல், ஐஐடிக்களில் படித்தவர்களில் பலர் வேலைவாய்ப்பு பெறும் வசதியை சிறிது காலத்திற்குத் தள்ளி வைக்கின்றனர். இடைப்பட்ட காலத்தில் உயர் கல்வி கற்கலாம் அல்லது தங்களுக்கென சொந்தமாக புத்தொழில் நிறுவனம் ஒன்றைத் தொடங்கலாம் என்பது தான் அதற்குக் காரணமாகும். வேலைவாய்ப்பு பெறும் வசதியை ஒத்திவைக்கும் இளைஞர்கள் அடுத்த இரு ஆண்டுகளில் ஒருமுறை வேலைவாய்ப்புக்கான நடைமுறையில் பங்கேற்கும் வசதியை ஐஐடிக்கள் வழங்குகின்றன.

இன்றைய இளைஞர்கள் இவ்வாறு தான் சிந்திக்கின்றனர். இன்றைய இளைஞர்களின் மனநிலையை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது, இந்தியாவில் இன்றைய நிலையில், தலா 100 கோடி அமெரிக்க டாலர் மதிப்பு கொண்ட யூனிகார்ன் புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 81 ஆக அதிகரித்திருக்கிறது என்பதும், அவற்றின் மொத்த மதிப்பு 27,400 கோடி அமெரிக்க டாலர் என்பதும் வியப்பளிக்கவில்லை. யூனிகார்ன் புத்தொழில் நிறுவனங்கள் என்றால் 100 கோடி அமெரிக்க டாலர், அதாவது இந்திய மதிப்பில் 8 ஆயிரம் கோடி மதிப்பு கொண்ட புத்தொழில் நிறுவனங்கள் என்று பொருள். இந்தியாவில் புத்தொழில் நிறுவனப்புரட்சி இந்தத் தகவலுக்குப் பிறகும் உங்களுக்கு ஆச்சரியம் அளிக்கவில்லை என்றால், இன்னொரு உண்மையைப் புரிந்துகொள்ளுங்கள். கைவல்யா ஒரா என்ற சிறுவன், அவரது ஒன்பது வயதில் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள புத்தொழில் நிறுவனத்தைத் தொடங்கியுள்ளார் என்பது தான் அந்த உண்மை ஆகும். 10 ஆண்டுகளுக்கு முன்பு இதே மதிப்பு கொண்ட புத்தொழில் நிறுவனத்தைத் தொடங்கியவரின் வயது 37 ஆகும். இப்போது அதே



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

மதிப்பு கொண்ட புத்தொழில் நிறுவனத்தை ஒன்பது வயது சிறுவன் தொடங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.

மார்க் சக்கர்பெர்க் அவரது 19ஆவது வயதில் ஹார்வர்டில் முகநூல் நிறுவனத்தைத் தொடங்கினார். அதே போல், கூகுள் நிறுவனத்தை 1998ஆம் ஆண்டில் தொடங்கிய போது, அதன் நிறுவனர்களான லாரிபேஜ், செர்ஜி பிரின் ஆகியோரின் வயது 25 ஆகும். அவர்கள் இருவரும் கலிபோர்னியாவில் உள்ள ஸ்டேன்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் படித்துக் கொண்டிருந்த போது தான் கூகுள் நிறுவனத்தைத் தொடங்கினர். டெஸ்லா நிறுவனத்தின் நிறுவனர் எலான் மஸ்க், 1995ஆம் ஆண்டு அவரது முதல் நிறுவனத்தைத் தொடங்கிய போது, அவரது வயது 20களின் தொடக்கத்தில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய தொழில்நுட்பத் துறையில் புகழ்பெற்ற பெயர்களில் இவை சிலவாகும். இந்தப் பெயர்கள் அதிகாரத்தையும், சொத்துக்களையும் எதிரொலிக்கின்றன. இந்தியாவிலும் தங்களது 20களின் தொடக்கத்திலும், 30களின் தொடக்கத்திலும் மிகச் சிறந்த புத்தொழில் நிறுவனங்களைத் தொடங்கியவர்கள் பலர் உள்ளனர். அவ்வாறு தொடங்கப்பட்ட நிறுவனங்களில் சொமாட்டோ, ஃபிலிப்கார்ட், இன்மோபி, ரெட் பஸ், சேரோரா, அப்ஸ்டாக், ஓயோ ரூம்ஸ், லென்ஸ் கார்ட், ஓலா கேப்ஸ், பிசிக்ஸ் வல்லா, மாமாஎர்த் போன்ற இந்தியாவில் தொடங்கப்பட்ட புத்தொழில் நிறுவனங்கள் இன்று அனைவருக்கும் தெரிந்த பெயர்களாக புகழ்பெற்றுள்ளன. இந்தியாவில் புத்தொழில் நிறுவனப் புரட்சி எந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ளது என்பதை 2022ஆம் ஆண்டில் 30 வயதுக்குள் புத்தொழில் நிறுவனம் தொடங்கியவர்கள் குறித்த ஃபோர்ப்ஸ் இதழின் பட்டியலைப் பார்த்து அறிந்துகொள்ளலாம். இந்தப் பட்டியலில் மொத்தம் 22 நாடுகள் மற்றும் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் இடம் பெற்றுள்ளனர். இந்தப் பட்டியலில் மொத்தம் 61 நிறுவனங்களுடன் இந்தியா முதலிடம் வகிக்கிறது.

**உள்ளடக்க உருவாக்கத்தின் தலைவர்கள்**

உள்ளடக்க உருவாக்கம் என்பது புகழ்பெற்று வரும் முக்கியமான மற்றொரு துறை ஆகும். இந்தத் துறையில் ஏராளமான இளைஞர்கள் பங்காற்றி வருவதை அறிய முடியும். இந்தியாவின் முன்னணியில் உள்ள 100 டிஜிட்டல் உள்ளடக்கப் புத்தொழில் நிறுவனங்களின் பட்டியலை ஃபோர்ப்ஸ் இதழ் அண்மையில் வெளியிட்டது. அந்தப் பட்டியலில் பெரும்பான்மையானவர்கள் இளைஞர்கள் தான் என்பது எல்லா வகையிலும் நமக்கு ஆச்சரியம் அளிக்கிறது. அந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ள புத்தொழில் நிறுவனங்களை உருவாக்கியவர்களின் பெயர்களில் பல அனைவராலும் அறியப்பட்டவை ஆகும். கேரிமினாட்டி, நிக்கில் ஷர்மா, அபிஷேக் அப்மன்யூ, கோமல் பாண்டே, அன்மோல் ஜெய்ஷ்வால், நிர்மல் பிள்ளை, ஸ்லோக் ஸ்ரீவஸ்தவா, கிருத்திகா குரானா, ஆசிஷ் சஞ்சலானி, புவன் பாம், குஷா கபிலா, பிஜக்தா கோலி, தன்மாய் பட் ஆகியவை குறிப்பிடத்தக்க சில பெயர்கள் ஆகும். இவர்களில் பலர் தங்களைத் தாங்களே நிறுவனமாக மாற்றிக் கொண்டிருக்கின்றனர். மேலும் பலர் ஏராளமான வேலைவாய்ப்புகளை உருவாக்கியது மட்டுமின்றி, புத்தொழில் நிறுவனங்களைத் தொடங்க வேண்டும் என்ற உத்வேகத்தை இளைஞர்களுக்கு ஏற்படுத்தியுள்ளனர். யூடியூப், இஸ்டாகிராம், முகநூல் போன்ற புகழ்பெற்ற தளங்கள், இந்திய இளைஞர்கள் தங்களை வெளிப்படுத்துவதற்கும், தரமான உள்ளடக்கத்தை வழங்கி பணம் ஈட்டுவதற்கும் உதவியாக உள்ளனர்.

இன்றைய இளைஞர்களிடம் காணப்படும் அதிக ஆர்வம் காரணமாக, உள்ளடக்கங்களை உருவாக்குவதன் மூலம் உருவாக்கப்படும் பொருளாதாரம் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்திருக்கிறது. மிகக் குறுகிய நேரம் கொண்ட வீடியோக்களை மக்கள் பார்ப்பது அதிகரித்திருப்பது தான் இதற்குக் காரணம் ஆகும். அதன் பயனாக இந்தியாவில் குறைந்தது 8 கோடி பேர் உள்ளடக்கங்களை உருவாக்குபவர்களாகவும், அறிவுசார் வல்லுநர்களாகவும் உருவெடுத்துள்ளனர். ஆனாலும், வளர்ந்து வரும் இத்தொழிலில், ஒட்டுமொத்தமாக ஈடுபட்டிருப்பவர்கள் ஒரு சிறிய எண்ணிக்கையிலானவர்கள் தான், அதாவது 1.5 இலட்சம் பேர் தான் தங்களின் சேவைகளை வெற்றிகரமாகப் பயன்படுத்தி வருவாய் ஈட்டுகின்றனர். இது தொடர்பாக ஆய்வு செய்த நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, இத்தொழிலில் ஈடுபட்டுள்ள வல்லுநர்கள், தங்களின் உள்ளடக்கங்களைக் கொண்டு, மாதத்திற்கு 15 ஆயிரம் ரூபாய் முதல் 3 இலட்சம் ரூபாய் வரை வருமானம் ஈட்ட முடியும்



https://www.tnpscthervuthunaivan.com/

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களின் உள்ளடக்கம் எவ்வளவு பேரைச் சென்றடைகிறது, எந்தெந்தத் தளங்களை அவர்கள் பயன்படுத்துகிறார்கள் என்பதைப் பொறுத்து அவர்களின் வருவாய் அமையும் என்றும் அந்த ஆய்வறிக்கை கூறுகிறது. உள்ளடக்கங்களை உருவாக்கும் துறையில் ஈடுபட்டுள்ள எட்டு கோடி பேரில் வீடியோக்களை ஒலிபரப்புபவர்கள், உள்ளடக்கங்களை உருவாக்குபவர்கள், சமூக ஊடகங்களில் தாக்கங்களை ஏற்படுத்துபவர்கள், ஓடிடி தளங்களின் படைப்பாளிகள், பிளாக்கர்கள், பொருள்களை உருவாக்குபவர்கள், சமுதாயங்களைக் கட்டமைப்பவர்கள் என பல்வேறு தரப்பினர் உள்ளனர். இவை அனைத்துமே வாய்ப்புகளை உருவாக்கித் தருவதற்கான புதிய தளங்கள் ஆகும். கடந்த சில ஆண்டுகளாக இவை இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்துள்ளன.

தொழில்நுட்பத் துறையில் பாரம்பரியமான மென்பொருள்களை உருவாக்கும் பணிகளைத் தவிர, ஆன்லைன் விளையாட்டுகள், அவற்றை உருவாக்குதல் போன்ற புதிய வாய்ப்புகளும் இளைஞர்களைப் பெருமளவில் கவர்ந்திழுத்து வருகின்றன. பிபிஓ எனப்படும் அயல்பணி வணிகம் உள்ளிட்ட தகவல் தொழில்நுட்பச் சேவைகளை வழங்கும் துறை மிக அதிக அளவில் இளைஞர்களால் நிரம்பியிருக்கிறது. பெருநகரங்கள், மாநகரங்கள் மட்டுமின்றி, புனே, இந்து போன்ற இரண்டாம் நிலை நகரங்கள் கூட இத்தகைய வாய்ப்புகள் பெருமளவில் கிடைக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

**ஜிக் பணிகள்** (Gig Jobs)

டிஜிட்டல் பொருளாதாரம் குறித்து விவாதிக்கும் போது ஜிக் பொருளாதாரம் பற்றி குறிப்பிடாமல் இருக்க முடியாது. இன்றைய இளைஞர்களால் பெருமளவில் பயன்படுத்திக் கொள்ளப்படும் புதிய வகை பணிகளை உள்ளடக்கியது தான் ஜிக் பொருளாதாரம் ஆகும். சுதந்திரமான ஒப்பந்தப் பணியாளர்கள், ஆன்லைன் தளப் பணியாளர்கள், ஒப்பந்த நிறுவன ஊழியர்கள், அழைப்பின் அடிப்படையில் பணியாற்றும் பணியாளர்கள், தற்காலிக ஊழியர்கள் ஆகியோர் தான் ஜிக் பணியாளர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். தேவைப்படும் போது அழைத்து தங்களின் வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கும் நிறுவனங்களுடன் இவர்கள் முறையான ஒப்பந்தத்தைச் செய்து கொள்வார்கள். இந்தத் துறை இந்தியாவில் வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது. இத்துறையில் இளைஞர்கள் மிகப்பெரிய அளவில் இணைந்து பணியாற்றி வருகின்றனர். 16 வயது முதல் 18 வயது வரை உள்ள இளைஞர்கள் இடையே ஜிக் பணிகளில் சேரும் ஆர்வம் 750 விழுக்காடு அதிகரித்திருப்பதாக அண்மையில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியில் தெரிய வந்திருக்கிறது. அதன் அடிப்படையில் பார்க்கும் போது ஜிக் பொருளாதாரம் மிகவும் முக்கியமானதாகும்.

நிதிஆயோக் அமைப்பு வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின்படி, 2020–21ஆம் ஆண்டில் சுமார் 77 இலட்சம் தனி நபர்கள் ஜிக் பொருளாதாரத்தில் பணியாற்றி வருகின்றனர். 2029–30ஆம் ஆண்டுக்குள் ஜிக் பணியாளர்களின் எண்ணிக்கை 2.35 கோடியாக அதிகரிக்கும் என்று நிதிஆயோக் அமைப்பு கணித்திருக்கிறது. இன்றைய நிலையில், ஜிக் பணிகளில் ஈடுபடுவோரில் 47 விழுக்காட்டினர் நடுத்தரத் திறன் கொண்டவர்கள் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளனர். 22 விழுக்காட்டினர் அதிகத் திறன் கொண்டவர்கள் என்றும், 31 விழுக்காட்டினர் குறைந்த திறன் கொண்டவர்கள் என்றும் வகைப்படுத்தப்பட்டிருக்கின்றனர். நடுத்தரத் திறன் கொண்ட பணியாளர்களின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து வருவதாகவும், அதிகத் திறன் மற்றும் குறைந்த திறன் கொண்ட பணியாளர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவதாகவும் ஆய்வில் தெரிய வந்திருக்கிறது. 2030ஆம் ஆண்டு வாக்கில் நடுத்தரத்திறமை கொண்ட ஜிக் பணிகள் இருக்கும் என்றும், பிற திறன் கொண்ட ஜிக் பணிகள் இன்னும் முக்கியத்துவம் கொண்டவையாக மாறும் என்றும் கணிக்கப்பட்டிருக்கிறது.

இந்திய இளைஞர்கள் பல்வேறு வகையான வேலைவாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கு தயாராக இருக்கின்றனர் என்பதால், ஜிக் பணிகளுக்கான இந்திய இளைஞர்களின் வரவேற்பு அதிகரித்திருக்கிறது. ஆன்லைனில் கற்றுத் தருதல், கிராபிக் வடிவமைப்பாளர்கள், வலைத்தள வடிவமைப்பாளர்கள், டெலிகாலர்கள், களவிற்பனைப் பணியாளர்கள், டிஜிட்டல் மார்க்கெட்டர்ஸ், வணிக மேம்பாட்டு வல்லுநர்கள், தேடு

https://www.tnpscthervuthunaivan.com/

பொறி வல்லுநர்கள், பிராண்ட் புரமோட்டர்கள், வீடியோ எடிட்டர்கள் போன்றவை இளைஞர்களிடம் வரவேற்பைப் பெற்றுள்ள சில ஜிக் பணிகள் ஆகும். இந்தப் பணிகள் மிகவும் வசதியாகவும், வீடுகளில் இருந்தபடியே செய்யும் வகையிலும் இருப்பதால், அதற்கு ஏற்ற வகையில் இளைஞர்கள் தங்களின் வழக்கமான பணிகளை வடிவமைத்துக்கொள்ள முடிகிறது. பூகோள எல்லைகளைக் கடந்து இத்தகைய வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு இணையதளம் பெரும் உதவியாக உள்ளது. அந்த வகையில், வேலைவாய்ப்புச் சந்தையில் இணையதளம் பெரும் புரட்சியை நிகழ்த்தி இருக்கிறது. மேற்குறிப்பிடப்பட்டதைப் போன்று இணையதளம் உள்ளிட்ட டிஜிட்டல் தொழில்நுட்பங்களை அவற்றின் விரிவான வடிவங்களில் இன்றைய இளைஞர்கள் மிகவும் எளிதாகப் பயன்படுத்துகின்றனர்.

### தேவை உருவாக்கமும் அறிவியல் கல்வியும்

வாய்ப்புகளை உருவாக்குதல், பொருள்களைத் தயாரித்தல், சேவைகளை வழங்குதல் ஆகியவற்றில் இன்றைய இளைஞர் சமுதாயம் மிக முக்கியமான பங்கினை ஆற்றுகிறது. அதே நேரத்தில், டிஜிட்டல் பொருள்கள் மற்றும் சேவைகளின் நுகர்வு அதிகரிப்பதற்கும் இளைஞர் சமுதாயம் தான் காரணமாக உள்ளது. தொழில்நுட்பத் துறையில் இந்தியாவின் மிகப்பெரிய வெற்றிக்கு இதுதான் மிக முக்கியக் காரணம் ஆகும். மிக அதிக அளவில் இளைஞர்களைக் கொண்ட இந்தியா, டிஜிட்டல் பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான மிகச் சிறந்த உள்ளூர்ச் சந்தையை உருவாக்க முடியும். இந்தியாவில் டிஜிட்டல் உள்ளடக்கம் மற்றும் அவை சார்ந்த சேவைகளுக்கு 100 கோடிக்கும் கூடுதலான தொலைத்தொடர்பு சந்தாதாரர்கள் உள்ள நிலையில், அவர்களுக்கான உள்ளடக்கத் தேவை எவ்வளவு இருக்கும் என்பதை ஒருவரால் எளிதாகக் கற்பனை செய்ய முடியும். அதுமட்டுமின்றி, ஓர் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு நிறுவனம் அண்மையில் வெளியிட்ட ஆய்வு அறிக்கையின்படி, இந்திய இளைஞர்கள் ஒவ்வொரு நாளும் சராசரியாக, ஸ்மார்ட் போன்களைப் பயன்படுத்தும் நேரம் 4.7 மணி நேரம் என தெரியவந்திருக்கிறது. இவற்றைக் கொண்டு பார்க்கும் போது, இந்தியாவில் டிஜிட்டல் உள்ளடக்கங்களின் தேவை மிகப் பெரிய அளவில் அதிகரித்து வருவதை அறிய முடியும். இவை அனைத்தும் 2021ஆம் ஆண்டின் புள்ளி விவரங்கள் ஆகும். இந்திய இளைஞர்கள் திறன்மிகு கைபேசிகளைப் பயன்படுத்தும் நேரம் 2019ஆம் ஆண்டில் தினசரி 3.7 மணி நேரமாகவும், 2020ஆம் ஆண்டில் 4.5 மணி நேரமாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது. இளைஞர்கள் ஸ்மார்ட் போன்களைப் பயன்படுத்தும் நேரத்தில் பெரும்பாலான நேரம் தகவல் தொடர்புக்காகவும், பொழுதுபோக்குக்காகவும், சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்காகவுமே செலவிடப்படுகிறது. இந்திய தொழில்நுட்பத் துறை வளர்ச்சியை இந்தப் போக்குதான் ஊக்குவிக்கிறது.

இந்தியாவின் வளர்ச்சிக்கும், அதன் இளைஞர்களின் வளர்ச்சிக்கும் கல்வி மிகவும் முக்கியமான அம்சமாகும். இந்திய இளைஞர்கள் அறிவியல், பொறியியல் படிப்புகளில் அதிக அளவில் சேர்ந்து படிக்கத் தொடங்கி இருப்பது மனநிறைவு அளிக்கிறது. இந்தியாவில் உள்ள பொறியியல் கல்லூரிகள் ஒவ்வொரு ஆண்டும் 15 இலட்சம் பட்டதாரிகளை பயிற்றுவித்து அனுப்புகின்றன. அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதக் கல்விகளை மாணவர்களிடையே பிரபலப்படுத்தும் பணியை அரசு தொடர்ந்து செய்து வருகிறது. திறன் பெற்ற தொழில்நுட்பப் பணியாளர்களை அதிக அளவில் உருவாக்க வேண்டும் என்பது தான் இதற்கான காரணம் ஆகும். இத்தகைய பணியாளர்களை உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பணியில் அமர்த்தலாம். அதன் மூலம் இந்தியாவின் பொருளாதாரத்தை வலுப்படுத்தலாம் என்பதால் தான் இத்தகைய கல்விக்கு அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது.

2020ஆம் ஆண்டில் தொடங்கிய பத்தாண்டை தொழில்நுட்பப் பத்தாண்டாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் அடையாளப்படுத்தி இருக்கிறார். இந்தியாவின் டிஜிட்டல் பொருளாதார வளர்ச்சிக்கு இந்திய இளைஞர்கள் இன்னும் வலிமையான பங்களிப்பைச் செலுத்த வேண்டும் என்று இந்த நாடு எதிர்பார்க்கிறது. உலகின் முன்னணிப் பொருளாதாரங்களில் ஒன்றாக உருவெடுக்க வேண்டும் என்ற இந்தியாவின் இலட்சியத்தை அடைவதை உறுதி செய்வதற்கு தொழில்நுட்பம் குறித்து நன்கு அறிந்த, தொழில்நுட்பத்திறன் பெற்ற, தொழில்நுட்பத்தின் மீது மிகுந்த நம்பிக்கை கொண்ட இளைஞர் சக்தியால் முடியும்.

---

**-பாலேந்து ஷர்மா தாதீஜ்,**
டிஜிட்டல் தொழில்நுட்ப வல்லுநர்



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



# இளைஞர் ஆற்றலின் மேன்மையைப் போற்றுதல்

– பரத் லால்

சிறந்த உலகத்திற்கு இளைஞர்களே வழிகாட்டுகிறார்கள் என்று ரிக் வேதம் கூறுகிறது. இந்திய மக்கள்தொகையில் பெரும்பகுதியினர் இளைஞர்களாவர். இந்தியாவின் பாரம்பாரியத்தை பல வழித்தடங்களில் முன்னெடுத்துச் சென்று நல்ல எதிர்காலத்தை உருவாக்க மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றுப்பாதையில் இளைஞர்களே முன்னணியில் உள்ளனர். அதிகாரமிக்க எதிர்காலத்தை உருவாக்க இளைஞர்களுக்கு அதிகாரமளிக்க வேண்டும் என்று பிரதம மந்திரி திரு. நரேந்திர மோடி அவர்களின் 'இந்தியாவின் தொலைநோக்கு @2047' கூறுகிறது.



மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி அவர்கள் எளிதாக வாழ எல்லோருக்கும் வீடு, சுத்தமான குடிநீர், கிராமப்புறங்களில் மின்சாரம், சமையல் எரிவாயு, வலைத்தளம், தொலைத்தொடர்பு வசதிகள், மருத்துவக் காப்பீடு, சாலைப் போக்குவரத்து, தரமான கல்வி மற்றும் தொழில்சார் பயிற்சிகளை இந்திய அரசு எல்லா குடிமக்களுக்கும் அளித்து, மக்கள் தங்களுடைய எதிர்காலத்தில் கவனத்தைச் செலுத்தி தங்களுடைய முழு ஆற்றலையும் பெற பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இன்று, இந்தியாவின் மக்கள்தொகையில் சிறப்பாகப் பணிசெய்யும் வயதான 15 முதல் 64 ஆண்டுகள் வரை உள்ளவர்களின் எண்ணிக்கை சுமார் 80 கோடியாக அதாவது மொத்த மக்கள்தொகையில் 67 சதவிகிதமாக உள்ளது. 2020 முதல் 2050 வரை உள்ள ஆண்டுகள் இந்தியப் பொருளாதாரத்தின் பொற்காலம் என்று கருதப்படுகிறது. இக்காலத்தில் பெருவாரியாக உள்ள இளைஞர்களுக்கு சரியான கொள்கை அடிப்படையிலான திட்டங்களைக் கொடுத்தால் அவர்கள் இந்தியப் பொருளாதாரத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி பலமுனைத் தன்மை கொண்ட நிலைத்து நிற்கும் உயர் பொருளாதார வளர்ச்சியைக் கொடுப்பார்கள். இந்தியா இப்போது உலகச் சந்தையில் நுழைந்து மேம்பட்ட நாடுகளோடு கடுமையாகப் போட்டிப் போடுவது மட்டுமல்லாமல், புத்தாக்கம், புதியன உருவாக்கல் மற்றும் இளைஞர் ஆற்றல் ஆகியவற்றின் அடித்தளத்தோடு உலகப் பொருளாதாரத்திற்கு பெரும் பங்காற்றுகிறது.

**தொழில்நுட்ப ஆண்டுகளின் சகாப்தம்:**

ஒவ்வொரு ஆண்டும் புதிதாக 1.2 கோடி இளைஞர்கள் பணியாளர்களாக இணைவதால் அவர்கள் எல்லோருக்கும் தகுந்த வாய்ப்புகளை வழங்குவதற்கான முக்கிய பொறுப்பை அரசு ஏற்கும் அதே நேரத்தில் கல்வி, திறன்கள், தொழில் முனைவு, பொதுச்சேவைகளை மேம்படுத்துதல், உள்கட்டமைப்பு, மின்மயத் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்தல், பணியாளர்கள் பாதுகாப்பு வேற்றோடு குறிப்பாக இந்தியாவின் பொருளாதார மேம்பாடு மற்றும் நிலைத்தன்மை சார்ந்த நிலைத்து நிற்கும் சந்தை முறையை ஏற்படுத்த வலுவான சுற்றுச்சூழலை உருவாக்க வேண்டும்.



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

உலகளவில் புத்தாக்கல் நிறுவனச் சுற்றுச்சூழலில் இந்தியா மூன்றாவது இடத்தை வகிக்கிறது. உலகளவில் புதிதாக தோன்றும் புத்தாக்கல் நிறுவனங்களில் 10இல் ஒன்று இந்தியாவில் தோன்றியுள்ளது. புத்தொழில் துவங்கு இந்தியா திட்டம் மற்றும் எளிமையாக்கப்பட்ட வணிகத் திட்டங்களின் மூலம் இந்த வளர்ச்சி மிக சிறப்பானதாகும். 2014இல் புதிய புத்தாக்கல் நிறுவனங்கள் நான்கு மட்டுமே இருந்த இந்தியாவில் 2022இல் நூற்றுக்கும் மேற்பட்டவை உள்ளன, வளர்ச்சியும் அசுர வேகத்தில் உள்ளது. 2014இல் உலகளவிலான காப்புரிமைகளுக்கான 4000 விண்ணப்பங்களைப் பதிவு செய்த இந்தியா 2022இல் 15000 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து புத்தாக்கலில் வேகத்தையும், மேம்பாட்டையும் காட்டியுள்ளது. உலகளாவியப் புத்தாக்கக் குறியீட்டில் 2015இல் 81வது இடத்தில் இருந்த இந்தியா 2022இல் 40வது இடத்திற்கு உயர்ந்திருப்பது இந்தியாவின் வேகமான வளர்ச்சியைக் காட்டுகிறது.

தற்போது 56 தொழில்துறைப் பிரிவுகளில் இந்தியாவின் 656 மாவட்டங்களில் அரசு அங்கீகரித்துள்ள 76000 புதுத்தொழில் முனைவுகள் உள்ளன. அந்தத் துறைகளாவன: தகவல் தொழில்நுட்பச் சேவைகள், மருத்துவச் சேவைகள், உயிரி அறிவியல், கல்வி, தொழில்முறைச் சேவைகள், விவசாயம், உணவு ‘பானங்கள் ஆகியன. இந்தக் கொள்கைகளும், வெற்றிகளும் இந்தியா உலகத்தரத்தில் போட்டி மிக்க நாடாக விளங்குவதைக் காட்டுகிறது. அதே சமயம், இந்தியாவின் இளைஞர்களுக்கு ஊக்கமளிக்கும் சூழலையும் வழங்குகிறது. உதாரணமாக, புதிதாகத் தொழில் துவங்குபவர்களுக்கு சந்தை வணிகம் பெரிய தடையாக இருப்பதால் அரசின் இ–சந்தைத் (G-eM) தளம் தீர்வாக அமைகிறது. இந்தத் தளம் பயன்படுத்துவோருக்கு நட்பான செயல்முறைகளை வழங்கி, பொருளின் தரம் சிறந்த பொருள்கள், சேமிப்புக் கிடங்குகளின் வலைத்தொடர் மற்றும் போக்குவரத்து சார்ந்த உதவிகளையும் உறுதி செய்கிறது. நிலைத்து நிற்கும், புதியன உருவாக்கும் சுற்றுச்சூழலுக்கு மிகவும் தேவையானவை தகவல்கள், சேவைகள், வணிகப்பாதைகள், அணுகுமுறைகள், வணிகம் செய்வதற்கும் நெறிமுறைகள் கடைபிடிப்பதற்குமான கூடுதல் செலவைக் கட்டுப்படுத்தும் நிலைமைகள் கிடைக்கும் தன்மையாகும். இந்தியாவின் தொலைதூரங்களில் இருக்கும் பகுதி மக்களும், தொழில் துவங்கவும், பொருள்களை வணிகம் செய்யவும் மின்மய இந்தியா இயக்கம் எல்லோரையும் இணைக்கிறது. இந்தியாவின் தகவல் தொழில்நுட்பப் புரட்சியும், கணிணி அறிவியல் சார்ந்த தொழில்முறையாளர்களும் இந்தியச் சந்தைகள் நவீன, துடிப்பான உலகத்தரம் வாய்ந்த திறன்களுக்கு எளிதாக மாறுவதற்கு துணை செய்துள்ளன. ஆகவே, புதிதாகத் தொழில் துவங்குபவர்களுக்கு ஏற்படும் ஆபத்துக்கள் குறைந்துள்ளன.

**புதிய வேலை உருவாக்கல்:**

பன்முனை வளர்ச்சியால் இப்போது இந்தியா, உலகளவில் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக விளங்குகிறது. 2014இல் இரண்டு டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக இருந்த இந்தியா, 2019இல் மூன்று டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயர்ந்துள்ளது. 2030–31 வாக்கில் உலகளவில் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக உருவாக இலக்கு உள்ளது. இந்தியப் பொருளாதாரத்தின் பேரார்வமிக்க இந்த விரிவாக்கமும், வளர்ச்சியும் மக்கள்தொகையில் உள்ள இளைஞர்கள் சார்ந்தும், அவர்களின் பங்களிப்பையும், திறன் மேம்பாடு, விரிவாகும் வேலைவாய்ப்புகள் சந்தை மற்றும் உலகச் சந்தையை எளிதாக அணுகும் வழிமுறைகள் ஆகியவற்றாலும் வாய்ப்புகள் பன்மடங்கு உயர்ந்துள்ளன. இந்தியப் பணியாளர்களின் திறன் மேம்பாட்டை முதன்மைப்படுத்தவும் இளைஞர்களின் வேலைவாய்ப்பை அதிகரிக்கவும், அரசு திறன் இந்தியா இயக்கம், முத்ரா திட்டம், மின்மய இந்தியா, பிரதம மந்திரி கௌ‘ல் மேம்பாட்டுத்திட்டம் போன்ற பல திட்டங்களைத் துவக்கி, புதிதாக உருவாகும் பணியாளர்களுக்கு அறிவாற்றல், திறன் மற்றும் சந்தை சார்ந்த திறன்களில் வலுவான அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்திய இளைஞர்களின் துவக்கத்திறன்களை மேம்படுத்த உலகத்தரம் வாய்ந்த கல்வி நிறுவனங்களான தேசியத்திறன் பயிற்சிக்கழகங்கள் இந்தியத்திறன்கள் கல்வி நிறுவனம், பலவகையான இந்தியத் தொழில்நுட்பக்கழகங்கள், இந்திய மேலாண்மைக் கழகங்கள், இந்தியத் தொழிற்பயிற்சிக் கூடங்கள் ஆகியன நாடெங்கிலும் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் பன்முக மொழி மற்றும் பண்பாடுகளைக் கொண்ட மக்களில் 90 சதவிகிதம் பேர் முறைப்படுத்தப்படாத துறைகளில் பணியாற்றும் போது, வேலை தேடுபவர்களுக்கும், வேலைகளை உருவாக்குபவர்களுக்கும் இடையே சமநிலையை உருவாக்குவது நீண்ட காலச் சவாலாகும். இந்த இரு துறைகளிலும் ஏற்பட்டுள்ள உண்மையான வளர்ச்சியை அறிந்து கொள்ள உள்நாட்டு மொத்த உற்பத்தி மற்றும் தனிநபர் வருமானம் ஆகியவற்றோடு



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

பணியாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்புகளின் தகவல்களின் கூற்றின் படி, 2017க்கு பிறகு, மூன்று கோடிக்கும் மேற்பட்டவர்களுக்கு முறையான பணிகள் கிடைத்துள்ளன. தொழிலாளர் நலச் சட்டங்களை வரையறுத்திருப்பதன் நோக்கம் அமைப்பு சாரா பணியாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், ஓய்வூதியங்களை வழங்கவும், வேலையின்மை காலத்தில் உதவி வழங்குவதற்குமாகும்.

இரண்டாவது பெரிய அளவில் வேலைவாய்ப்புகளை வழங்கும் பொருள் உற்பத்தித் துறைகளில், பெரிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் உற்பத்தியோடு இணைந்துள்ள ஊக்கத் திட்டங்களால் சந்தைச் சூழல் மாறிவரும் நிலையில் பயனளித்துள்ளன. இதனால், புதிய வேலைவாய்ப்புக்கள் பெருக வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. பொருள் உற்பத்தித் துறைகளின் அடித்தளம் விரிவடைந்துள்ளது. இதோடு, உலகளவில் இந்தியச் சந்தையை நாடுவதும் அதனால் அதிகமான பொருள் உற்பத்தி தேவைப்படுவதும், வேலை வாய்ப்புகளும் மிகுந்து வருகின்றன. 2021–22 கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் அரசு, உற்பத்தி இணைந்த ஊக்கத் திட்டத்திற்கு ரூ.1.97 இலட்சம் கோடி வழங்கி அதனால் அப்போது ஏற்பட்ட தேவை மற்றும் பொருள் உற்பத்திக் குறைவுகள் சமாளிக்கப்பட்டு பொருள் உற்பத்தியும், வழங்கலும் நிலைத்து நிற்க உதவியாக இருந்தது.

வாழ்க்கைத்தர மேம்பாடு, எளிதான வாழ்க்கை ஆகிய அரசின் இரண்டு இலக்குகளும் இந்திய இளைஞர்களின் வாழ்க்கைத் தரத்தையும் ஆற்றல் தன்மைகளையும் மேம்படுத்துகின்றன. உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடும் இதனைப் பலமடங்கு மேம்படுத்தி அரசின் தொலைநோக்குத் திட்டங்களால் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வேலைவாய்ப்புகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. பெருநகர மெட்ரோ ரயில், ரயில்வே திட்டங்கள், சாலைகள் இணைப்பு ஆகியவற்றாலும் பல வேலைவாய்ப்புத் திட்டங்கள் மூலம் இளைஞர்களின் வாழ்வாதார வாய்ப்புகள் நாடெங்கிலும் அதிகப்படுத்தப்பட்டுள்ளன.

**எல்லோருக்கும் முழுமையான கல்வி:**

பழங்காலத்திலிருந்தே இந்தியா அறிவுசார் உலக மையமாக விளங்கி வந்துள்ளது. ஆகவே, சிறந்த கல்விமுறை மூலமே இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை நாம் நிறைவு செய்ய முடியும் என்ற அடிப்படை உண்மையை நாம் அறிந்திருக்கிறோம். ஒவ்வொரு தாயும் தன் மக்களுக்கு தரமான கல்வி வழங்க முயல்கிறார். இந்த எதிர்பார்ப்புகளை நிறைவு செய்ய கல்வித்துறையில் பெரும் மாற்றங்களைக் கொண்டு வர அரசு நவீன தலைமுறைக்கான கல்விச் சீர்திருத்தங்களை அரசு கொண்டு வந்தது. இதில் மிகவும் குறிப்பிடும்படி உள்ளது, புதிய கல்விக் கொள்கையாகும். இது இந்தியக் கல்விமுறையை மாற்றியமைத்து வருகிறது. இதன் மூலம், புதிய யுகத்திற்கான திறன்கள் அளிக்கப்பட்டு, மாணவர்கள் தங்கள் போக்கில் கற்க உதவுகிறது.

இந்த புதிய கல்விக் கொள்கையின் செயல்பாடு இந்திய இளைஞர்களை தீர்வுகளை நோக்கியும், சுறுசுறுப்பாகவும் வாழ்க்கையில் ஏற்படும் உண்மை நிலைகளை ஈடு கொடுக்கும் வகையிலும் மிகவும் சவாலான சூழ்நிலையில் செயல்படவும் வழிவகுக்கிறது. இந்தப் புதிய கல்விக்கொள்கை எழுத்தறிவையும், கணக்கு சார்ந்த திறமைகளுக்கும் ஆரம்பப் பள்ளிகளில் முன்னுரிமை அளித்து, நடுநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி வகுப்புகளிலிருந்து மாணவர்கள் பள்ளிப்படிப்பிலிருந்து விலகுவதைக் குறைக்கவும் வழி செய்கிறது. பலமுனை அணுகுமுறையும், மாணவர்களுக்குக் கல்வி மதிப்பீடுத் தொகுப்பும், பலவகையான இணைப்பு விடுப்பு வாய்ப்புகளும் உயர்கல்வியை நிலைமைக்கு ஏற்ப மாற்றிக் கொள்ளவும், வளைந்து கொடுக்கக்கூடிய தன்மையுடையதாக அமைத்துள்ளது. கூடுதலாக இந்தப் புதியக் கல்விக் கொள்கை, இளம் குழந்தைகளின் பராமரிப்பு, தாய் மொழியில் கல்வி, மதிப்பீட்டு முறைகளில் சீர்திருத்தங்கள், ஆசிரியர் பயிற்சி மற்றும் பரவலான மதிப்பீட்டு முறைகளையும் கொண்டுள்ளது.

இந்த புதிய கல்விக் கொள்கையின் கள நிலைச் சீர்திருத்தங்கள் எல்லோருக்கும் தெளிவாகத் தெரிகின்றன. மற்றொரு உதாரணமாக மருத்துவக் கல்வி முறையைக் கூறலாம். 2014இல் நாட்டில் 387 மருத்துவக் கல்லூரிகள் இருந்தன. 2022இல் 600க்கும் மேற்பட்ட மருத்துவக் கல்லூரிகள் இருந்தன, இப்போது சுமார் 50 சதவிகித அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. செயல்படும், அல்லது நிறுவப்பட்ட அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகங்களின் எண்ணிக்கையை அரசு மும்மடங்காக்கி உள்ளது. ஆகஸ்ட் 8, 2019இல் தேசிய மருத்துவ ஆணையச் சட்டம் செயல்படத் துவங்கி புதிய தேசிய மருத்துவ ஆணையம் துவக்கப்பட்டது. அது இப்போது நாட்டின் உயர் மட்ட மருத்துவக் கல்வி நெறியாளராகச் செயல்படுகிறது. தேசிய மருத்துவ ஆணையம், மருத்துவக்கல்வியில் வெளிப்படைத் தன்மையையும், பொறுப்புத் தன்மையையும் உருவாக்கியுள்ளது.



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



எந்த ஒருவரும் கல்வி பெறுவதிலிருந்து விடுபடக் கூடாது என்று இந்தக் கல்விக் கொள்கை வலியுறுத்துகிறது. பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில் பழங்குடி மக்களின் குழந்தைகள் உயர்தரக் கல்வியை பெற ஏக்லவ்யா மாதிரி தங்கிப் படிக்கும் பள்ளிகள் உருவாக்கப்பட்டுள்ளன. 2004 முதல் 2014 வரை 90 ஏக்லவ்யா மாதிரி தங்கிப் படிக்கும் பள்ளிகளுக்கு அனுமதியளிக்கப்பட்டது. 2014க்கு பிறகு, 686க்கும் மேற்பட்ட ஏக்லவ்யா மாதிரி தங்கிப் படிக்கும் பள்ளிகளுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது, முந்தைய 10 ஆண்டுகளை விட ஐந்து மடங்கு அதிகம். ஒவ்வொரு ஆண்டும் ஒரு இந்தியத் தொழில்நுட்பக் கழகம் மற்றும் ஒரு இந்திய மேலாண்மைக் கழகம் திறக்கப்பட்டு, அக்டோபர் 22 வாக்கில் நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை 723லிருந்து 1043ஆக உயர்ந்துள்ளது. இதன்படி, இந்தியாவின் எதிர்கால இளைஞர்களுக்குப் பரவலான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதைப் போலவே, நவோதயா வித்யாலயா பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன. இதன்படி, ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான கல்வி கிடைக்க தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட சிறந்த கல்வி நிறுவனங்களில் சேர பல சமயம் நிதிப் பற்றாக்குறை தடையாக அமைந்துள்ளது. மலிவான கல்விக்கடன்கள், அதிகரிக்கப்பட்டுள்ள கல்வி உதவித்தொகைத் திட்டம் குறிப்பாக பள்ளிக்கல்வி அளவில் பட்டியலின வகுப்பு மற்றும் பட்டியலின பழங்குடி மாணவர்களுக்கு கிடைத்திருப்பதால் அவர்கள் எளிதாகக் கல்வி பெற ஏதுவாகிறது. இதன் வழியாக சிறப்பாக படிக்கும் மாணவர்கள், அவர்கள் கல்வி பெறுவதினால் தங்களுடைய குடும்பங்களுக்கு எந்தவொரு இழப்பும் ஏற்படாத வகையில் கல்வி கற்கலாம்.

### எளிதாக வாழ - ஒரு புது நிகழ்வு

நவீன உள்கட்டமைப்பு வசதிகளும், தொடர் சேவைகளும் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் நல்ல முன்னேற்றத்தைக் கொண்டு வந்துள்ளன. இந்தியாவின் தொலைதூரப் பகுதிகளில் வாழும் மக்களுக்கும் தொழில் கல்வி, தொழில்பயிற்சி மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றை ஒருங்கிணைத்து புதிய தலைமுறைகளுக்கு இந்தக் கல்வியமைப்பு வழங்குகிறது. ஒவ்வொரு மேம்பாட்டுத் திட்டத்தின் அடித்தளமாகவும், எளிதாக வாழும் வசதி என்ற கொள்கையைக் கொண்டு, கோடிக்கணக்கான இளைஞர்களின் வாழ்க்கைமுறை மேம்படும் வகையில் கண்ணுக்குத் தெரியக்கூடிய சிறந்த செயல்பாடுகளை களத்தில் அரசு காட்டியுள்ளது.

2014இல் துவக்கப்பட்ட தூய்மை பாரதம் இயக்கத்தின்கீழ் 11 கோடிக்கும் மேலான வீடுகளில் கழிவறை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதைப் போலவே, உஜ்வலா திட்டத்தின்கீழ் 10 கோடி குடும்பங்களுக்கும் மேலாக புகையில்லா சமையலறை என்ற வகையில் சமையல் எரிவாயு வழங்கப்பட்டுள்ளது. தீன்தயாள் உபாத்யாய் கிராம ஜோதி திட்டம் மற்றும் சௌபாக்யா திட்டங்களின் செயல்பாட்டால் 99 சதவிகித இந்தியக் குடும்பங்களுக்கு இப்போது மின்சாரம் கிடைத்துள்ளது. இதனால் இளைஞர்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. சுத்தம் என்பது இப்போதைய இளைஞர்களின் வாழ்க்கை முறையாக உள்ளது. தூய்மை பாரதம் இயக்கம் 1.0 வெற்றிகரமாக செயல்பட்டதை அடுத்து, 1.34 இலட்சம் கிராமங்கள் திறந்தவெளிக் கழிப்பு இல்லாத பகுதிகளாக மாறியுள்ளன. இங்கு திட மற்றும் திரவக் கழிவுகள் திரட்டப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு மறுபயன்பாட்டிற்கு வந்துள்ளன. இதனால் கிராமப்புற இந்தியாவின் சுற்றுச்சூழல் மேம்பட்டதோடு அல்லாமல் பொது சுகாதார இலக்குகளும் எட்டப்பட்டுள்ளன. இளைஞர்களின் கண்ணியமும் உயர்ந்துள்ளது. கூடுதலாக ஜல்ஜீவன் இயக்கம் துவக்கப்பட்ட போது, சுமார் 3.23 கோடி கிராமப்புற அதாவது 17 சதவிகித குடும்பங்களுக்கு குழாய் வழித் தண்ணீர் இணைப்புகள் இருந்தன. இப்போது, 10.75 கோடி கிராமப்புற வீடுகளுக்கு – 56 சதவிகித வீடுகளுக்கு சுத்தமான குழாய் வழித் தண்ணீர் வழங்கப்படுகிறது. சொந்த வீடு வைத்திருப்பதால் தன்னம்பிக்கையும், ஏழ்மை அகல்வதும் ஏற்படுகின்றன. பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டத்தின்கீழ் 3 கோடிக்கும் அதிகமான வீடுகள் கட்டப்பட்டு, அவை மக்களுக்கு உறைவிடமாக இருப்பதோடு மட்டுமல்லாமல் இதனால் பல திறன்மிகு பணியாளர்களுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன.


https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/




ஜல்ஜீவன் இயக்கத்தின் செயல்பாட்டில் தொடர்முயற்சியின் காரணமாக இளைஞர்களுக்கு, குறிப்பாக கிராமப்பகுதியில் வசிப்பவர்களுக்கு திறன் மேம்பாடு வழங்கப்பட்டு கொத்தனார்களாகவும், குழாய்கள் அமைப்பவர், மின்சார இணைப்பு செய்பவர், மோட்டார்களைச் செயல்படுத்துபவர்கள் மற்றும் இயந்திர வல்லுநர்களாகவும் இவர்கள் செயல்படுகிறார்கள்.

உடான் திட்டத்தின் மூலம் தொடர்புகள் விரிவாக்கப்பட்டுள்ளதோடு விமானப் பயணத்தை பலர் பயன்படுத்தியுள்ளனர். இதனாலும், இளைஞர்களுக்குப் புதிய வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. இதனோடு நெடுஞ்சாலைகள், ரயில்வே மற்றும் நகர்ப்புறப் போக்குவரத்து வலைத்தொடர்களில் பெரும் விரிவாக்கம் ஏற்பட்டு அவை திறமையாகவும், இளைஞர்களின் செயல் திறன்களை அதிகரிக்கும் வகையிலும் அமைந்துள்ளன.

அரசு மக்களின் சுகாதாரமான வாழ்க்கை முறைக்கு மதிப்பு அளிப்பதால் இதனாலும் இளைஞர்களுக்குப் பலன்கள் கிடைத்துள்ளன. நலமான, வளமான வாழ்க்கைக்கு உடல் உறுதியும், விளையாட்டும் அடிப்படைச் செயல்களாகும். ஆகஸ்ட் 2019இல் உடல் உறுதி இந்திய இயக்கம் துவக்கப்பட்டு, இளைஞர்கள் தங்கள் உடம்பைக் கட்டுப்பாடோடு வைத்திருக்கும் மனநிலையை உருவாக்கியுள்ளது. மற்றொரு முக்கிய திட்டமாக கேலோ இந்தியா திட்டம் துவக்கப்பட்டு இளைஞர்களுக்கு அடிமட்ட அளவில் விளையாட்டுப் பண்பாடு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின்கீழ் திறமையான இளைஞர்கள் பல நிலைகளில் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு ஆண்டொன்றுக்கு நிதி உதவியாக ரூ.5 இலட்சம் வீதம் எட்டு ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

**இனிவரும் காலங்களில்**

'என்னிடம் 100 துடிப்பான இளைஞர்களைக் கொடுங்கள், நான் இந்தியாவை மாற்றிக் காட்டுகிறேன் என்று மிகப் பொருத்தமாக சுவாமி விவேகானந்தர் கூறியிருக்கிறார். இங்கு இந்திய இளைஞர்கள் கழிவு மேலாண்மை மருத்துவ சிகிச்சை, தொலைத்தொடர்பு, புதுப்பிக்கப்படக்கூடிய ஆற்றல், உணவு பதனிடுதல், செயற்கை நுண்ணறிவு மற்றும் பல துறைகளில் அதிக செலவு இல்லாத புத்தாக்கத் தீர்வுகளைஉருவாக்கி வருகிறார்கள்.

இந்தியா தன்னுடைய முழுமையான ஆற்றல்களையும், கனவுகளையும் நிறைவு செய்ய நம் இளைஞர்கள் தான் உதவி செய்ய முடியும். 2047இல் இந்தியா தன்னுடைய 100 ஆண்டு நிறைவு சுதந்திர தினத்தைக் கொண்டாடும் போது, இன்றைய இளைஞர்களின் பங்களிப்பு தான் உலகளவில் மூன்றாவது பெரிய பொருளாதாரமாகவும், மேம்பட்ட நாடாகவும் இந்தியா உயர்வதற்கு அடித்தளமாக இருக்கும். இந்த இலக்கை அடைய இளைஞர்களின் திறன்களை கல்வி, செயல்திறன், நல்ல உடல்நலம் போன்ற துறைகளில் மட்டுமல்லாமல் சகோதரத்துவம், எல்லோருடைய நல்வாழ்வு என்ற அடிப்படை பண்புகளையும் அளிப்பதற்கு அரசு பல முனைவுகளை மேற்கொண்டுள்ளது. இந்தியா தன்னுடைய விதியை மாற்றியமைக்கும் முயற்சியில் இந்த இளைஞர்களின் ஆற்றல்களையும், எதிர்பார்ப்புகளையும் பயன்படுத்தும் வண்ணம் தொடர் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

**–பரத் லால்,**
தலைமை இயக்குநர்,
நல் ஆளுமைக்கான
தேசிய மையம், இந்திய அரசு


https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



# தகுதியான இந்தியா : நலமான எதிர்காலத்தை நோக்கி

– ரஷி சர்மா
புரபி பட்டாநாயக்

நிலைத்து நிற்கும் மேம்பாட்டிற்கு விளையாட்டுத் துறை மிக முக்கியமான பங்காற்றுகிறது. இதன் மூலம் நல்வாழ்வு, கல்வி, சமூக உள்ளடக்கம், சகிப்புத் தன்மை, பிறரை மதித்துப் போற்றுதல் ஆகிய இலக்குகளை நாம் எளிதாக அடைய முடியும். பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் தனிநபர்களுக்கும் சமூகங்களுக்கும் விளையாட்டு அதிகாரமளிக்கிறது. குழந்தைகளுக்கும், பதின்மவயதினருக்கும் சிறந்த உடற்பயிற்சியையும் அளிக்கிறது.

இன்று நம் உலகம் என்றுமில்லாத அளவிற்கு இணைக்கப்பட்டுள்ளது. உலகளாவிய விளையாட்டுக்கள் இதில் பங்குபெறும் அனைவரையும் இணைக்கும் மிக வலுவான வலைத்தொடராக விளங்கி அனைவரும் நீண்டகால வளர்ச்சிக்கான விருப்பத்தில் அவர்கள் இணைந்துள்ளனர்.



விளையாட்டுக்கள் மனிதர்களின் உடல் நலத்தையும், மனநலத்தையும் மேம்படுத்தி அறிவாற்றலை வளர்ப்பதால் அதனை கல்வியின் ஒரு பகுதியாக இணைப்பது என்பது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். உடற்பயிற்சிக் கல்வியையும், விளையாட்டுக்களையும் கல்விப் பாடங்களில் ஒருங்கிணைப்பதே முழுமையான கல்வியாகும். (நிலைத்து நிற்கும் மேம்பாடு, இலக்கு 4: எல்லோரையும் உள்ளடக்கிய தரமான கல்வியை எல்லோருக்கும் வழங்கி வாழ்நாள் முழுவதும் கற்கும் வாய்ப்பைப் போற்ற வேண்டும் எனக் கூறுகிறது). வகுப்பறைக்கு வெளியே விளையாட்டுகளிலும், உடற்பயிற்சிகளிலும் ஈடுபடும் மாணவர்கள் விளையாட்டுகளின் அடிப்படைத் தன்மைகளான கூட்டு முயற்சி, நியாயமான செயல்பாடு, சட்டங்களுக்கும் பிறருக்கும் மதிப்பளிப்பது, ஒத்துழைப்பு, கட்டுப்பாடு, பொறுமை ஆகியவற்றைக் கற்கிறார்கள். இந்தத் திறன்கள் சுமுகமான சமுதாயம், பண்பாடுகள் ஆகியவற்றை வளர்க்கிறது. இதனால் எதிர்காலத்தில் அவர்கள் குழுவாக அமைந்து செயல்படுவதற்கும், தொழில்முறையாகச் செயல்படுவதற்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். தனி மனித வளர்ச்சிக்கும், சமூக வளர்ச்சிக்கும் விளையாட்டுகள் மிகுந்த பயன்களை அளிப்பதால், விளையாட்டுகளில் பங்கு பெற எல்லோருக்கும் வாய்ப்பு கிடைக்கிறது.

ஒருங்கிணைந்த கல்வி சமூக அமைதியையும், செயல்பாட்டுத் திறனையும், மனிதவளத்தையும் எப்படி மேம்படுத்துகிறது



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

என்பதைப் பற்றி புதிய தேசிய கல்விக் கொள்கை 2020இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இது அல்லாமல், பாடத்திட்டங்கள், அறிவியல் மற்றும் கணக்குப் பாடங்கள் போன்றவை மட்டுமல்லாமல் அடிப்படைக் கலைகள், கைவினைகள், மனித வாழ்வியல், விளையாட்டுக்கள் ஆகியவற்றையும் உடல் உறுதியையும், மொழிகளையும், இலக்கியங்களையும், பண்பாடுகளையும், விழுமியங்களையும் அளித்து, மாணவர்கள் தங்களுடைய திறமைகளையும், ஆற்றல்களையும் வளர்த்துக் கொண்டு முழுமையான நடைமுறைக் கல்வியையும், மனநிறைவான கல்வியையும் பெற வழிவகுக்க வேண்டும்.

புதிய கல்விக் கொள்கை 2020இல் வகுப்பறைக் கல்வியோடு, விளையாட்டுகளையும் இணைத்து நம்நாட்டுப் பழைமையான விளையாட்டுகளையும், உடல் உழைப்புச் செயல்களையும் அதில் அளிக்க வேண்டும் என்று சுட்டிக் காட்டுகிறது. இதனால் மாணவர்கள் இணைந்து செயல்படுதல், தானே முனைதல், வாழ்க்கைப் பாதையைத் தாமே அமைத்துக் கொள்ளுதல், தன்னடக்கம், கூட்டுப்பணி, பொறுப்புணர்வு, குடியுரிமை ஆகிய திறமைகளை வளர்த்துக் கொள்ள முடியும். இந்தப் புதிய கல்விக் கொள்கையில் வகுப்பறை யிலேயே விளையாட்டு சார்ந்த கல்வியும் அளிக்கப்படுவதால் மாணவர்கள் உடல் தகுதி கொண்ட இந்தியா எனும் இயக்கத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் திறன்களையும், தகுதியான உடலமைப்பையும் வாழ்நாள் முழுவதும் பேணும் அணுகுமுறையை மேற்கொள்வார்கள். இந்தப் பரிந்துரைகளை கவனத்தில் கொண்டு தற்போது உருவாக்கப்பட்டு வரும் பள்ளிக் கல்விக்கான தேசியப் பாடத்திட்டச் செயல்முறையில் பள்ளிப் பாடத்திட்டங்களில் விளையாட்டுகள் மற்றும் உடற்தகுதி ஆகியவையும் சேர்க்கப்படும்.

**தகுதியான இந்தியா துவக்கம்:**

2019, ஆகஸ்ட் 29 அன்று மாண்புமிகு பிரதம மந்திரி தகுதியான இந்தியா இயக்கத்தைத் துவக்கி வைத்தது நம்முடைய அன்றாட வாழ்க்கையில் உடற்தகுதி ஓர் அங்கமாக விளங்க வேண்டும் என்று கூறியுள்ளதால் இது விளையாட்டு சார்ந்த நம் அணுகுமுறையில் ஒரு பெரும் மாற்றத்தின் அடையாளமாகப் பார்க்கப்படுகிறது. தொடர்ந்து உடற்பயிற்சி செய்வதாலும், விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதாலும், நம் உடல் நலமும், சமூக நலமும் மேம்படுகின்றன. அவை நம் உடல் தகுதியை நேரடியாக மேம்படுத்துவதோடு இளைஞர்களின் வாழ்க்கை முறையில் நல்ல பண்புகளை அளித்து அவர்கள் சுறுசுறுப்பாகவும், தொற்றா நோய்களிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளவும் இயல்கிறது. உடற்பயிற்சியால் மன நலமும், அறிவாற்றலும் வளர்கிறது என்று உலக சுகாதார அமைப்பின் பல ஆய்வுகள் தெரியப்படுத்துகின்றன.

தகுதியான இந்தியா இயக்கத்தைப் பற்றி பிரதமர் கூறும் போது இது நம் நாட்டை தகுதியான, நலமான பாதையில் எடுத்துச் செல்லும் என்று நம்பிக்கை தெரிவித்தார். இந்த இயக்கத்தின் எண்ணம் ஒவ்வொருவருடைய அன்றாட நடவடிக்கைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டு துடிப்பான செயலாற்றுதல்களை ஒரு வாழ்க்கை முறையாக அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே. இந்த இயக்கத்தின் இலக்குகளும், நோக்கங்களுமாவன:

- தகுதியான உடற்கட்டைப் பேணுவது எளிதாகவும், மகிழ்ச்சியாகவும் இயல்பாகவும் இருக்க வேண்டும்.
- இந்த உடற்தகுதிக்கும், உடல்உழைப்பு நடவடிக்கை களுக்குமாக இயக்கங்கள் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு அளிக்க வேண்டும்.
- நம் நாட்டுப் பாரம்பரிய விளையாட்டுக்களை ஊக்குவித்தல்.
- தகுதியான உடற்கட்டமைப்பு இயக்கம், ஒவ்வொரு பள்ளிக்கும், கல்லூரிக்கும், பல்கலைக்கழகத்துக்கும், பஞ் சாயத்துக்கும், கிராமத்துக்கும் எடுத்துச் செல்லப்பட வேண்டும்.
- இது சார்ந்த தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கு இந்தியக் குடிமக்களுக்கு ஒரு தளம் அமைத்து அதில் அவர்கள் தங்கள் சொந்த அனுபவங்களை பகிர்ந்து கொள்ள வைக்க வேண்டும்.

இந்த இயக்கம் நம் நாட்டை நலமான, உடற்கட்டு தகுதியான நிலைக்கு எடுத்துச் செல்லும் பாதையில் முயன்று கொண்டிருக்கிறது. தற்போதுள்ள நவீன சூழலில் மன அழுத்தமும், வாழ்க்கை முறை நடவடிக்கைகளும், நல்ல உடல் நலத்தைப் பேணவும், நோய்களைத் தவிர்க்கவும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும்



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

அவசியமாகும். நலமான இந்தியாவை நோக்கிப் பயணிக்க ஒரு சிறப்பான அரிய வாய்ப்பை இந்த நிகழ்வு வழங்குகிறது. இந்த இயக்கத்திற்கு ஆதரவு தரும் வகையில் தனி நபர்களும், அமைப்புகளும் தங்களுடைய உடல் நலத்தையும், பிறருடைய உடல் நலத்தையும் மேம்படுத்த பலவகையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

உடற்பயிற்சி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, எல்லா பள்ளிகளிலும் இளம் வயதிலிருந்தே குழந்தைகளை விளையாட்டுகளில் ஈடுபடுத்துவது தகுதியான இந்தியா இயக்கத்தின் நோக்கமாகும். உலக அரங்கில் நம் இளைஞர்கள் மிக உயர்ந்த மட்டத்தில், மற்றவர்களோடு போட்டியிட இது மிகவும் அவசியமாகும். இதே அழுத்தத்தை 2020ஆம் ஆண்டின் புதிய கல்விக் கொள்கையும்; கொடுக்கிறது.

**முனைவுகள்:**

**(அ)சாமக்ர சிக்ஷா திட்டம்:**

மேற்கூறப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில், மத்தியத் தொகுப்பிலிருந்து செயல்படும் சாமக்ர சிக்ஷா திட்டம், ‘கட்டுடல் கொண்ட இந்தியா’ திட்டத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின்கீழ், எல்லா அரசு பள்ளிகளுக்கும் ஆண்டுதோறும் மானியம் வழங்கப்படுகிறது. இது அல்லாமல், பள்ளி மாணவர்களுக்கான கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளில் தேசிய அளவில் ஒரு பள்ளியிலிருந்து இரண்டு மாணவர்கள் பதக்கங்கள் வெல்லும் போது, அவர்களுக்கு கூடுதலாக ரூ.25000 மானியம் வழங்கப்படும். இப்போது, விளையாட்டுகள் என்பது படிப்பிற்கு அப்பாற்பட்ட நடவடிக்கையாக இல்லாமல், படிப்புகளோடு இணைந்த ஒன்றாகக் கருதப்படுகிறது.

தகுதியான இந்தியா இயக்கத்திற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளில் பின்வரும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**(ஆ) தகுதியான இந்தியா பள்ளிகள் இயக்கம்:**

தகுதியான இந்தியா இயக்கம் ஒவ்வொரு பள்ளியிலும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் தகுதியான இந்தியா பள்ளி வாரத்தை அனுசரிக்க ஊக்குவிக்கிறது. எளிமையான மற்றும் இலகுவான காரணிகள் அடிப்படையில் தகுதியான இந்தியா பள்ளிச் சான்றிதழ் வழங்குமுறையும் உருவாக்கப்பட்டுள்ளது.

**(இ) தகுதியான இந்தியா பள்ளி வாரம்:**

பள்ளி மாணவர்களிடையேயும், அவர்களின் பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் பள்ளியில் பணியாற்றுவோரிடையேயும் தகுதியான உடற்கட்டமைப்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த 2019இல் தகுதியான இந்தியா பள்ளி வாரம் துவக்கப்பட்டது. பேச்சுப் போட்டிகள், வினா விடைப் போட்டிகள், கட்டுரை எழுதும் போட்டிகள், சுவரொட்டி வரையும் போட்டிகள், யோகா மற்றும் தியானம், உடற்கட்டமைப்புத் தகுதிக்கான அறிவுரைகள், நம்நாட்டுப் பாரம்பரிய விளையாட்டுகள் ஆகியன உள்ளிட்ட நிகழ்ச்சிகள் மூலம் பள்ளி சம்மந்தப்பட்ட அனைவரும் கலந்து கொள்ளும் இந்தத் திட்டம் நாடெங்கிலும் நடைபெறுகிறது.

கல்வி அமைச்சகத்தோடு இணைந்து முதலாவது தகுதியான இந்தியா பள்ளி வாரம் முதன்முதலாக நவம்பர் 2019இன் மூன்றாவது வாரத்தில் அனுசரிக்கப்பட்டது. இந்த முதலாவது தகுதியான இந்தியா பள்ளி வாரத்தில் 15000 பள்ளிகள் கலந்து கொண்டன. இதன் இரண்டாவது நிகழ்வு டிசம்பர் 2020 முதல் ஜனவரி 2021 வரை நடைபெற்றது. இது நாடெங்கிலும் உள்ள 4.3 இலட்சத்திற்கும் மேற்பட்ட பள்ளி வகுப்பறைகளில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிகளில் யோகா, வரைதல், ஓவியம் தீட்டுதல், கலந்துரையாடல்கள் மற்றும் பிற நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தகுதியான இந்தியா பள்ளி வாரத்தின் மூன்றாவது நிகழ்வு நவம்பர் 2021 முதல் ஜனவரி 2022 வரை நடைபெற்றது. நாடெங்கிலும் 4.5 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பங்குபெற்றனர். தகுதியான இந்தியா பள்ளி வார நிகழ்ச்சிகளில் யோகா, நடனம், பேச்சுப் போட்டிகள், கலந்துரையாடல்கள், சொற்பொழிவுகள் போன்ற பல நிகழ்வுகள் நடைபெற்றன. நான்காவது தகுதியான இந்தியா பள்ளி வாரம் 15 நவம்பர் 2022லிருந்து 31 ஜனவரி 2023 வரை நடைபெறுகிறது. கூடுதலாக இந்த ஆண்டு இந்த வார நிகழ்ச்சியோடு அந்தந்த பள்ளிகளின் வருடாந்திர விளையாட்டு தினமும் கொண்டாடப்படுகிறது. இந்த நிகழ்வுகளில் பள்ளிகள் அவர்களிடையே உள்ள சிறப்பான விளையாட்டு வீரர்களின் தகவல்களை இந்திய விளையாட்டு ஆணையத்திற்கு அனுப்புமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஜனவரி 2, 2022 வரை 2,54,470 மாணவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்குபெற்றனர்.



https://www.tnpscthervuthunaivan.com/

**(ஈ) தகுதியான இந்தியா வினா-விடை:**

சுதந்திரத்தின் அமுதப் பெருவிழா நிகழ்வுகளை எல்லாப் பள்ளிகளிலும் எடுத்துச் செல்லும் வகையில் 2021இல் தகுதியான இந்தியா வினா விடை நிகழ்ச்சிகள் நாடெங்கிலும் உள்ள பள்ளி மாணவர்களிடையே எடுத்துச் செல்லப்பட்டது. இந்த வினா விடைப் போட்டிகளில் நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளி மாணவர்களும் கலந்து கொள்ள வேண்டும் என்பது நோக்கம். விளையாட்டுப் போட்டிகளிலும், உடற்பயிற்சிகளிலும் ஆர்வமிக்க மாணவர்கள் வினா விடைப் போட்டிகளில் பள்ளி அளவிலும், மாநில அளவிலும், தேசிய அளவிலும் பங்கு பெறலாம். 2022இல் 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 42490 பள்ளிகளிலிருந்து 1,74,473 மாணவர்கள் விளையாட்டுகள் மற்றும் உடற்பயிற்சி சார்ந்த வினா விடைப் போட்டிகளில் கலந்து கொண்டார்கள். தகுதியான இந்தியா வினா விடைப் போட்டிகள் நாடெங்கிலும் இப்போது நல்ல வரவேற்பு பெற்று குழந்தைகள் தகுதியான உடற்கட்டமைப்பு இயக்கத்தில் சேர்ந்து நல்ல வாழ்க்கை முறையை பின்பற்றுவதற்கு ஆதரவாக உள்ளது.

**(உ) தகுதியான இந்தியா விடுதலை ஓட்டம் 3.0:**

இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுகள் அமைச்சகம் தகுதியான இந்தியா விடுதலை ஓட்டம் 3.0 நிகழ்வை அறிவித்துள்ளது. இந்த விடுதலை ஓட்டம் அக்டோபர் 2, 2022இல் துவங்கி 31 அக்டோபர் 2022இல் நிறைவு பெற்றது. இந்த நிகழ்வை மக்கள் இயக்கமாக மாற்ற விளையாட்டுக்கள் துறை தகுதியான இந்தியா பள்ளிகளுக்கு அளிக்கப்படும் மானியங்களோடு இணைத்து ஒரு தர அங்கீகரிப்பு முறையையும் உருவாக்கியுள்ளது. இதன்படி, பள்ளிக்கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையின் அனைத்துப் பள்ளிகளும் இதில் பங்கு பெற்று தகுதியான இந்தியா மூன்று அல்லது ஐந்து நட்சத்திர தரக் குறியீட்டைப் பெற வலியுறுத்தப்பட்டுள்ளன. 4,44,531 பள்ளிகளுக்குத் தகுதியான இந்தியா கொடி வழங்கப்பட்டுள்ளது. 43074 பள்ளிகள் மூன்று நட்சத்திரம் மற்றும் ஐந்து நட்சத்திரத் தர அங்கீகாரத்திற்கு 13008 பள்ளிகள் விண்ணப்பித்துள்ளன.

இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுகள் அமைச்சகம் வேறு சில கூடுதல் செயல்பாடுகளையும் மேற்கொண்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கான விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த அமைச்சகம் (தகுதியான இந்தியா கைப்பேசி) செயலி ஒன்றை உருவாக்கியுள்ளது. இதுவரை ஐந்து இலட்சம் பயனாளிகள் இதனைப் பதிவிறக்கம் செய்துள்ளனர். தகுதியான இந்தியா இயக்கம் நாடெங்கிலும் இளைஞர் சங்கங்களை ஏற்படுத்த ஊக்குவிக்கிறது. தகுதியான இந்தியா இயக்கத்தில் சேர்ந்து நாளொன்றுக்கு 45 முதல் 60 நிமிடங்கள் தங்களுடைய அன்றாட செயல்பாடுகளில் உடற்பயிற்சியை மேற்கொள்ள வழி செய்யப்பட்டுள்ளது. இந்த இளைஞர் நலச் சங்கங்கள் தனி நபர்களுக்கும் மற்ற இந்தியர்களுக்குமான பலவகைப்பட்ட முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

**(ஊ) எல்லாப் பள்ளிகளிலும் கால்பந்து விளையாட்டுத் திட்டம்:**

உலகக் கால்பந்து விளையாட்டுக் கூட்டமைப்பும் யுனெஸ்கோவும் இணைந்து பள்ளிகளில் கால்பந்து என்ற பெரிய திட்டத்தை செயல்படுத்தியுள்ளன. இதனால் உலகெங்கிலும் உள்ள 70 கோடி மாணவர்கள் கல்வி, வளர்ச்சி மற்றும் அதிகாரங்கள் பெற திட்டமிடப்பட்டுள்ளது. கால்பந்து சார்ந்த செயல்பாடுகளை பள்ளிக்கல்வி முறையில் இணைத்து உலகிலுள்ள எல்லா ஆண், பெண் மாணவர்களும் கால்பந்தாட்டத்தில் கலந்து கொள்ளச் செய்வது இதன் நோக்கமாகும். நிலைத்து நிற்கும் மேம்பாட்டு இலக்குகளையும், ஐக்கிய நாடுகளின் பிற செயல்திட்டங்களையும் ஆதரிக்கும் வண்ணமும், கால்பந்து மூலம் குறிப்பிட்ட சில வாழ்க்கைத் திறன்களையும், தகுதிகளையும் மேம்படுத்தவும் இந்த முனைவு முயல்கிறது. இந்தப் பள்ளிகளில் கால்பந்தாட்டத் திட்டம் பின்வரும் நான்கு முக்கிய விளைவுகளை எட்ட நினைக்கிறது

(அ) மாணவர்கள் முக்கியமான வாழ்க்கை திறன்களையும், தகுதிகளையும் பெற பாலின வேறுபாடு இல்லாமல் அவர்களுக்கு அதிகாரமளிக்க வேண்டும்.

(ஆ) இதனைச் செயல்படுத்தவும் விளையாட்டு மற்றும் வாழ்க்கைத் திறன் நடவடிக்கைகளைக் கற்பிக்கவும் பயிற்சியாளர்களுக்கும், கல்வியாளர்களுக்கும் அதிகாரமளிக்க வேண்டும்.

(இ) கால்பந்தாட்டத்தில் வாழ்க்கைத் திறன்களுக்கான பயிற்சிகளை அளிக்க இந்த இயக்கத்தில் இணைந்துள்ள பள்ளிகள், உறுப்பினர் கழகங்கள்

https://www.tnpscthervuthunaivan.com/

மற்றும் பிற அமைப்புகளுக்கு பயிற்சித்திறன்கள் அளிக்கப்பட வேண்டும்.

(ஈ) கூட்டுச் செயல்பாடுகளையும், கூட்டுறவுகளையும் ஊக்குவிக்க பல துறைகளில் இணைந்து செயல்படுவற்கும், அரசுகளுக்கும் உறுப்பினர் சங்கங்களுக்கும், பங்குபெறும் பள்ளிகளுக்குமிடையே கூட்டுறவை வலுப்படுத்த வேண்டும்.

இளம் மாணவர்களை விளையாட்டுகளில் ஈடுபடுத்துவதற்கு பள்ளிகளே சிறந்த சாதனங்களாக விளங்குகிறார்கள். பள்ளிகளில் கால்பந்தாட்டத்தின் மூலம் அனைத்து மாணவர்களும் எந்தவொரு பாகுபாடுமின்றி இந்த விளையாட்டில் பங்குபெறுவதை உறுதி செய்ய வேண்டும். எந்தவொரு தனி நபரும் கால்பந்தாட்டத்தை விளையாட விரும்பும் போது, நாடும் அரசும் வழங்கும் வளங்களோடு தங்களுடைய பள்ளிகள் மூலம் இந்த விளையாட்டில் கலந்து கொள்ள இயலும். உலகக் கால்பந்தாட்ட சங்கங்களின் கூட்டமைப்பின் இலக்கு, கால்பந்தாட்டப் பயிற்சியாளர்களை உருவாக்கி வழங்குவதும், பள்ளிகளுக்கு கால்பந்தாட்ட உபகரணங்களை வழங்குவதுமாக இருந்தாலும் இதில் இணைந்துள்ள அமைப்புகளைக் கொண்டு பள்ளிகளில் பயிலாத குழந்தைகளோடும் தொடர்பு கொண்டு அவர்களை மேம்படுத்துவதாகும். கால்பந்தாட்ட உலகக் கூட்டமைப்பு, உறுப்பினர் சங்கங்களின் மூலம் பள்ளிகளுக்கு கால்பந்துகளையும், உபகரணங்களையும் வழங்குவதோடு, வலைதளம் மூலமாகவும் கைப்பேசிச் செயலி மூலமாகவும், எளிதாகப் பயன்படுத்தக்கூடிய வகையில் கால்பந்தாட்ட விளையாட்டிற்கான அனைத்துத் திறன்களையும் வழங்குகிறது. ஒவ்வொரு பள்ளியிலும் கால்பந்தாட்டத்தைச் செயல்படுத்தி, ஆசிரியர்களையும், பயிற்சியாளர்களையும், மாணவர்களின் பெற்றோர்களையும் இணைத்து ஊக்குவிப்பது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

பள்ளிகளில் கால்பந்து இயக்கத்தின் மூலம் பயிற்சியாளர்களையும், மாணவர்களையும் கால்பந்தாட்டத்தில் முழுவீச்சில் ஈடுபடுத்துவதோடு மட்டுமல்லாமல் பலவகையான சமூக நிலைப்பாடுகளையும் பள்ளிகள் அணுகுகின்றன. பள்ளிகளில் கால்பந்தாட்டத் திட்டம், வகுப்பறையில் அளிக்கப்படும் பாடத்திட்டங்களையோ, நேரங்களையோ பாதிக்காமல் கல்வி சார்ந்த சாதனைகளை அடைவதற்குப் பள்ளி ஆசிரியர்களுக்கும், அரசு அமைப்புகளுக்கும் ஆதரவு அளிப்பதாகும். கால்பந்தாட்டம் என்பது, கல்வி முறையில் ஒரு முக்கியமான பங்கு வகித்து, அதுவே வாழ்க்கையின் பள்ளிக்கூடமாகவும் செயல்பட முடியும்.

அனைத்திந்திய கால்பந்தாட்டக் கூட்டமைப்பும், கல்வி அமைச்சகமும் உலகக் கால்பந்தாட்டச் சங்கங்களின் கூட்டமைப்பும் சேர்ந்து ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளன. இதன் வழியாக, பள்ளிகளில் கால்பந்தாட்டத் திட்டத்தைச் செயல்படுத்தி, நாடெங்கிலும் உள்ள பள்ளிகளில் 2.5 கோடி மாணவர்களை கால்பந்தாட்டத்தில் ஈடுபடுத்தியுள்ளனர்.

**முடிவாக:**

கடந்த சில ஆண்டுகளில் இந்தியாவின் விளையாட்டுச் சூழல் மிகவும் மாறியுள்ளது. இன்று ஒரு நாட்டின் சமூகப் பொருளாதார மேம்பாட்டில் விளையாட்டுகள் முக்கியமான பங்கு வகிக்கின்றன. விளையாட்டுகளில் திறன்களின் ஒரு பெரிய தொகுப்பாக இந்தியா விளங்குகிறது. இப்போது மேற்கொள்ளப்பட்டுள்ள பல முனைவுகளால் விளையாட்டு சார்ந்த மக்களின் எண்ணங்களில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. விளையாட்டையும் தகுதியான உடற்கட்டமைப்பையும் வளர்க்க அரசு முக்கிய பங்காற்றியுள்ளது. விளையாட்டுகள் மற்றும் தகுதியான உடற்கட்டமைப்பு சார்ந்து அரசு எடுக்கும் முழுமையான அணுகுமுறையால் இந்தியா எப்படி விளையாட்டுப் போட்டிகளை அணுகுகிறது என்பதில் மாற்றம் ஏற்படும். ஒளிமயமான விளையாட்டு மற்றும் தகுதியான உடற்கட்டமைப்புக்கான பயணத்தை நாம் துவக்கியிருக்கிறோம். குழந்தைகள் விளையாடக் கற்றுக் கொள்ளும் போது, சமுதாயங்கள் மேம்பட்டு நாடுகள் செழிக்கின்றன. கல்வி, மனிதப் பண்புகளின் மேம்பாடு, தலைமையேற்கும் திறன் ஆகியவை, நாட்டின் எதிர்காலமாக இன்று இருக்கும் குழந்தைகளுக்கு வாழ்நாள் முழுவதும் கிடைக்கின்றன.

**–ரஷி சர்மா,**
துணைத் தலைமை இயக்குநர்,
அஞ்சல் துறை. முன்னாள் இயக்குநர்,
பள்ளிக்கல்வி மற்றும் எழுத்தறிவுத்துறை.

**புரபி பட்டா நாயக்**
தலைமை ஆலோசகர்,
பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத்துறை.



https://www.tnpscthervuthunaivan.com/


G20
भारत 2023 INDIA
वसुधैव कुटुम्बकम
ONE EARTH · ONE FAMILY · ONE FUTURE
Azadi Ka Amrit Mahotsav
Kurukshetra
Smart Agriculture
Kurukshetra
Health
Kurukshetra
Union Budget 2022-23
Kurukshetra
Empowering Rural Women
Kurukshetra
Rural Connectivity
Kurukshetra
NOW AVAILABLE
Compilation 2022
Kurukshetra
Kurukshetra
Kurukshetra
Rural Industries
Kurukshetra
Tribal Life & Culture
Kurukshetra
Kurukshetra
Science and Technology
Kurukshetra
e-Governance
*Half yearly (July to December 2022) compilation of Kurukshetra is also available. Price of each set is Rs. 150/-
January-December 2022
Price: ₹300/-*
Publications Division
Ministry of Information & Broadcasting, Government of India
To buy online visit: www.bharatkosh.gov.in
For placing orders, please contact: Ph : 011-24365609, e-mail: businesswng@gmail.com
website: www.publicationsdivision.nic.in
/dpd_india
@DPD_India
/publicationsdivision

https://www.tnpscthervuthunaivan.com/



# தரங்கம்பாடி கோட்டை

- எஸ்.கௌரிசங்கர்

**கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் போர்ச்சுகீசியர், டச்சுக்காரர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், டேனியர், ஆகியோர் வாணிபத் தளங்களை அமைத்துக் கொண்டனர். டேனியரின் வாணிபத்தளமாகவும், தலைமையிடமாகவும் விளங்கிய தரங்கம்பாடியின் வரலாற்றையும், சிறப்புகளையும் வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.**

## முன்னுரை

தமிழகத்தை சங்க காலத்தில் ஆட்சி செய்த அரசுகளின் பொருளாதார வளர்ச்சியில் வணிகத்தின் வாயிலாகப் பெறப்பட்ட வருவாய் முக்கியமான பங்கினை வகித்தது. உள்நாட்டு வாணிபத்தில் ஈடுபட்டதுடன், அயல்நாட்டு வணிகத்தில் தென்கிழக்காசிய நாடுகளுடனும், மேற்கத்திய நாடுகளுடனும் கடல்சார் வாணிபச் செயல்பாடுகளை தமிழகம் மையமாகக் கொண்டிருந்தது. அத்தகைய கடல்சார் வாணிப நடவடிக்கைகளினால் தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் பல துறைமுகங்கள் வெவ்வேறு காலக்கட்டங்களில் உருவாகியதுடன், அவை உருவான காலத்திற்கு ஏற்றவாறு சிறப்புமிக்கத் துறைமுகங்களாகவும், வாணிபத் தளங்களாகவும் வளர்ச்சி பெற்றன. வணிகக் குழுக்களின் உதவியுடன் அத்துறைமுகங்களில் வாணிபம் நடைபெற்றது.



தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை



சங்க காலத்தில் தமிழகத்தில் அரிக்கமேடு, காவிரிபூம்பட்டினம், அழகன்குளம், கொற்கை, வசவசமுத்திரம், முசிறி (மேற்குக் கடற்கரைத் துறைமுகம்) ஆகிய துறைமுகங்கள் ஆறுகள் கடலில் கலக்குமிடங்களில் உருவாகி வளர்ச்சி பெற்று வந்த சூழலில் தமிழகத்தை அப்போது ஆட்சி செய்து வந்த அரசுகளில் ஏற்பட்ட மாற்றங்களாலும், இயற்கைக் காரணிகளாலும் சங்க காலத்திற்குப் பிறகு அத்துறைமுகங்களின் முக்கியத்துவம் குறையத் தொடங்கியது. அதன் பின்னர் தமிழகத்தினை ஆட்சி செய்த அரசுகளின் ஆதரவுடன் சங்க காலத் துறைமுகங்கள் அமைந்திருந்த பகுதிகளின் அருகிலேயே சதுரங்கப்பட்டினம், நாகப்பட்டினம், பெரிய பட்டினம், காயல்பட்டினம் என இடைக்காலத்தில் தமிழகக் கடற்கரைகளில் 21 துறைமுகங்கள் உருவாகி சிறப்பாகச் செயல்பட்டு வந்ததை அத்துறைமுகப் பகுதியில் கண்டறியப்பட்ட தொல்லியல் மற்றும் கல்வெட்டுச் சான்றுகள் உறுதி செய்கின்றன.

அதன் பிறகு தமிழகத்திற்கு கி.பி. 15, 16 ஆம் நூற்றாண்டுகளில் வருகை தந்த ஐரோப்பியரின் வணிகச் செயல்பாடுகள் காலனியாதிக்கத்திற்கு வித்திட்டன.

## தரங்கம்பாடியின் தொன்மை

இவ்வூர் மயிலாடுதுறையிலிருந்து தென்கிழக்கே சுமார் 30 கி.மீ தொலைவில் காவிரியின் கிளையாறான பொறையாறு, உப்பனாறு ஆகியவை வங்காள விரிகுடாவில் கடலில் கலக்குமிடத்தில் (11.0290$^{0}$N 79.8507$^{0}$E) அமைந்துள்ளது. தரங்கம்பாடி முன்பு நாகப்பட்டினம் மாவட்டத்தில் இருந்தது. தற்போது மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒரு வட்டத் தலைநகராக தரங்கம்பாடி உள்ளது. இவ்வூர் டேனியரின் வருகைக்கு முன்னர் இடைக்காலத்தில் சோழர்



https://www.tnpscthervuthunaivan.com/



சியோன் தேவாலயம்

ஆட்சிக்குட்பட்ட பகுதியாக இருந்து பின்பு இரண்டாம் பாண்டியப் பேரரசு ஆட்சியின் கீழும், தொடர்ந்து தஞ்சைப் பகுதியை ஆட்சி செய்த நாயக்க அரசின் ஆட்சிப்பரப்பிலும் இருந்து வந்துள்ளது. தஞ்சை நாயக்கர் ஆட்சிக் காலத்திலேயே தரங்கம்பாடி போர்த்துக்கீசியர்களின் குடியேற்றங்களைக் கொண்டதாகவும், பின்னர் டச்சுக்காரர்களின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்ததையும் அங்கு கண்டறியப்பட்ட தொல்லியல், கல்வெட்டுச் சான்றுகளின் வாயிலாக அறிய இயலுகிறது.

தரங்கம்பாடியில் முதலாம் இராசராசனின் காசுகள் கண்டறியப்பட்டுள்ளன. சோழப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் சோழநாடு இரண்டாம் பாண்டிய அரசின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாக மாறியது. தரங்கம்பாடியில் உள்ள மாசிலாமணீஸ்வரர் கோயிலில் காணப்படும் கி.பி.1305ஆம், ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு இவ்வூரை சடங்கன்பாடியான குலசேகரன்பட்டினம் எனக் குறிப்பிடுகிறது. இவ்வூருக்கு அருகிலுள்ள திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் கோயிலில் சிதைந்த நிலையில் காணப்படும் சுந்தரபாண்டியன் எனப் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு குலசேகரபட்டினத்து வணிகர்கள் பற்றிக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டின் வாயிலாக கி.பி.14ஆம் நூற்றாண்டில் இவ்வூர் சடங்கன்பாடி என்றழைக்கப்பட்டதையும், குலசேகர பாண்டிய மன்னனின் கட்டுப்பாட்டில் சிறந்த துறைமுகமாகச் செயல்பட்டு வந்ததையும் அறியமுடிகிறது. மேலும் அக்கோயிலில் தனிக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ள அச்சுதப்ப நாயக்கரின் கல்வெட்டு விஜயநகர நாயக்கர் ஆட்சியின் கீழ் தரங்கம்பாடி இருந்ததையும் இடைக்காலத்தின் பிற்பகுதியிலும் இவ்வூர் சடங்கன்பாடி என்றே அழைக்கப்பட்டதையும் அறியமுடிகிறது. டேனிஷ் வருகைக்குப் பின் இவ்வூர் ‘டிரங்கோபார்’ (Tranquebar) என அழைக்கப்பட்டு தற்போது தரங்கம்பாடி என்றழைக்கப்படுகிறது.

கடல்சார் வாணிபச் செயல்பாடுகளிலும் தரங்கம்பாடி துறைமுகம் இடைக்காலத்திலிருந்தே சிறந்து விளங்கி வந்தமையை தொல்லியல் சான்றுகள் வெளிப்படுத்துகின்றன. தரங்கம்பாடி மாசிலாமணிநாதர் கோயிலிலுள்ள குலசேகரபாண்டியனின் கல்வெட்டு பதினெண்விசையத்தார் வணிகக்குழு அத்துறைமுகத்தில் தங்கி வாணிப நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததைக் காட்டுகிறது. மேலும், அக்கோயிலில் காணப்படும் மாறவர்மன் வீரபாண்டியனின் 24ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு தரங்கம்பாடியில் தங்கியிருந்த வணிகர்களுக்குப் பாதுகாப்பு வழங்கிய படைவீரர்களுக்கு ஏற்படும் செலவுகளை அவ்வணிகர்களே ஏற்றுக் கொண்டதாகக் குறிப்பிடுகிறது.

இதற்கு மேலும் வலுசேர்க்கும் விதமாக தரங்கம்பாடியில் கி.பி.10, 13ஆம் நூற்றாண்டு காலத்தைச் சார்ந்த சீன மண்பாண்ட ஓடுகள், சீன செப்புக் காசுகள், ஈழச் செப்புக்காசுகள் கிடைத்துள்ளமையும், தரங்கம்பாடி வரதராஜப் பெருமாள் கோயில் கல்வெட்டொன்றில் காணப்படும் சம்பான் சுவந்திரம் (சம்பான் சீன கப்பல் வகை) என்ற குறிப்பு சீனா மற்றும் இலங்கைப் பகுதியோடு தரங்கம்பாடி கொண்டிருந்த வாணிப நடவடிக்கைகளை எடுத்துக்காட்டுகிறது. இத்தகைய சான்றுகள் தரங்கம்பாடி இடைக்காலத்திலிருந்தே வணிக நடவடிக்கைகளால் சிறப்பு பெற்றத் துறைமுகமாக இருந்துள்ளமையைப் புலப்படுத்துகிறது.

### காலனியாதிக்கக் காலத்தில் தரங்கம்பாடி

கி.பி.17ஆம் நூற்றாண்டில் தரங்கம்பாடி பகுதி தஞ்சையைத் தலைமையிடமாகக் கொண்டு ஆண்ட நாயக்க அரசின் கட்டுப்பாட்டில் இருந்தது. தஞ்சையை ஆண்ட ரகுநாத நாயக்கர் காலத்தில் அவரது அனுமதியுடன் போர்த்துக்கீசியர்கள் தரங்கம்பாடியில் தங்கள் குடியேற்றங்களை அமைத்துக்கொண்டு வணிகம் செய்து வந்தனர். ஹாலந்து நாட்டுப் படைத்தளபதியும், டேனிஷ் கிழக்கிந்திய வணிகக்குழுவின் தலைவரான உருக்லாந்து கிராப்பே என்பவரும் வணிகக் கப்பலில் தமிழகத்தின் கிழக்குக் கடற்கரையை நோக்கி வந்த போது, போர்த்துக்கீசியக் கப்பலில் இருந்த வீரர்களால் கடலில் தாக்கப்பட்டனர். பிறகு ஹாலந்து நாட்டுத்



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



தரங்கம்பாடி புதிய எருசலேம் தேவாலயம் (கி.பி.1718 இல் கட்டப்பட்டது)

தளபதியும், உருக்லாந்து கிராப்பே இருவரும் படகு மூலம் தப்பித்து தஞ்சைக்கு வந்து இரகுநாத நாயக்கரிடம் நடந்தவற்றைக் கூறினர். இதனால் போர்த்துக்கீசிய வணிகர்களைச் சிறைபிடித்து அவர்களுக்கு தண்டத்தொகை விதித்தார் நாயக்கர். மேலும், டேனீஷ் கப்பல்களுடைய வழியில் தலையிடக்கூடாது என்றும் போர்த்துக்கீசியர்களுக்கு கட்டளை யிட்டார். பிறகு ரகுநாத நாயக்கர் தரங்கம்பாடித் துறைமுகத்தை டேனிஷ் கிழக்கிந்திய வணிகக்குழுவிற்கு வாடகைக்கு விடுவதாகத் தீர்மானித்தார். டேனிசு கம்பெனியாருக்கு கி.பி.1620 இல் தரங்கம்பாடி யிலுள்ள 62 சதுர கி.மீ பரப்பளவை நிலதானமாக அளித்ததுடன் டேனிஸ் கம்பெனியார் அங்கு கோட்டை அமைத்துக்கொண்டு வணிகம் செய்து கொள்ள உரிமையும் வழங்கினார்.

இவ்விவரங்களை ஒரு பொன்னோலையில் எழுதி டேனிஷ் அரசர் நான்காம் கிறிஸ்டியான் என்பவர் (கி.பி 1588 1648) இலங்கைக்கு அப்போது வந்திருந்த ஒவ்கிட்டி என்ற கடற்படைத் தளபதிக்கு அனுப்பியுள்ளார்.10 அதன்பிறகு ஒவ்கிட்டி தஞ்சை, நாயக்கரைச் சந்தித்து, இருநாடுகளுக்குமிடையே தொடங்க வேண்டிய வணிக உறவுகள் குறித்த ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன்படி தரங்கம்பாடி பகுதி ஆண்டுக்கு ரூபாய் 3111/–க்கு வாடகைக்கு டேனியர்களிடம் விடப்பட்டது. தரங்கம்பாடி கடற்கரையில் டேன்ஸ்போர்க் என்ற கோட்டையைக் டேனியர் கட்டிக்கொண்டு வணிகம் செய்யத் தொடங்கினர்.

## டேனிஷ் வணிகம்

தரங்கம்பாடியைத் தலைமை யிடமாகக் கொண்டு நிர்வாகத்தை மேற்கொள்ள டேனிஷ் கிழக்கிந்திய வணிகக் கம்பெனி ஓர் ஆளுநரை நியமித்து, நிர்வாகத்தில் அவருக்கு உதவி செய்வதற்கு மூன்று நபர்கள் கொண்ட ஒரு நிர்வாகக் குழுவை ஏற்படுத்தியது. டேனியர்கள் தேயிலையை பெருமளவில் இறக்குமதி செய்து அத்தேயிலையைப் பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்துள்ளனர். மேலும் வெடிமருந்துகள், மதுவகைகள் போன்றவற்றை இறக்குமதி செய்தும் உலோகங்கள், துணி வகைகள், மிளகு முதலியவற்றை ஏற்றுமதி செய்தும் வணிகம் செய்து வந்துள்ளனர். டேனிஷ் கிழக்கிந்திய வணிகக் கம்பெனிக்கு சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் வணிகம் மேற்கொள்ளவும் வாய்ப்புகள் கிடைத்தன. எனினும் டேனிஷ் வணிகச் செயல்பாடுகளில் அவ்வப்போது சில பின்னடைவுகளும் ஏற்பட்டன. அதற்குக் காரணம் தொலைதூரக் கடற்பயணமும், அதற்கான செலவினங்களும் ஆகும். டென்மார்க்கிலிருந்து தரங்கம்பாடிக்கு வணிகக் கப்பல் வருவதற்கு பல மாதங்கள் பிடித்தன. எனவே, தரங்கம்பாடிக்கு ஐரோப்பிய வணிகக் கப்பல்களின் வருகை சீராக இல்லை.

டேனிஷ்காரர்களுக்கு இந்தியாவில் முக்கியமான இரண்டு வணிக மையங்கள் இருந்தன. ஒன்று தரங்கம்பாடி, மற்றொன்று மேற்கு வங்காளம் அருகே உள்ள செராம்பூர் ஆகும். கி.பி. 1845ஆம் ஆண்டு வரை தரங்கம்பாடியில் டேனியரின் வணிகமும், அரசாட்சியும் இருந்து வந்துள்ளது. ஆங்கிலேயர்களுடன் இவர்கள் போட்டி போட இயலாததால் தரங்கம்பாடியில் இவர்களுக்கான வணிக உரிமையையும், அங்குள்ள கோட்டையையும் 13 இலட்சத்திற்கு ஆங்கிலேயரிடம் விற்று விட்டனர். அதன்பிறகு இந்தியா சுதந்திரம் அடையும் வரை தரங்கம்பாடி ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் இருந்தது. 1977ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு பண்டைய தொல்லியல் சின்னமாக இக்கோட்டையைப் பாதுகாத்து வருகிறது.

## தரங்கம்பாடி கோட்டை அமைப்பு

தரங்கம்பாடியில் டேனியர் கோட்டை அமைப்பதற்கு முன்பே அவ்வூரில் போர்த்துக்கீசியர்கள் தங்கி வணிகம் செய்து வந்துள்ளனர். தரங்கம்பாடியைச் சுற்றிலும் மண்ணாலான சுற்றுமதில் கி.பி.1600க்கு முன்பே அமைக்கப்பட்டிருந்ததை டேனிஷ்



தரங்கம்பாடி புதிய எருசலேம் தேவாலயம் - உட்புறத் தோற்றம்



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



தரங்கம்பாடி கோட்டை - கடல் அரிப்பில் சேதமான சுவர்பகுதி



தரங்கம்பாடி மாசிலாமணிநாதர் சிவன் கோயில் (கி.பி. 13 ஆம் நூற்றாண்டு)

ஆய்வு நூல்கள் குறிப்பிடுகின்றன. இந்த மதில் கருங்கல்லால் அஸ்திவாரம் எடுக்கப்பட்டு, மேல்புறம் மண் மேடுகள் கொண்டு அமைக்கபட்டது. எஸ்கில்ட் ஆண்டர்சன் டேனிஷ் கவர்னராகப் பொறுப்பேற்றவுடன் தரங்கம்பாடி மதிலைப் புதுப்பித்து நகரைச் சுற்றிலும் நான்கு திசைகளிலும் நான்கு பெரிய பீரங்கி மேடைகளை அமைத்தார். கி.பி.1620 இல் தஞ்சை நாயக்க மன்னர் ரகுநாத நாயக்கர், டேனிஷ் கடற்படைத் தளபதி ஒவ்கிட்டிக்கு கோட்டை கட்டிக்கொள்ள அனுமதி வழங்கியதும் பணிகள் தொடங்கப்பட்டு அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் கோட்டையின் உட்புறத்தில் முக்கியமான கட்டடங்களும், தொடர்ந்து வெளிப்புறப் பகுதிகளும் இரண்டரை ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டன. இக்கோட்டையானது வங்காள விரிகுடா கடற்கரையை ஒட்டியவாறு கட்டப்பட்டது.

இக்கோட்டையில் அமைந்துள்ள கட்டடங்களின் கூரைப்பகுதி நாயக்கர் கால மண்டப அமைப்பில் கட்டப்பட்டிருந்தாலும், கோட்டை மராட்டியர் கலைப்பாணியும் டேனிஷ் கட்டடக் கலைப்பாணியும் இணைந்த ஒரு கலைப்பாணியை கொண்டதாகக் கட்டப்பட்டுள்ளது. கோட்டைக் கதவு மற்றும் ஜன்னல்களின் மேற்புறம் கருங்கல் பலகை அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு மண்டபங்கள் இணைகின்ற இடங்களில் உறுதியான அகன்ற தூண்கள் அமைந்துள்ளன. கோட்டையின் உட்புறமுள்ள வசந்த மண்டபம், ஜன்னல், கதவுகள், கொடிக்கம்பம், மேடை, கோட்டை காவலர் மண்டபம், சமையல் அறையிலுள்ள புகை போக்கி, சமையல் மேடை ஆகியவை டேனிஷ் கலைப்பாணியில் அமைக்கப்பட்டுள்ளன. கோட்டை நுழைவாயில் முதலில் வடகிழக்கு மூலையில் அமைக்கப்பட்டதுடன் அவ்வாயில் அடைக்கப்பட்டு கி.பி. 1800ஆம் ஆண்டில் கோட்டையின் மையப்பகுதியில் வாயில் அமைக்கப்பட்டது.

கோட்டையிலிருந்து சற்று வடக்கே மாசிலாமணிநாதர் சிவன்கோயில் அமைந்துள்ளது. இப்பகுதியில் கடல்நிலை, முன்பு இருந்ததை விட கரையை நோக்கி வந்து நிலப்பகுதியை அரித்துள்ளது. மாசிலாமணிநாதர் கோயிலின் பெரும்பகுதி கடலால் அரிக்கப்பட்டு முற்றிலும் சேதமாகியுள்ளது. தரங்கம்பாடி கோட்டை முன்புறம் பாதுகாப்பு அரண் கடற்கரையை ஒட்டியவாறு அமைக்கப்பட்டு அவையும் கடல் அரிப்பால் பெரிதும் சேதமாகியுள்ளது.

### கிடங்குப் பகுதி

இரண்டு அடுக்குகளைக் கொண்ட கோட்டையின் கீழுள்ள மூன்று பெரிய அறைகள் பொருள் வைப்புக்கிடங்குகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன.



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

டேனிஷ்காரர்கள் ஐரோப்பிய சந்தைக்குத் தேவையான பொருள்களைச் சேகரித்துப் பாதுகாத்து கப்பல்களில் ஏற்றுமதி செய்யவும், ஐரோப்பிய நாடுகளிலிருந்து வரும் வணிகக் கப்பல்களில் இருக்கும் பொருள்களை இறக்கி கோட்டையின் கிடங்குகளில் பாதுகாத்து விற்பனை செய்வதற்கு ஏற்றவாறும் கோட்டை கட்டப்பட்டது.

**அலுவலக அறைகள்**

மேற்கூறப்பட்ட பொருள்கள் சேகரித்து வைக்கப்படும் கிடங்கிற்கு மேல் 5 அறைகள் உள்ளன. அவை.1. கவர்னர் அறை 2. பாதிரியாரின் அறை 3. தேவாலயம் 4. படைத்தலைவரின் அறை 5. உணவு அருந்தும் அறை (சமையல் அறை) ஆகியவையாகும்.

**கோட்டையின் உட்புறம் உள்ள அறைகள்**

கோட்டையின் உட்புறம் மைதானத்தில் நுழைவாயிலை ஒட்டி எட்டு அறைகளும், மேற்குப்புறம் மதிலை ஒட்டியவாறு எட்டு அறைகளும் உள்ளன. இவை வீரர்கள் தங்கும் அறைகளாகும். பொருள் சேகரிப்புக் கிடங்கை ஒட்டியவாறு அமைந்துள்ள இரண்டு அறைகள் ஒயின் அறை (மதுபானக் கிடங்கு) யாகச் செயல்பட்டன. இவற்றுள் உட்புறமாக ஓர் அறையிலிருந்து மற்றொரு அறைக்குச் செல்வதற்கு கதவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கு அருகே வாத்துகளை அடைத்து வைக்கும் அறை உள்ளது. சமையல் அறைக்கும், ஒயின் அறைக்கும் இடையில் இருந்த அறை சிறைச்சாலையாகச் செயல்பட்டது.

**சுருங்கை வழி**

கோட்டையின் தென்புற மதிலை ஒட்டி மையப்பகுதியில் ஒரு நீண்ட சுருங்கை வழி காணப்படுகிறது. கோட்டைக்கு வேண்டிய தண்ணீரை அருகில் செல்லும் உப்பனாற்றிலிருந்து எடுத்து வர இவ்வழி பயன்படுத்தப்பட்டது.

**சுரங்க அறைப்பாதை**

கோட்டையின் தென்மேற்கு மூலையில் ஒரு சுரங்க வழி உள்ளது. இந்த சுரங்க வழியின் உட்புறத்தில் ஒரு நிலவறை அமைந்துள்ளது. துப்பாக்கித் தோட்டாக்கள், போர் ஆயுதங்கள் வைப்பதற்கு அந்த அறை பயன்படுத்தப்பட்டது. மேலும் இச்சுரங்க வழியின் மையப்பகுதியில் ஒரு கிணறு போன்று அமைத்து, வெடிமருந்துகளைப் பாதுகாப்பாக வைப்பதற்கு அக்கிணறு பயன்படுத்தப்பட்டது.

**இதர கட்டடங்கள்**

தரங்கம்பாடி ஊர் நுழைவாயில் டேனிஷ் மன்னர் ஏழாம் கிறிஸ்டியனின் ஆட்சிக்காலத்தில் கி.பி.1792ஆம் ஆண்டு கட்டப்பட்டது. செங்கல் மற்றும் சுதையைக் கொண்டு இது கட்டப்பட்டது. இவ்வாயிலின் முகப்பில் மன்னனின் கிரீடமும் கீழ்ப்பகுதியில் 1792 என்ற ஆங்கில ஆண்டும் பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வூரில் டேனியர்கள் கி.பி.1701ஆம் ஆண்டு இராணி வீதியும், அரசர் வீதியும் சந்திக்கும் இடத்தில் சியோன் தேவாலயம் என்ற பெயரில் டேனிஷ் கட்டடக்கலையின் தனித்தன்மையை விளக்கும் வகையில் ஒரு தேவாலயத்தைக் கட்டினர். இத்தேவாலயத்தில் டேனிஷ்காரர்கள் மட்டுமே வழிபாடு செய்ய அனுமதிக்கப்பட்டனர். மதம் மாறிய உள்நாட்டவர்களுக்கு ஒரு தேவாலயம் தேவைப்பட்டது. கி.பி.1707ஆம் ஆண்டு ஜெர்மன் நாட்டைச் சார்ந்த சீகன்பால்கு தரங்கம்பாடிக்கு வந்தார். இவரது முயற்சியால் புதிய எருசலேம் தேவாலயம் கி.பி.1718–இல் கட்டப்பட்டது. இதைத் தவிர தரங்கம்பாடியிலுள்ள கவர்னர் மாளிகை பிற்கால டேனிஷ் கட்டடக்கலைக்குச் சான்றாக விளங்குகிறது.

தரங்கம்பாடி டேனிஷ் கோட்டைக்குத் தெற்கே உப்பனாற்றங்கரையில் ஒரு பண்டக சாலை (உணவு தானியங்கள் சேகரித்து வைக்குமிடம்) இருந்ததையும், கோட்டை, ராசா தெரு போன்றவற்றைப் பற்றியும் தரங்கம்பாடி ஓலை ஆவணங்கள் குறிப்பிடுகின்றன.

**முடிவுரை**

தரங்கம்பாடி ஊரின் வரலாறு அவ்வூர் தொடர்பாக கிடைத்துள்ள கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகள், தொல்லியல் சான்றுகள் ஆகியவை தரங்கம்பாடி இடைக்காலத் திலிருந்து தொடர்ச்சியாக அரசியல், பொருளாதாரம், சமயம், கலை வளர்ச்சி நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்களைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக காலனியாதிக்க காலத்தில் முதலில் தரங்கம்பாடி போர்த்துக்கீசிய குடியேற்றங்களை கொண்டதாகவும் 17 ஆம் நூற்றாண்டிலிருந்து டேனிஷ் நிர்வாகத்திற்குட்பட்டதாகவும், 19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டதாகவும் அரசியல் நிர்வாக முறைகளில் பல மாறுதல்களை சந்தித்தமையை அறிய முடிகிறது.

**–முனைவர் எஸ்.கௌரி சங்கர்,**
கடல் சார் வரலாறு மற்றும் கடல் சார் தொல்லியல்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



# ஒத்துழையாமை இயக்கமும் தமிழக மாணவர்களின் பங்களிப்பும்

கோ. ரெங்கராசு

**தங்களது நிறுவனங்களில் மலிவான கூலியில் வேலை செய்யவதற்கு ஆட்களைத் தெரிவு செய்வதற்காகவே, இந்தியாவில் மேற்கத்தியக் கல்வியை ஆங்கிலேயர் புகுத்தினர். மேற்கத்தியக் கல்வி கற்ற மாணவர்களுக்கு ஆங்கிலேயரின் பாரபட்சமான செயல்பாடுகளும், நிர்வாகக் கொள்கைகளும் அதிருப்தியை ஏற்படுத்தின. இத்தகைய சூழலில் ஒத்துழையாமை இயக்கம் ஏற்பட்ட போது, அறிவார்ந்த சமூகமான ஆசிரியர்களும், மாணவர்களும் அரசியல் ரீதியான பயணத்தை தன்னெழுச்சியாக முன்னெடுத்தனர்.**

கி.பி. 1757ஆம் ஆண்டு பிளாசிப் போரின் வெற்றி வங்காளத்தில் அரசியல் ரீதியான அதிகாரத்தை ஆங்கிலேயருக்குப் பெற்று தந்தது. வங்கத்தில் ஆரம்பித்து இந்தியா முழுவதும் தனது ஆக்டோபஸ் கரங்களால் ஆங்கிலேயர் விரவிப் பரவத் தொடங்கினர். இந்தியாவை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்த ஆங்கிலேயர்கள் தங்களது ஆதிக்கக் கொள்கைகளாலும், செயல்பாடுகளாலும் இந்திய மக்களின் வாழ்வாதாரத்தையும், சுதந்திரத்தையும் பறித்தனர். இந்நிலையில் கி.பி.1885ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரஸ் இந்திய மக்களின் மனதில் சுதந்திரத்திற்கான நம்பிக்கைக் கீற்றை விதைத்தது. இந்திய தேசிய காங்கிரசின் சுதந்திரப் போராட்டங்கள் மிதவாதம், தீவிரவாதம் என பல்வேறு கட்டங்களாக நடைபெற்றாலும் காந்தியடிகளின் வருகைக்குப் பின்னர் தான் மக்களின் ஏகோபித்த ஆதரவை காங்கிரஸ் பெற முடிந்தது என்றால் அது மிகையாகாது. காந்தியடிகளின் அகிம்சை மற்றும் சத்தியாகிரகப் போராட்ட வழிமுறைகள் இந்திய மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று ஆங்கிலேயரின் ஆணிவேரை அசைத்தன.

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் காந்திய சகாப்தத்தின் தொடக்கமாக அமைந்தது ஒத்துழையாமை இயக்கமாகும். கி.பி. 1920ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் அமர்வின் போது காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்க யோசனை அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும், இவ்வியக்கத்தை காந்தியின் தலைமையிலேயே துவங்கவும் முடிவெடுக்கப்பட்டது. முதல் உலகப்போர், ரௌலட் சட்டம், ஜாலியன்வாலாபாக் படுகொலை போன்ற தொடர் நிகழ்வுகளால் ஒத்துழையாமை இயக்கம் 1920 முதல் 1922 வரை இந்தியாவில் அனைத்துத் தரப்பு மக்களின் முழு ஆதரவோடு இந்தியா முழுவதும் நடத்தப்பட்டது.

நாடு முழுவதும் அனைத்துத் தரப்பு மக்களாலும் ஏற்று நடத்தப்பட்ட ஒத்துழையாமை இயக்கக் கிளர்ச்சி ஆங்கிலேயருக்கு முற்றிலும் ஆச்சரியத்தை அளித்தது. சுதேசிப் பொருள்கள் பயன்பாடு, அந்நியப் பொருள்கள் புறக்கணிப்பு, ஊர்வலங்கள், வேலை நிறுத்தங்கள், மனித சங்கிலி, பிரச்சாரங்கள் என இந்திய அளவில் மாபெரும் எழுச்சி அடைந்த ஒத்துழையாமை இயக்கம் தென்னிந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் வீறுகொண்டு செயல்பட்டது. அதிலும் மாணவர்களின் பங்களிப்பு வியத்தகு எழுச்சியை மக்களிடையே ஏற்படுத்தியது.

ஒத்துழையாமை இயக்கத்திற்கு மக்களின் ஆதரவைத் திரட்டுவதற்காகாக சென்னை வந்த காந்தியடிகள் மெரினா கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் எழுச்சிமிகு உரையாற்றினார். அவரின் பேச்சு



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

மக்களிடையே தேசிய உணர்வைத் ஊட்டியதுடன், ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்க மக்களைத் தூண்டவும் செய்தது. இந்தக் கூட்டத்தில் 400 மாணவர்கள் உட்பட 1500க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். அகிம்சை மூலம் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் எனவும் ஒத்துழையாமை இயக்கப் போராட்டங்களான சுதேசி, அந்நியப் பொருள்கள் புறக்கணிப்பு, வேலை நிறுத்தங்கள் பிரச்சாரங்கள் போன்றவற்றில் பெருமளவில் பங்கேற்க வேண்டும் எனவும் மக்களை அறிவுறுத்தினார்.

இந்தியாவில் மேற்கத்தியக் கல்வியை ஆங்கிலேயர் புகுத்தியதன் நோக்கமே தங்களது நிறுவனத்தில் பணி செய்ய மலிவான ஆட்களை தெரிவு செய்யவே ஆகும். ஆங்கிலேயரின் இத்தகைய நோக்கத்தை நிறைவேற்றும் மையங்களாக கல்வி நிறுவனங்களும் செயலாற்றி வந்தன. ஆனால், மேற்கத்தியக் கல்வி கற்ற மாணவர்களுக்கு ஆங்கிலேயரின் பாரபட்சமான செயல்பாடுகளும், நிர்வாகக் கொள்கைகளும் அதிருப்தியை ஏற்படுத்தின. இத்தகைய சூழலில் ஒத்துழையாமை இயக்கம் தமிழ்நாட்டில் ஏற்பட்ட போது அறிவார்ந்த சமூகமான ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தன்னெழுச்சியாக அரசியல் ரீதியான பயணத்தை முன்னெடுத்தனர். அச்சமயத்தில் காந்தியடிகள் ஆசிரியர்களும் மாணவர்களும் தேசிய உணர்வையும், விடுதலை உணர்வையும் பெறவேண்டும் எனவும் அவர்களின் ஆதரவு காங்கிரஸுக்கு இருக்க வேண்டும் எனவும் தேவை ஏற்படின் தங்களது தொழிலையும், படிப்பையும் கைவிட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

காந்தியடிகளின் பால் அன்பு கொண்ட தமிழக மாணவ சமூகத்தினர் வன்முறையற்ற ஒத்துழையாமைப் போராட்டத்தில் பெருமளவில் பங்கு கொண்டனர். ஆங்கிலேயரின் ஆதிக்கத்திலிருந்து இந்தியாவை விடுவிக்கும் கடமையாக மக்களைத் தட்டி எழுப்பும் பணியினை மேற்கொள்ளலாயினர். ஒத்துழையாமை இயக்க கால கட்டத்தில் பள்ளிக் கல்வி பயின்றோரின் எண்ணிக்கை 1,17,25,000 ஆகவும் உயர்கல்வி பயின்றோரின் எண்ணிக்கை 60,000 ஆகவும் இருந்தது. கல்வி நிறுவனங்கள் தேசிய உணர்வையும் தேச பக்தியையும் புகட்டும் மையங்களாக மாறின. சென்னைப் பல்கலைக்கழகமும், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் கல்வி அறிவையும் தேச உணர்வையும் வளர்ப்பதில் முன்னணியில் இருந்தன.

சென்னை இளைஞர் சங்கம் எனும் சட்டக் கல்லூரி மாணவர்களின் சங்கத்தின் கீழ் சென்னை மாகாண மாணவர்கள் ஒன்றிணையத் தொடங்கினர். இவர்கள் ஆங்கிலேயருக்கு எதிரான பல்வேறு எதிர்ப்புப் போராட்டடங்களில் ஈடுபட்டதுடன் சுதேசி மற்றும் அந்நியப் பொருள்கள் புறக்கணிப்புக் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்தனர். இவர்கள் காந்தியையும் நேரில் சந்தித்து, போராட்டம் பற்றிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக் கொண்டனர். அவர்களிடம் காந்தி, ‘போதுமான பதிலடி இருந்தால் ஆங்கிலேயர்கள் கீழே இறங்கி விடுவார்கள் நமது இலக்கை அடைவதில் நாம் வெற்றி பெறுவோம்’ என்றார்.

கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டில் அனைத்து மாகாணங்களிலும் மாணவர் தன்னார்வப் படையை உருவாக்க அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதன்படி சென்னை மாகாணத்தில் சென்னை, திருச்சிராப்பள்ளி, கடலூர், வாணியம்பாடி ஆகிய இடங்களில் தன்னார்வப் படை அமைக்கப்பட்டது. இதன் முக்கியமான பணிகளாக தன்னார்வலர்களைச் சேர்ப்பது, சுதேசிக் கொள்கை, அந்நியப் புறக்கணிப்பு ஆகியவை இருந்தன. ஆசிரியர்கள் தங்களிடம் பயிலும் மாணவர்களுக்கு தேசிய உணர்வை ஊட்ட வேண்டும் என்று காந்தியடிகள் கூறினார். இதன் விளைவாக ஆசிரியர்கள் தங்களது மாணவர்கள் ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுக்க உதவி புரிந்தனர். ஆசிரியர்களின் வழிகாட்டுதல்படி சென்னை மாணவர்கள் ‘தமிழர் தொண்டர்படை” ஒன்றை அமைத்தனர். மாணவர்கள் ஒத்துழையாமை இயக்கக் கருத்துக்களை மக்களிடையே பரப்ப பேரணிகளும், கூட்டங்களும், ஊர்வலங்களும், புறக்கணிப்புகளும் தான் சிறந்தது எனக் கருதிச் செயல்பட்டனர்.

சென்னையில் நடைபெற்ற மாணவர் மாநாட்டில் திருமதி.சரோஜினி நாயுடு அவர்கள் 18 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் அனைவரும் அரசுப் பள்ளிகளை விட்டு வெளியேற வேண்டும் எனவும், மற்றவர்கள் தன்னார்வலராகச்



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

செயல்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தினார். தேசிய உணர்வை மாணவர்கள் மனதில் ஏற்படுத்தும் வகையில் சென்னை நகர மாணவர்கள் ஊர்வலங்களை மேற்கொண்டனர்.

சென்னை மாநிலக் கல்லூரி மாணவர்கள் அமைதியான அணிவகுப்புப் பேரணியை நடத்தினர். இராஜாஜி தலைமையில் 1920 நவம்பரில் நடைபெற்ற மாணவர்கள் கூட்டத்திற்கு மாநிலக்கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். சென்னை லயோலா கல்லூரி மாணவர்கள் 500க்கும் மேற்பட்டோர் பொதுமக்களுக்கு ஒத்துழையாமைத் திட்டங்களை விளக்கிக் கூறுவதற்காக ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தனர். இதில் போலீசார் தடியடி நடத்தி மாணவர்களைக் கலைத்தனர். சென்னை கிறித்துவக் கல்லூரி மாணவர்கள் 'வந்தே மாதரம்', காந்தி கி ஜே என கோஷமிட்டு முக்கிய சாலைகளில் ஊர்வலங்களை நடத்தினர். சுதேசி ஆதரவு, அந்நியப் புறக்கணிப்பு ஆர்ப்பாட்டங்களில் சென்னை லயோலா கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் முன்னணியில் இருந்தனர். பொதுமக்களிடையே தேசிய உணர்வைத் தூண்ட ஊர்வலங்களையும், வீடுதோறும் பிரச்சாரங்களையும் மேற்கொண்டனர். லயோலா கல்லூரி மாணவர்கள் சுதேசி அரங்கு ஒன்றை ஏற்படுத்தி சுதேசிப் பொருள்களை விற்பனை செய்தனர். சென்னை திருவல்லிக்கேணி கடற்கரைப் பகுதியில் நடைபெற்ற மாணவர்கள் கூட்டத்தில் ஆர்.சின்னசாமி, அப்பன் நாயர், ஹமீத்கான் போன்றோர் மாணவர்களிடையே இந்தியா விடுதலை அடையும் வரை தொடர்ந்து உழைக்குமாறு அழைப்பு விடுத்தனர்.

திருச்சி புனித ஜோசப் கல்லூரி மாணவர்கள் சங்கத்தின் சிறப்பு அமர்வின்படி ஒத்துழையாமை இயக்கத்திற்கு ஆதரவாக பல மாணவர்கள் கல்லூரியை விட்டு வெளியேறினர். சதாசிவம், தியாகராஜன், கிருஷ்ணசாமி வெங்கடராமன், முகமது உஸ்மான் போன்றோர் கல்லூரிப் படிப்பைக் கைவிட்டனர். திருச்சியில் மாணவர்கள் பேரணி நடத்தி காந்தியின் சத்யாகிரகம் பற்றி உரை நிகழ்த்தினர். திருச்சி தேசியக் கல்லூரி மாணவர்கள் ஊர்வலங்கள் நடத்தி ஒத்துழையாமைக் கருத்துக்களைப் பரப்பினர். சிதம்பரம் மீனாட்சி கல்லூரி மாணவர்கள் அருகிலிருந்த கள்ளுக்கடைக்குச் சென்று மறியலில் ஈடுபட்டனர். திருநெல்வேலி இந்துக் கல்லூரி மாணவர்கள் வகுப்புகளைப் புறக்கணிப்பு செய்ததுடன், அந்நியத் துணிக்கடைகளை முற்றுகையிட்டும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரி மாணவர்கள் ஒரு அமைப்பை உருவாக்கி, அதில் 200க்கும் அதிகமான மாணவ, மாணவிகளைச் சேர்த்து, தெருமுனைக் கூட்டங்கள், உள்ளரங்க அரசியல் கூட்டங்கள் ஆகியவற்றை நடத்தினர். சௌகத் அலி என்பவர் இதற்குத் தலைமை தாங்கினார். வாணியம்பாடி உள்ளூர் இஸ்லாமிய பள்ளி மாணவிகள் அரசியல் பிரச்சாரக் கூட்டத்தை நடத்தினர். கும்பகோணம் கல்லூரி மாணவ, மாணவிகளும், எஸ்.பி.ஜி.கே. பள்ளி மாணவர்களும் தேசபக்திப் பாடல்களைப் பாடியபடி ஊர்வலம் மேற்கொண்டனர். மேலும் கிராமங்களில் உள்ள பொதுமக்களுக்கு சுதேசிப் பொருள்களைப் பயன்படுத்துவதின் நன்மைகளையும் அந்நியப் புறக்கணிப்பின் அவசியத்தையும் விளக்கினர்.

இவ்வாறாக சென்னை நகரக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் திருச்சி, திருநெல்வேலி கல்லூரிகளின் மாணவர்கள், கோயமுத்தூர், கும்பகோணம் அரசு கல்லூரி மாணவர்கள் தீவிர அரசியல் கூட்டங்கள், அந்நியப் புறக்கணிப்பு, சுதேசிப் பிரச்சாரம், கள்ளுக்கடை மறியல் போன்றவற்றில் ஈடுபட்டனர். அரசாங்கத்தின் அடக்குமுறை, எதிர்காலம் பற்றியெல்லாம் மாணவர்கள் கவலைப்படவில்லை. கைது நடவடிக்கை, இடைநீக்கம் என கடுமையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்த போதும் தங்களின் வீரியம் குறையாது மாணவர்கள் எழுச்சியடைந்தனர். ஆங்கிலேயரின் ஒடுக்குமுறைக்கும் சுரண்டல்களுக்கும் எதிராகத் தொடர்ந்து போராடினர். எனினும் கி.பி.1922இல் சௌரி சௌரா நிகழ்வினால் ஒத்துழையாமை இயக்கம் இடைநிறுத்தம் செய்ததால் மாணவர்களின் நடவடிக்கைகள் படிப்படியாகக் குறைந்தன.

**– முனைவர் கோ. ரெங்கராசு,**

இணைப் பேராசிரியர், முதுகலை மற்றும் வரலாற்று ஆராய்ச்சித்துறை,
இரா.வே.அரசு கலை கல்லூரி,
செங்கல்பட்டு.



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



# இளைஞர்களும் ஆரோக்கியமும்


– சந்திரகாந்த் லஹரியா
ரோட்னி வாஸ்
தீப் பிரியா லால்

வரையறைகள் பலவகைகளாக இருந்தபோதிலும் கூட இளைஞர்கள் என்பவர்கள் 15 வயது முதல் 44 வயது வரையுள்ள பிரிவைச் சேர்ந்த தனிநபர்களாகவே கருத்தில் கொள்ளப்படுகிறார்கள். எனவே இந்த வயதுப் பிரிவில் வளர்இளம் பருவத்தின் நிறைவுக் காலகட்டத்தைச் சேர்ந்தவர்களும் (15 முதல் 19 வயது வரை) வயதுவந்தோர் பிரிவில் தொடக்கநிலையைச் சேர்ந்தவர்களும் (20 முதல் 44 வயது வரை) உள்ளடங்குகிறார்கள். நோய்வாய்ப்படுதல், இறப்பு ஆகியவை இந்த வயதுப் பிரிவில் குறைவாகவே உள்ளதால் மக்கள் தொகையின் துணைப்பிரிவுகளில் இளைஞர்களே மிகுந்த ஆரோக்கியம் உடையவர்களாக விளங்குகிறார்கள். எனினும், இந்த வயதுப் பிரிவுக்கே பொதுவாக உள்ள சாலை விபத்தில் காயம் அடைதல் போன்ற சில ஆரோக்கியப் பிரச்சினைகளும் இருக்கத்தான் செய்கின்றன. அதேசமயம், இந்த வயதுப்பிரிவில் கடைபிடிக்கப்படும் ஆரோக்கியம் சார்ந்த நடத்தையே பிற்கால வாழ்வின் ஆரோக்கிய நிலைமையை நிர்ணயிக்கின்றது.

### இளைஞர்களின் முக்கிய ஆரோக்கியப் பிரச்சினைகள்

இந்தியாவைப் பொறுத்தவரையில் நாட்டின் மக்கள்தொகையில் சுமார் பாதி அளவிற்கு இளைஞர்களே உள்ளனர். பல்வேறு தொழில் பிரிவுகளில் வேலை செய்கின்ற அதிகமான உற்பத்தித்திறன் கொண்ட வயதுப் பிரிவினராக இளைஞர்கள் இருப்பதினால் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இவர்களே பெருமளவில் பங்களிப்பினைச் செய்கின்றார்கள். இந்தியாவில் பொருளாதார வளர்ச்சிக்கான எதிர்கால வாய்ப்பு என்பது நாட்டில் உள்ள செயலூக்கமான மற்றும் அதிகத் தொழில்திறன் கொண்ட இளைஞர்களை அடிப்படையாகக் கொண்டே நிர்ணயிக்கப்படுகிறது. உடலியல் நிலை, நடத்தைகள், உணவுமுறைகள், பணி மற்றும் இதர காரணிகள் போன்றவற்றின் காரணமாக இளைஞர்கள் பல்வேறு ஆரோக்கியப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இவற்றில் பெரும்பாலானவை அவர்களது நடத்தை சார்ந்த பழக்கவழக்கங்களால் ஏற்படுவதாகும். இளைஞர்கள் எதிர்கொள்கின்ற சில முக்கியமான ஆரோக்கியப் பிரச்சினைகள் இங்கு தரப்படுகின்றன

1. மனநலம்: இந்த வயதுப் பிரிவினருக்கான முக்கிய சவாலாக மனநலமே உள்ளது. மனநலத்திற்கான சிகிச்சை சேவைகள் கிடைக்காமல் இருப்பது, ஆரோக்கியப் பராமரிப்பில் மனநலத்திற்கு முக்கியப் பங்குள்ளது என்பதை அங்கீகரிக்காத நிலைமை போன்ற பல்வேறு காரணங்களால்தான் மனநலம் சவாலாக உள்ளது. வளர்இளம் பருவத்தினர் மற்றும் இளம் வயதுவந்தோர் இடையே நோய் ஏற்படவும் ஊனம் ஏற்படவும் உள்ள முன்னணி காரணிகளில் ஒன்றாக தற்கொலைக்கு அடுத்து இந்த மனஅழுத்தத்திற்கு சிகிச்சை தேவைப்படுகிறது.



தகுதி சார்ந்த செயல்திறன் அல்லது பணியிடம் சார்ந்த செயல்திறன் குறைவாக இருப்பது, வன்முறை, வறுமை, வேலையின்மை, களங்கம் ஏற்படுத்துதல், விளிம்புநிலைக்குத் தள்ளப்படுதல், புறக்கணிக்கப்படுதல், மனிதநேயம் சார்ந்த நெருக்கடிகள் மற்றும் கோவிட்19 சூழல் உள்ளிட்டவை மனநலப் பிரச்சினைகளுக்குக் காரணங்களாக உள்ளன.

2. மது மற்றும் போதைப் பொருள் பழக்கம்: மதுப்பழக்கம் மற்றும் போதைப் பொருள் பழக்கம் அதிலும் குறிப்பாக நரம்புகள் வழியாக செலுத்தப்படும் போதைப் பொருள் பழக்கமானது நோய்



https://www.tnpscthervuthunaivan.com/

ஏற்படுத்தக் கூடிய அதிக ஆபத்துக்காரணி கொண்ட நடத்தைகளோடு பெருமளவில் தொடர்பு உடையதாக இருக்கின்றது. இந்தப் பழக்கமானது ஹெச்.ஐ.வி / எய்ட்ஸ், உயர்இரத்த அழுத்தம், இதயநாள நோய்கள் மற்றும் கல்லீரல் நோய்கள் போன்ற தொற்றும் நோய்களுக்கும், தொற்றாத நோய்களுக்கும் காரணமாகின்றது. போதைப் பொருள் பயன்படுத்துகின்ற இளைஞர்களால், போதைப்பொருள் பழக்கத்தைத் தொடர்ந்து ஏற்படக்கூடிய பொருளாதார நெருக்கடியினால் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் மனநலப் பாதிப்புக்கு ஆளாகின்றார்கள்.

3. புகையிலைப் பழக்கம்: புகையிலையை எந்தவொரு வகையிலும் பயன்படுத்தக் கூடிய (புகைப்பிடித்தல் அல்லது மெல்லுதல்) தனிநபர்களில் பெரும்பான்மையோர் இந்தப் புகையிலைப் பழக்கத்தை தங்களது வளர்இளம் பருவத்திலேயே பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். இந்தப் பழக்கமானது பெரும்பாலும் மதுஅருந்துதல் பழக்கத்தைச் சார்ந்தே உள்ளது. இந்த இரண்டு பழக்கமும் சேரும் போது குறிப்பிடத்தக்க பல்வேறு வகையான நோய்கள் ஏற்படுவதற்கான ஆபத்துக்காரணி அதிகரிக்கின்றது. புகையிலைப் பயன்பாடு என்பது வாய்ப் புற்றுநோய், தொண்டைப் புற்றுநோய், உணவுக்குழல், நுரையீரல் புற்றுநோய் ஆகியவற்றிற்குக் காரணமாவதோடு ஏனைய பல்வேறு வகையான சுகாதாரப் பிரச்சினைகளையும் உருவாக்குகின்றது. இதனோடு கூடவே, புகையிலையைப் பயன்படுத்துதல் என்பது உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு, இதய நோய்கள், பக்கவாதம், இருதய நாள நோய்கள் முதலானவை ஏற்படுவதற்கான ஆபத்துக்காரணிகளை அதிகரிக்கச் செய்கின்றது.

4. உடல் உழைப்பு இன்மை: இளம் வயது வந்தோரில் 20 சதவிகிதம் நபர்கள் மட்டுமே போதுமான உடற்பயிற்சி மேற்கொள்வதாக அல்லது ஒரு நாளைக்கு 30 நிமிடங்களுக்கும் கூடுதலாக அல்லது வாரத்திற்கு 5 நாட்கள் விளையாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக ஆய்வில் கண்டறியப்பட்டு உள்ளது. பல்வேறு காரணிகளால் உடற்ப யிற்சி செய்யாமல் இருப்பது என்பது குறிப்பாக பெண்களிடம் அதிக அளவில் உள்ளது. உடல் பருமன், உயர்ரத்த அழுத்தம், நீழிரிவு, இதயநோய்கள் மற்றும் நாட்பட்ட ஏனைய நோய்கள் உள்ளிட்ட நோய்கள் ஏற்படுவதற்கான ஆபத்துக் காரணிகளை உடல் உழைப்பு இன்மையானது அதிகரிக்கச் செய்கின்றது. அதுமட்டுமல்லாமல் உடல் உழைப்பு இன்மை என்பது மனநலத்தை பாதிப்பதாகவும் உள்ளது.

5. நீரிழிவு மற்றும் உயர் ரத்த அழுத்தம்: வயதுவந்தோரில் 10இல் ஒருவருக்கு நீரிழிவு நோய் இருக்கும் நிலையில் நீரிழிவு நோய் இப்போது பெருவாரியான நோயாக உருவாகி வருகின்றது. இந்தியாவில் வயது வந்தோரில் 5இல் ஒருவருக்கு உயர் ரத்த அழுத்தம் உள்ளது. இந்த இரண்டு நிலைகளிலும் பெரும்பான்மையோர் தங்களுக்கு நீரிழிவு நோய் அல்லது உயர் ரத்த அழுத்தம் உள்ளது என்பதை அறியாமலேயே இருக்கின்றனர். இதற்கு முன்பு இருந்ததை விட அண்மை ஆண்டுகளில் இளைஞர்களுக்கு மிகவும் இளம் வயதிலேயே நீரிழிவு நோய் ஏற்படுகின்றது. மிகக் குறைவான உடல் உழைப்பு, ஆரோக்கியமற்ற உணவு, மரபியல் முதலானவையே இதற்கு முதன்மையான காரணங்களாக அமைகின்றன. நீரிழிவு மற்றும் உயர் ரத்த அழுத்தம் என்ற இந்த இரண்டு ஆபத்துக் காரணிகளும் இந்தியாவில் இதயநோய் ஏற்படும் வாய்ப்பை அதிகரிக்கின்றன.

6. ஏனைய ஆரோக்கியப் பிரச்சினைகள்: விபத்தால் ஏற்படக்கூடிய காயங்கள், தனக்குத் தானே ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய காயங்கள், பணியிடம் சார்ந்த விபத்துகள் முதலானவை இதில் உள்ளடங்கும். நேருக்கு நேரான வன்முறை, குடும்பத்தில் ஏற்படும் வன்முறை, பணியிடத்தில் ஏற்படும் வன்முறை, வலுக்கட்டாயமாகத் துன்புறுத்துதல் / ராக்கிங், பாலியல் வன்முறை மற்றும் இது போன்றவை ஏற்படுகின்றன.

இளம் பருவத்தில் தொடக்க காலத்திலேயே இத்தகைய ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏற்படுவது என்பது, நீண்டகாலம் கழித்து அதாவது வயதான காலத்தில் பாதிப்புகளை ஏற்படுத்துவதோடு நாட்பட்ட நோய்கள் ஏற்படுவதற்கும் காரணமாகின்றது. இளம் பருவத்திலேயே இத்தகைய நோய்கள் ஏற்படுவதால் வாழ்நாள் குறைவதோடு வாழ்க்கைத் தரமும் குறைகிறது. மேலும் செலவுகளும் அதிகரிக்கின்றன. இவையெல்லாம் இணைந்து இளமையிலேயே கடும் சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. சில சமயங்களில் இது மரணத்திற்கும் வழிவகுக்கிறது.

**இளைஞர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல்**

ஆரோக்கியமான வாழ்க்கைக்கு மூன்று இரகசியங்கள் உள்ளன:

https://www.tnpscthervuthunaivan.com/

சமச்சீர் உணவு, தொடர்ச்சியான உடற்பயிற்சி, போதுமான தூக்கம் ஆகிய இவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அம்சங்கள் இன்றைய இளைஞர்களுக்குப் போதாமையாக உள்ளன. சுகாதாரத்துறை மற்றும் இதர துறைகள் சார்ந்த அரசின் முன்னெடுப்புகள் தொடர்ச்சியாக இருந்து வருகின்ற நிலையிலும் கூட இளைஞர்களின் முழு கவனமும் இதில் செலுத்தப்படவில்லை. ஆயுஷ்மான் பாரத் திட்டமானது ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு மையங்களை நடத்தி வருகின்றது. இந்தத் திட்டம் நிரோகி (nirogi) என்கின்ற ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மேற்கொள்வதன் மூலம் நோய் வராமல் தடுக்கலாம் என்ற அம்சத்திற்குக் கவனம் தருகின்றது. ஃபிட் இந்தியா (Fit India) என்ற முன்னெடுப்புத் திட்டமானது இளைஞர்கள் உள்ளிட்ட மக்களின் உடற்பயிற்சிப் பழக்கவழக்கங்களை அதிகரிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது. இளைஞர்கள் மற்றும் அனைவரின் தினசரிப் பழக்கவழக்கங்களில் இந்த முன்னெடுப்பு நடவடிக்கைகள் அனைத்தும் இடம்பெற வேண்டும்.

ஆரோக்கியமான இளைஞர்கள் என்பதை இலக்காகக் கொண்ட அரசின் முன்னெடுப்புத் திட்டங்கள்

வரிசை எண்

திட்டங்கள் / முன்னெடுப்பு நடவடிக்கைகள் திட்டத்தின் சிறப்பம்சங்கள்

1. ராஷ்டிரிய கிஷோர் ஸ்வஸ்தய காரியகிரம்

ஆரோக்கிய மேம்பாட்டு அணுகுமுறையே இந்தத் திட்டத்திற்கு வலுசேர்க்கின்ற முதன்மையான அம்சமாகும். • இந்தத் திட்டமானது மருத்துவமனை சார்ந்த சிகிச்சை முறை என்ற அணுகுமுறையில் இருந்து மர் நோய் வராமல் முன்கூட்டியே தடுத்தல் என்பதையும், ஆரோக்கிய மேம்பாட்டு அணுகுமுறைகளையும் கவனத்தில் கொள்கின்றது. வளர்இளம் பருவத்தினரின் சமூகத் தொடர்பு அல்லது குடும்பங்கள் அல்லது பள்ளிக்கூடங்கள் ஆகியவை உள்ளிட்ட அவர்களின் இயல்பான சுற்றுச்சூழலிலேயே இந்தத் திட்டம் அவர்களுக்குப் பயன் அளிப்பதாக உள்ளது.

2. வளர் இளம் பருவத்தினருக்கு ஏற்ற ஆரோக்கிய கிளினிக்குகள் (AFHC) பாலியல் ஆரோக்கியம், இனப்பெருக்க ஆரோக்கியம் முதல் காயங்கள், வன்முறை, போதைப் பொருள் பயன்பாடு, ஊட்டச்சத்து, தொற்றா நோய்கள் முதலானவை வரையிலான அனைத்து ஆரோக்கியப் பிரச்சினைகளையும் இது உள்ளடக்கிக் கொண்டுள்ளது. • இந்த ஆரோக்கிய கிளினிக்குகளின் உட்கூறுகள் என்பவை ஏற்றுக்கொள்ளத்தக்கவை, அனைவருக்கும் சமமானவை , அனைவராலும் எளிதாக அணுக முடிந்தவை, பொருத்தமானவை மற்றும் விரிவானவை ஆகும்.

3. சமவயதினர் கல்வித் திட்டம் • தேசிய சுகாதாரத் திட்டமான (Rashtriya Kishore Swasthya Karyakram) RKSK திட்டத்தின் மூலம் வளர்இளம் பருவத்தினர் பயன்பெறுவதை தேர்ந்தெடுக்கப்பட்ட சமவயதுக் கல்வியாளர்கள் உறுதிசெய்ய வேண்டும். இந்த சமவயதுக் கல்வியாளர்கள் “சாத்யா” (‘Saathiya’) என்று அழைக்கப்படுகிறார்கள். • வளர்இளம் பருவத்தினர் அனைவருக்கும் இந்தத் திட்டத்தின் பலன் கிடைக்கும் வகையில் ஒரு கிராமம் / 1000 மக்கள் தொகை / ஆஷா பணியாளர் குடியிருப்புப் பகுதிக்கு நான்கு சமவயதுக் கல்வியாளர்கள் (இரண்டு சிறுவர்கள் மற்றும் இரண்டு சிறுமிகள்) தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

4. மாதவிடாய் நாட்களின் சுத்தத்திற்கான திட்டம்

வளர்இளம் பருவத்தினரிடையே மாதவிடாய் நாட்களின் சுத்தத்தை மேம்படுத்தும் வகையில் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் (MoHFW) ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது. அணையாடைகள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதோடு அது அனைவருக்கும் கிடைப்பதையும் அவற்றைப் பயன்படுத்துவதையும் அதிகரிக்க வேண்டும் என்பதில் இந்தத் திட்டம் முக்கியமாக கவனம் செலுத்துகிறது. அதே போன்று பயன்படுத்திய அணையாடைகளைப் பாதுகாப்பாக அப்புறப்படுத்துவது குறித்த விழிப்புணர்விலும் இந்தத் திட்டமானது கவனம் செலுத்துகிறது.

5. ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு மையங்கள்

முன்தடுப்பு மற்றும் ஆரோக்கிய மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்ற விரிவான ஆரோக்கிய அணுகுமுறையை ஆரோக்கிய மற்றும் நல்வாழ்வு மையங்கள் ஊக்குவிக்கின்றன.

6. ஃபிட் இந்தியா (FIT India) விளையாட்டுகளில் ஈடுபடுதல், அது போன்ற பிற நடவடிக்கைகளில் ஈடுபடுதல், ஆகியவற்றின் மூலம் இளைஞர்கள் ஆரோக்கியமான வாழ்க்கை முறையைக் கடைபிடிக்க வேண்டும் என்பதை இந்த முன்னெடுப்புத்



https://www.tnpscthervuthunaivan.com/

திட்டமானது குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

7. ஏனைய ஆரோக்கியத் திட்டங்கள் புற்றுநோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கான தேசியத் திட்டம், நீரிழிவு, இருதய நாள நோய்கள், பக்கவாதம் (National Programme for Prevention and Control of Cancer, Diabetes, Cardiovascular diseases and Stroke - NPCDCS), இனப்பெருக்கம், பேறுகாலம், பச்சிளம் குழந்தை, குழந்தை பிளஸ் வளர்இளம் பருவத்தினர் ஆரோக்கியத் திட்டம் ( Reproductive, Maternal, Newborn Child plus Adolescent Health ( -MNCH+A), தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் (National Aids Control Programme - NACP), தேசிய மனநலத் திட்டம் (National Mental Health Programme - NMG) மற்றும் இது போன்ற பல்வேறு ஆரோக்கிய மேம்பாட்டுத் திட்டங்கள் இளைஞர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக செயல்பாட்டில் உள்ளன.

இளைஞர்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்பதை மக்கள் இயக்கமாகச் செயல்படுத்துதல்

இந்த வயதுப் பிரிவினரின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு சாத்தியமாகக் கூடிய ஒவ்வொரு அம்சத்தையும் சரியான அளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், பணியிடங்கள் மற்றும் ஏனைய இடங்களில் இடையீட்டுச் செயல்பாடுகள் இதற்குத் தேவைப்படுகின்றன. பள்ளிகளில் சுகாதாரச் சேவைகளை வலுப்படுத்துவதற்கான தேவையும் எழுகின்றது. இன்றைய நாட்களில் பல்வேறு வகையான நோய்கள் அதிகரித்து வரும் சூழலில் பள்ளி சுகாதாரச் சேவை என்பது தொடக்கநிலை சிகிச்சை சேவையாக இருக்க வேண்டும். அதே போன்று கல்லூரி மாணவர்களிடையே ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு அமைப்பாக்கப்பட்ட திட்டம் அல்லது அவர்களின் ஆரோக்கியத்தை கவனத்தில் கொண்ட திட்டம் என எதுவும் இல்லை. இந்த வயதுப் பிரிவு என்பது சந்தேகங்களும், கவலைகளும் நிரம்பிய பருவம் ஆகும். மனநலம், பாலியல் ஆரோக்கியம், போதைப் பொருள், தனிநபர் சுகாதாரம் போன்றவை தொடர்பான கேள்விகளில் பெரும்பாலானவற்றிற்கு இந்த வயதினருக்கு விடையே கிடைப்பது இல்லை.



பணியிடங்களில் உள்ள ஓய்வறைகளில் எடை பார்க்கும் இயந்திரத்தை நிறுவுதல், பணியாளர்கள் உடற்பயிற்சி செய்வதற்கான நேரத்தை ஒதுக்கித் தருதல், பெரிய அலுவலகங்களில் உடற்பயிற்சிக் கருவிகளை நிறுவுதல் மற்றும் அதே போன்று அலுவலக உணவகங்களில் ஆரோக்கியமான உணவுகள் கிடைப்பதை ஊக்கப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் பணியிட ஆரோக்கியம் மேம்படுத்தப்பட வேண்டும். ஒருவர் உடல்நிலை சரியில்லை என்று உணரும் போதே அவருக்கு உடனடியாக சிகிச்சை அளிக்க முன்வரும் வகையில் அலுவலக நடைமுறைகள் இருக்க வேண்டும். பணியிடங்களில் மனஅழுத்தத்தைக் குறைக்கும் வகையிலான கொள்கைகள் மேம்படுத்தப்பட வேண்டும். சுயமாகவே அடிக்கடி மருத்துவம் பார்த்துக் கொள்ளும் இளைஞர்களின் ஆரோக்கியத் தேடல் சார்ந்த நடத்தையை மேம்படுத்த வேண்டிய தேவையும் உள்ளது. இந்தியாவில் இளைஞர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில் குடும்பத்தினர் மற்றும் சமூகத்தினரின் பங்கேற்பையும் அதிகரிக்க வேண்டும்.

**ஆரோக்கியமான வாழ்க்கைமுறை**

மனநலமும் இளைஞர்களும் என்பதில் இருந்து நாம் ஆரோக்கியமான வாழ்க்கைமுறை என்பதைத் தொடங்குவோம். மனநலப் பாதிப்பு என்ற வார்த்தையோடு களங்கப்படுத்துதல் என்பது பின்னிப்பிணைந்துள்ளது. அதனால் தான் மனநலப் பிரச்சினைகளுக்கு மக்கள் சிகிச்சை எடுத்துக்கொள்ள முன்வருவது இல்லை. மனம்சார்ந்த நோய்கள் என்பவை உடல்சார்ந்த நோய்களைப் போன்றதே ஆகும். பயிற்சி பெற்ற மருத்துவர்கள் வழங்கும் சரியான ஆலோசனைகள் மற்றும் மருந்துகள் மூலம் உடல்நலப் பிரச்சினைகள் மற்றும் மனநலப் பிரச்சினைகள் இரண்டையுமே குணப்படுத்த முடியும். மனநலப் பாதிப்பு குறித்து பேசுவதற்கு ஏற்ற நேரம் இதுவே ஆகும். மனநோயாளிகளைக் களங்கப்படுத்துவதைத்

https://www.tnpscthervuthunaivan.com/

தவிர்ப்போம். உங்களுக்கு மனநலப் பிரச்சினைகள் ஏதாவது இருந்தால் அதற்கு மருத்துவரின் உதவியை நாடவும். இதைத் தவிர்க்கவோ அல்லது தாமதப்படுத்தவோ வேண்டாம். மன ஆரோக்கியத்தோடு தொடர்புடைய களங்கப்படுத்துதலை நாம் நீக்குவோம்.

முறையான தொடர்ச்சியான உடற்பயிற்சி என்பது செலவில்லாத முயற்சியாகும். சிறப்பான ஆரோக்கியத்திற்கு ஒருவர் இதை மேற்கொண்டாக வேண்டும். உலக சுகாதார நிறுவனம் மற்றும் ஏனைய பல சுகாதார முகமைகளின் கூற்றுப்படி மக்கள் ஒவ்வொரு வாரமும் குறைந்தபட்சம் 150 நிமிடங்கள் வரை இரத்தத்தில் உயிர்க்காற்றின் அளவை அதிகரிக்கக்கூடிய மிதமான 'ஏரோபிக்' உடற்பயிற்சியை மேற்கொள்ள வேண்டும் அல்லது வாரந்தோறும் 75 150 நிமிடங்களுக்கு அதிதீவிர ஏரோபிக் உடற்பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். சர்வதேச அளவில் ஒப்பீட்டுப் பார்த்தால் உடற்பயிற்சி செய்வது குறைவாக உள்ள நாடுகளில் இந்தியா எட்டாவது இடத்தில் உள்ளது. வளர்இளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்களில் நான்கில் மூன்று பேர் கொடுக்கப்பட்டுள்ள பரிந்துரைகளின்படி போதுமான உடற்பயிற்சியை மேற்கொள்வதில்லை என்று அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. உடற்பயிற்சி செய்யாமல் இருப்பதற்குத் தடைக்கற்களாக தனிநபர் குணாதிசயங்களும். விளைவுகளை தவறான முறையில் புரிந்து கொள்ளுதலும், சமூகக் கலாச்சாரப் பின்னணியும், நேரமின்மையும் இவை போன்ற வேறு பல காரணங்களும் உள்ளன. இத்தகைய தடைக்கற்களை கண்டறிவதும் அவற்றை நீக்குவதும் இன்றியமையாததாக உள்ளது.

தொடர்ச்சியான மற்றும் குறைந்தபட்சம் ஆறு முதல் எட்டு மணி நேரத் தூக்கம் என்பது நமது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது, மனஅழுத்தத்தைக் குறைக்கிறது மற்றும் பல சுகாதாரப் பிரச்சினைகளில் இருந்தும் நம்மை அது காக்கின்றது. எனவே, ஒருவரின் தூக்கச் சுழற்சி என்பது சீரானதாக இருக்க வேண்டும். தினசரி மற்றும் வாராந்திர அடிப்படையில் போதுமான தூக்க நேரத்தை உறுதி செய்வதே ஒவ்வொருவரின் அணுகுமுறையாக இருக்க வேண்டும்.

### விளையாட்டு, ஆரோக்கியம் மற்றும் இளைஞர்கள்

முன்னணி சுகாதார அமைப்பான உலக சுகாதார நிறுவனமானது விளையாட்டுக்கள் மற்றும் ஆரோக்கியத் திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது. விளையாட்டுகளில் ஈடுபடுவதை மேம்படுத்துதல், விளையாட்டுச் சமூகத்தினருடன் இணைந்து பணியாற்றுதல் மூலம் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை முன்னெடுப்பதற்காக மக்களின் ஆற்றலை பயன்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். பல்வேறு விளையாட்டுகள் மூலமான உடற்பயிற்சி என்பது தன்னம்பிக்கையை அதிகரிக்கிறது, சமூகத் தொடர்பை அதிகரிக்கிறது, உளசமூக மேம்பாடு மற்றும் தனிநபர் மேம்பாட்டை முன்னெடுக்க உதவுகிறது, போதைப் பொருள் பயன்பாட்டைத் தடுக்க உதவுகிறது என நிரூபிக்கப்பட்டுள்ளது.

### முடிவுரை

இந்தியாவைப் பொறுத்தவரையில் நமது மக்கள் தொகையில் சுமார் பாதி அளவிற்கு இளைஞர்கள் உள்ளனர். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் இவர்களே அடித்தளமாக விளங்குகின்றனர். மக்கள் ஆரோக்கியமாக இருக்கின்றனர் என்ற போதிலும் கூட இளைஞர்கள் தங்களின் வயது, நடத்தை மற்றும் ஏனைய காரணிகளின் காரணமாக பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்து வருகின்றனர். இவை அவர்களின் வயதான காலத்தில் நீண்டகால பாதிப்பை ஏற்படுத்தக் கூடும். இளைஞர்களிடம் ஆரோக்கிய பாதிப்பு ஏற்படுவதைத் தடுத்தல் என்பது தனிநபர் நிலையிலும் குடும்ப நிலையிலும், தேசிய அளவிலும் நீண்டகாலப் பலன்களை ஏற்படுத்தும். ஆரோக்கியமான வாழ்க்கை முறை, முறையான தொடர்ச்சியான உடற்பயிற்சியை மேற்கொள்ளுதல், ஆரோக்கிய மேம்பாடு, நோய் முன்தடுப்பு ஆகிய நடவடிக்கைகளை கவனத்தில் கொண்டதாக இளைஞர்களை மையமாகக் கொண்ட கொள்கைகள் இருக்க வேண்டும். இன்றைய ஆரோக்கியமான இளைஞர்களே நாளைய ஆரோக்கியமான நாட்டை உருவாக்க முடியும்.

**– டாக்டர் சந்திரகாந்த் லஹரியா,**

மக்கள் மைய ஆரோக்கிய அமைப்புகளுக்கான அறக்கட்டளையின் நிறுவன இயக்குநர், மூத்த மருத்துவ ஆலோசகர். உலக சுகாதார நிறுவனத்தில் 15 ஆண்டுகள் பணி புரிந்தவர்.

**டாக்டர் ரோட்நி வாஸ், டாக்டர் தீப் பிரியா லால்**

இருவரும் புதுதில்லியில் உள்ள லேடி ஹார்டிங் மருத்துவக் கல்லூரியில் மருத்துவர்களாகவும் பொதுசுகாதார நிபுணர்களாகவும் பணி செய்கின்றனர்.



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



# கால்பந்து உலகம்

– ஷிவேந்திர சதுர்வேதி

உலகின் புகழ்பெற்ற விளையாட்டுப் போட்டிகளில் ஒன்று கால்பந்துப் போட்டி. மக்கள் ஆதரவின் அடிப்படையில் பார்த்தால் இந்தியாவிலும் முதன்மையான விளையாட்டுகளில் ஒன்றாகவே கால்பந்து எப்போதும் திகழ்ந்து வருகிறது. 19வது நூற்றாண்டில் கால்பந்துப் போட்டிகளை விளையாடத் தொடங்கிய ஒரு சில நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்தியாவில் தேசிய கால்பந்து லீக் போட்டிகள் 1996ஆம் ஆண்டிலும், ஐ லீக் போட்டிகள் 2007ஆம் ஆண்டிலும் இந்தியன் சூப்பர் லீக் அதாவது ஐஎஸ்எல் லீக் போட்டிகள் 2014ஆம் ஆண்டிலும் தொடங்கப்பட்டன.

சர்வதேசக் கால்பந்து சங்கங்களின் கூட்டமைப்பால் நடத்தப்படும் ஃபிபா (FIFA) எனப்படும் உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகள் கத்தார் நாட்டில் கடந்த 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நிறைவடைந்தன. உலகில் மிகவும் புகழ்பெற்ற விளையாட்டுப் போட்டிகளில் ஒன்றாகக் கால்பந்துப் போட்டிகள் கருதப்படுகின்றன. 1930ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட முதலாவது ஃபிபா உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டிகளில் தொடங்கி, அண்மையில் கத்தாரில் நடைபெற்ற 22வது ஃபிபா உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகள் வரை உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகள் மிக நீண்ட தொலைவைக் கடந்து வந்திருக்கின்றன.

**சர்வதேச கால்பந்து சங்கங்களின் கூட்டமைப்பு ஃபிபா உருவாக்கம்**

உலக அளவில் கால்பந்துப் போட்டிகளை நிர்வகிக்கும் அமைப்பான ஃபிபா எனப்படும் சர்வதேச கால்பந்து சங்கங்களின் கூட்டமைப்பு 1904ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் தேதி நிறுவப்பட்டது. ஃபிபா என்பது பிரெஞ்ச் மொழியில் Fédération Internationale de Football Association என்பதன் சுருக்கமாகும். ஃபிபா அமைப்பை உருவாக்கிய நாடுகளில் ஸ்பெயின், பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து, டென்மார்க், ஸ்வீடன், சுவிட்சர்லாந்து ஆகியவை அடங்கும். பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ராபர்ட் கொரின், ஃபிபா அமைப்பின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நவீன கால கால்பந்தின் தந்தை நாடாகக் கருதப்படுவது இங்கிலாந்து ஆகும். ஆனால், உலகக்கோப்பை கால்பந்துப் போட்டிகளைப் பிரதி நிதித்துவப்படுத்தும் ஃபிபா அமைப்பைத் தோற்றுவித்த நாடுகளில் இங்கிலாந்து இல்லை என்பது சுவையான தகவலாகும். இன்னும் கேட்டால் ஃபிபா அமைப்பு தொடங்கப்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பாக, 12வது நூற்றாண்டிற்கும், 14வது நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்திலேயே இங்கிலாந்தில் கால்பந்துப் போட்டிகள் பரவத் தொடங்கின. 1815ஆவது ஆண்டிலேயே இங்கிலாந்தின் பெர்க்ஷயர் நகரை அடுத்த எட்டான் கிராமத்தில் உள்ள எட்டான் கல்லூரியில் கால்பந்துப் போட்டிகளுக்கான விதிகள் முதன்முறையாக வகுக்கப்பட்டன. அதன்பின் 1854ஆம் ஆண்டு அக்டோபர் 24ஆம் தேதி உலகின் முதல் கால்பந்து கிளப் தோற்றுவிக்கப்பட்டது. அந்த அமைப்புக்கு ஷெஃபீல்டு கால்பந்து கிளப் என்று பெயர் சூட்டப்பட்டது. உலகம் முழுவதும் கால்பந்துப் போட்டிகளை ஊக்குவிக்க வேண்டும்; கால்பந்துப் போட்டிகளை தொழில்முறைப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் 1930ஆம் ஆண்டு முதலாவது உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகளை ஃபிபா அமைப்பு நடத்தியது. முதலாவது ஃபிபா உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகள் தென் அமெரிக்க நாடான உருகுவேயில் நடத்தப்பட்டன. அப்போட்டிகளின் இறுதி ஆட்டத்தில் போட்டிகளை நடத்திய உருகுவே அணி, 42 என்ற கணக்கில் அர்ஜென்டினாவை வீழ்த்தி முதலாவது உலகக் கோப்பையை வென்ற நாடு என்ற பெருமையை அடைந்தது.

**ஒலிம்பிக் போட்டிகள்**

கால்பந்துப் போட்டிகள் முதன் முறையாக 1908ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வெல்வதற்கான போட்டியாகச் சேர்க்கப்பட்டது. 1924ஆம் ஆண்டு, 1928ஆம் ஆண்டு ஆகிய இரு ஒலிம்பிக் போட்டிகளிலும்



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

உருகுவே அணி வெற்றி பெற்று தங்கப்பதக்கத்தை வென்று அதன் திறமையை நிரூபித்தது. 1930ஆம் ஆண்டு தான் உருகுவே நாடு விடுதலை அடைந்ததன் 100வது ஆண்டு ஆகும். அதற்கு முன் ஒலிம்பிக் கால்பந்துப் போட்டிகளில் இருமுறை தங்கப்பதக்கம் வென்றிருந்ததாலும், விடுதலை நூற்றாண்டு என்பதாலும் 1930ஆம் ஆண்டு முதலாவது உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகளை நடத்த உருகுவே தேர்ந்தெடுக்கப்பட்டது. 1930ஆம் ஆண்டு முதல் 1970ஆம் ஆண்டு வரை உலகக்கோப்பை கால்பந்துப் போட்டிகளில் வெற்றிபெறும் நாட்டிற்கு ஜூல்ஸ் ரிமெட் கோப்பை வழங்கப்பட்டது. 1970ஆம் ஆண்டில் முதன் முறையாக ஃபிபா உலகக் கோப்பை என்ற பெயரில் புதிய கோப்பை அறிமுகப்படுத்தப்பட்டது. உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகளின் தொடக்கக் காலத்தில் வழங்கப்பட்ட ஜூல்ஸ் ரிமெட் கோப்பை என்பது புகழ்பெற்ற பிரெஞ்சு கால்பந்து நிர்வாகியும், ஃபிபா அமைப்பின் மூன்றாவது தலைவருமான ஜூல்ஸ் ரிமெட் பெயரால் வழங்கப்பட்டது. அவர் ஃபிபா அமைப்பின் தலைவராக 33 ஆண்டுகள் பணியாற்றியது மட்டுமின்றி, 1919ஆம் ஆண்டு முதல் 1942ஆம் ஆண்டு வரை பிரெஞ்சு கால்பந்துக் கூட்டமைப்பின் தலைவராகவும் பதவி வகித்தார். 1950ஆம் ஆண்டில் இந்தியா, ஸ்காட்லாந்து, துருக்கி ஆகியவை உலகக்கோப்பைப் போட்டியிலிருந்து வெளியேறின. மொத்தம் 13 நாடுகளின் அணிகள் மட்டுமே கலந்து கொண்ட 1950ஆம் ஆண்டு போட்டியில், உருகுவே அணி மீண்டும் வெற்றி பெற்று கோப்பையைக் கைப்பற்றியது. 1930ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது உலகக்கோப்பைப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் உருகுவே அணி, அர்ஜென்டினா அணியை வீழ்த்தி கோப்பையை வென்றது. 1950ஆம் ஆண்டு உலகக்கோப்பை இறுதிப் போட்டிகளில், போட்டிகளை நடத்திய பிரேசில் அணியை வீழ்த்தி இரண்டாவது முறையாக உருகுவே அணி உலகக் கோப்பையைக் கைப்பற்றியது. 1930ஆம் ஆண்டில் தொடங்கி, 2022ஆம் ஆண்டு வரையிலான 92 ஆண்டு கால ஃபிபா உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி வரலாற்றில் ஐரோப்பா மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த அணிகள் தான் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. 1994ஆம் ஆண்டு, 1998ஆம் ஆண்டு, 2006ஆம் ஆண்டு, 2018ஆம் ஆண்டு ஆகிய ஆண்டுகளில் உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகளில் காலிறுதிப் போட்டிகளில் விளையாடிய அனைத்து நாடுகளுமே ஐரோப்பா மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்தவை தான் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை நடைபெற்று முடிந்துள்ள 22 உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகளின் இறுதி ஆட்டங்களுக்குத் தகுதி பெற்ற அனைத்து அணிகளும் ஐரோப்பா அல்லது லத்தீன் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த அணிகள் தான்.

**கத்தார் ஃபிபா உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி**

கத்தாரில் 2022ஆம் ஆண்டு நடைபெற்ற ஃபிபா உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகள் ஒன்றுக்கும் மேற்பட்ட வழிகளில் தனித்துவம் கொண்ட விளையாட்டுப் போட்டியாக அமைந்தன. இந்தப் போட்டிகளின் இறுதி ஆட்டத்தில் தான் அர்ஜென்டினா அணி, பிரான்ஸ் அணியை பெனால்டி சூட் முறையில் வீழ்த்தி மூன்றாவது முறையாக கோப்பையை வென்றது. வழக்கமாக ஃபிபா உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகள் ஜூன், ஜூலை மாதங்களில் தான் நடத்தப்படும். ஆனால், கத்தார் நாட்டின் காலநிலையை, குறிப்பாக கோடைக்கால வெப்பநிலையைக் கருத்தில் கொண்டு, உலகக்கோப்பைப் போட்டிகளை ஆண்டின் இறுதியில் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

கத்தார் உலகக்கோப்பை கால்பந்துப் போட்டிகளின் காலிறுதிக்கு முந்தைய சுற்றுப் போட்டிகள் 2022ஆம் ஆண்டு டிசம்பர் 3ஆம் தேதி முதல் 7ஆம் தேதி வரை நடைபெற்றன. அவற்றில் ஒரு போட்டியில் ஹாலந்து அணி அமெரிக்காவை வென்றது. இன்னொரு போட்டியில் அர்ஜென்டினா அணி ஆஸ்திரேலியாவையும், மூன்றாவது போட்டியில் பிரான்ஸ் அணி போலந்தையும், நான்காவது ஆட்டத்தில் இங்கிலாந்து அணி செனகல் அணியையும் வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதி பெற்றது. மற்ற ஆட்டங்களில் கொரோஷியா அணி ஜப்பானையும், பிரேசில் அணி தென்கொரியாவையும், மொராக்கோ அணி ஸ்பெயினையும், போர்ச்சுக்கல் அணி சுவிட்சர்லாந்து அணியையும் வீழ்த்தி காலிறுதிப் போட்டிக்கு முன்னேறின. கத்தார் உலகக்கோப்பை கால்பந்துப் போட்டிகளில் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்று போர்ச்சுக்கல் அணியின் புகழ்பெற்ற வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு பதிலாக இளம் வீரரான கோன்சலோ ராமோஸ் சேர்க்கப்பட்டது தான். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட கோன்சலோ ராமோஸ், சுவிட்சர்லாந்து அணிக்கு எதிரான காலிறுதிக்கு முந்தைய ஆட்டத்தில் மிகச் சிறப்பாக அடுத்தடுத்து மூன்று கோல் அடித்து ஹார்டிரிக் சாதனை படைத்தார். அதன் மூலம் உலகக்கோப்பை கால்பந்துப் போட்டி வரலாற்றில் தமது பெயரை உறுதியாகப் பதிவு செய்தார். டிசம்பர் மாதம் 9ஆம் தேதியும், 10ஆம்



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

தேதியும் நடத்தப்பட்ட காலிறுதி ஆட்டங்கள் சில நாடுகளுக்கு மகிழ்ச்சியானதாகவும், சில நாடுகளுக்கு வருத்தமானதாகவும் மாறின. 2018ஆம் ஆண்டு உலகக்கோப்பை கால்பந்துப் போட்டிகளில் மூன்றாவது இடத்தைப் பிடித்திருந்த லூக்கா மோட்ரிக் தலைமையிலான குரேஷிய அணி, இந்தக் காலிறுதிப் போட்டிகளில், உலகக் கோப்பையை வெல்லும் அணிகளில் ஒன்றாகக் கருதப்பட்ட பிரேசில் அணியை பெனால்டி ஷூட் முறையில் 42 என்ற கணக்கில் வீழ்த்தி அதிர்ச்சி அளித்தது. மற்றொரு காலிறுதி ஆட்டத்திலும் பெனால்டு ஷூட் முறையில் தான் வெற்றி, தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இந்தப் போட்டியில் அர்ஜென்டினா அணி 43 என்ற கணக்கில் ஹாலந்து அணியை வீழ்த்தியது. பிரான்ஸ் அணி அதன் பாரம்பரிய எதிரியான இங்கிலாந்தை 21 என்ற கணக்கில் தொடர்ந்து இரண்டாவது முறையாக உலகக்கோப்பைப் போட்டிகளின் அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

**திரில்லான இறுதிப் போட்டி**

22வது ஃபிபா உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகளின் இறுதி ஆட்டம், அப்போட்டிகளை நடத்திய கத்தார் நாட்டின் தேசிய நாளான டிசம்பர் 18ஆம் தேதி வரலாற்றுச் சிறப்புமிக்க லூசைல் விளையாட்டுத் திடலில் நடைபெற்றது. இறுதிப் போட்டியில் விளையாடிய நாடுகளில் ஒன்றான பிரான்ஸ், 1998ஆம் ஆண்டும், 2018ஆம் ஆண்டும் உலகக் கோப்பையை வென்ற அணியாகும். அந்த அணியில் கிலியான் எம்பாப்பே என்ற சூப்பர் ஸ்டார் வீரர் இருந்தார். இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்த மற்றொரு நாடான அர்ஜென்டினா, 1978, 1986 ஆகிய ஆண்டுகளில் உலகக் கோப்பையை வென்றிருந்த அணியாகும். உலகக் கோப்பைப் போட்டியில் பங்கேற்ற அணிகளில் மிகவும் வலிமையான அணியாகக் கருதப்பட்டது அர்ஜென்டினா தான். அதுமட்டுமின்றி, கால்பந்துப் போட்டி வரலாற்றில் உலகின் மிகச் சிறந்த வீரர்களில் ஒருவரான லயனல் மெஸ்ஸி, அந்த அணியில் இடம் பெற்றிருந்தார். இந்த இரு அணிகளுக்கு இடையிலான இறுதிப் போட்டி வழக்கமான நேரத்தையும், கூடுதல் நேரத்தையும் கடந்து பெனால்டி ஷூட்அவுட் கட்டத்திற்குச் சென்றது. அதில் 42 என்ற கணக்கில் பிரான்ஸ் அணியை வீழ்த்தி, 36 ஆண்டுகளுக்குப் பிறகு அர்ஜென்டினா அணி உலகக் கோப்பையை வென்றது. துரதிருஷ்டவசமாக கிலியான் எம்பாப்பேவால் பிரான்ஸ் அணிக்கு மூன்றாவது உலகக் கோப்பையை வென்று கொடுக்க முடியவில்லை. அதே நேரத்தில், அவர் மிகச் சிறப்பான தமது ஆட்டத்தின் மூலம் கோடிக்கணக்கான கால்பந்து ரசிகர்களின் இதயங்களை வென்றார்.

கத்தார் உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகளில் இந்தியக் கால்பந்து அணி பங்கேற்கவில்லை என்றாலும் கூட, உலகம் முழுவதும் உள்ள கோடிக்கணக்கான இந்திய கால்பந்து ரசிகர்கள் ஃபிபா உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகளில் பங்கேற்ற அணிகளுக்கு பல்வேறு வழிகளில் தங்களின் ஆதரவைத் தெரிவித்தார்கள். கத்தார் உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி போன்ற மிகப்பெரிய விளையாட்டுப் போட்டியின் வெற்றிக்குப் பின்னால் அதற்காகப் பணியாற்றிய தொழில்நுட்பக் குழு மிகச் சிறப்பான பணியை செய்திருந்தது. உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி வரலாற்றில் கத்தார் உலகக் கோப்பை போட்டி தான் முழுக்க முழுக்க 5ஜி அலைக்கற்றை தொழில்நுட்பத்துடன் நடத்தப்பட்ட முதலாவது உலகக் கோப்பைப் போட்டி ஆகும். 5ஜி அலைக்கற்றை நெட்வொர்க்கின் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்காக உலகின் பல்வேறு முனைகளில் இருந்து கத்தாருக்கு வந்த 250 பொறியாளர்களில் 160 பேர் இந்தியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மற்றொருபுறம் பரபரப்பான விளையாட்டுப் போட்டிகளை இந்திய ரசிகர்கள் சிறப்பாகப் பார்த்து ரசித்தனர். உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகளுடன் இந்தியா ஏதேனும் ஒரு வழியில் தொடர்பு கொண்டிருந்தது என்பதையே இந்த நிகழ்வுகள் காட்டுகின்றன.

**கால்பந்தும் இந்தியாவும்**

உலகின் புகழ்பெற்ற விளையாட்டுப் போட்டிகளில் ஒன்றான கால்பந்துப் போட்டிகள், அதற்கான மக்கள் ஆதரவின் அடிப்படையில் பார்த்தால் இந்தியாவிலும் முதன்மையான விளையாட்டுகளில் ஒன்றாகவே எப்போதும் திகழ்ந்து வருகின்றன. 19வது நூற்றாண்டில் கால்பந்துப் போட்டிகளை விளையாடத் தொடங்கிய ஒரு சில நாடுகளில் இந்தியாவும் ஒன்று. உலகின் புகழ்பெற்ற கால்பந்து கிளப்புகளான செஃபீல்டு எஃப்.சி., நாட்டிங்காம் ஃபாரஸ்ட், ஸ்டோக் சிட்டி எஃப்.சி. ஆகிய கிளப்புகளும் கிட்டத்தட்ட இதே காலத்தில் தான் தொடங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் இருந்த ஆங்கிலேய வீரர்களின் பொழுதுபோக்குக்கான விளையாட்டுகளில் கால்பந்துப் போட்டியையும் சேர்த்திருந்தனர். படிப்படியாக கால்பந்துப் போட்டி இந்தியாவின் இலட்சக்கணக்கான ரசிகர்களுக்கு மிகவும் பிடித்த போட்டியாக மாறியது. 1869ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27ஆம் தேதி கொல்கத்தாவைச் சேர்ந்த நாகேந்திர பிரசாத் சர்வாதிகாரி தான் இந்திய கால்பந்தின் தந்தை என்று போற்றப்படுகிறார்.1877ஆம்



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

ஆண்டு கொல்கத்தாவில் தொடங்கப்பட்ட தி பாய்ஸ் கிளப் என்னும் முறைப்படியான இந்தியாவின் முதலாவது கால்பந்து கிளப் உருவாக்கப்படுவதற்கு இவர் தான் காரணமாக இருந்தார். 1884ஆம் ஆண்டில் கொல்கத்தாவில் வில்லிங்டன் கிளப் என்ற கால்பந்து அமைப்பை நாகேந்திரா தான் தோற்றுவித்தார். அதேபோல், 1887ஆம் ஆண்டில் இவரது மேற்பார்வையில் தான் சோவா பஜார் கால்பந்து கிளப் தோற்றுவிக்கப்பட்டது. 1889ஆம் ஆண்டில் இந்தியாவில் நடைபெற்ற முதலாவது திறந்த நிலை கால்பந்துப் போட்டியாகக் கருதப்படும் டிரேட்ஸ் கப் கால்பந்துப் போட்டியிலும் சோவா பஜார் கிளப் கலந்து கொண்டது. அதன் பின் மூன்று ஆண்டுகள் கழித்து, 1892ஆம் ஆண்டு கிழக்கு சர்ரே ரெஜிமென்ட் அணியை 21 என்ற கணக்கில் வீழ்த்தி டிரேட்ஸ் கப் கோப்பையைக் கைப்பற்றியது மட்டுமின்றி, ஆங்கிலேயக் கால்பந்து அணியை முழுக்க முழுக்க இந்திய வீரர்களைக் கொண்டு வீழ்த்திய முதல் அணி என்ற பெருமையையும் சோவா பஜார் கிளப் பெற்றது. 1893ஆம் ஆண்டில் இந்தியக் கால்பந்து சங்கத்தை உருவாக்குவதிலும் நாகேந்திர பிரசாத் சர்வாதிகாரி முக்கியப் பங்காற்றினார்.1888ஆம் ஆண்டு உலகின் மூன்றாவது பழமையான கால்பந்து போட்டியாகக் கருதப்படும் துரந்த் கோப்பைக் கால்பந்துப் போட்டிகள் நடத்தப்பட்டன. துரந்த் கோப்பையை வெல்லும் அணிக்கு அக்கோப்பையுடன் சிம்லா கோப்பை, துரந்த் சுழற்கோப்பை என மொத்தம் மூன்று கோப்பைகள் வழங்கப்பட்டன. அவற்றில் மூன்றாவது கோப்பை குடியரசுத்தலைவர் கோப்பை என்று அழைக்கப்பட்டது. இந்தியக் குடியரசின் முதல் தலைவரான டாக்டர் ராஜேந்திர பிரசாத் அக்கோப்பையை முதன் முறையாக வழங்கியதால், அதற்கு அப்பெயர் ஏற்பட்டது. அதன் பின், துரந்த் கோப்பையை யார் வென்றாலும் அவர்களுக்கு அக்கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. இந்தியாவின் புகழ்பெற்ற கால்பந்து அணியான மோகன்பகான் கிளப் 1889ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. கிழக்கு இந்தியாவில் எவ்வாறு கால்பந்து கிளப்புகள் அதிக எண்ணிக்கையில் தொடங்கப்பட்டனவோ, அதேபோல் இந்தியாவின் தென் பகுதியிலும் கால்பந்து கிளப்புகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 1899ஆம் ஆண்டு பிப்ரவரி 20ஆம் நாள் தென்னிந்தியாவின் முதல் கால்பந்து கிளப்பான ஆர்.பி. பெர்குசன் எஃப்.சி. அணி தோற்றுவிக்கப்பட்டது. அந்த அணி யங்மேன் கால்பந்து கிளப் என்றும் அழைக்கப்பட்டது. 1911ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தேசிய அளவிலான கால்பந்துப் போட்டிகளில் இந்தியக் கால்பந்து சங்கத்தின் கோப்பையை வென்ற முதல் இந்திய அணி என்ற பெருமையை மோகன் பகான் அணி பெற்றது. 1924ஆம் ஆண்டு புகழ்பெற்ற கால்பந்து வீரர் கோஸ்தா பால் தலைமையிலான இந்திய கால்பந்து அணி இலங்கைக்குச் சென்று பல்வேறு போட்டிகளில் விளையாடியது. அதுதான் இந்திய கால்பந்து அணி மேற்கொண்ட முதலாவது வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் ஆகும். 1937ஆம் ஆண்டில் அகில இந்தியக் கால்பந்து சங்கம் சிம்லாவில் தொடங்கப்பட்டது. அந்த அமைப்பின் கண்காணிப்பில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தான் இந்தியக் கால்பந்து அணி இன்றைய சூழலில் இந்த அளவுக்கு முன்னேறி இருப்பதற்குக் காரணம் ஆகும்.

1940ஆம் ஆண்டு நடைபெற்ற துரந்த் கோப்பை கால்பந்துப் போட்டிகளின் இறுதிப் போட்டியில் முகமதன் ஸ்போர்ட்டிங் அணி 21 என்ற கணக்கில் ராயல் வார்விக்ஷயர் அணியை வீழ்த்தியது. அதன் மூலம் புகழ்பெற்ற துரந்த் கோப்பையை வென்ற முதல் இந்திய அணி என்ற பெருமையை முகமதன் ஸ்போர்ட்டிங் அணி பெற்றது. முகமதன் அணியின் இந்த வெற்றி தான் இந்திய கால்பந்து வரலாற்றில் மிகப்பெரிய திருப்புமுனையாகப் பார்க்கப்படுகிறது. 1948ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளின் கால்பந்து ஆட்டங்களில் இந்திய அணி கலந்து கொண்டது. ஆனாலும், பிரான்ஸ் அணியிடம் 12 என்ற கணக்கில் தோல்வி அடைந்ததன் மூலம் இந்திய அணி தொடக்க நிலை யிலேயே வெளியேறியது. ஆனாலும் கூட, கால்பந்துப் போட்டிகளில் ஷூக்கள் கூட இல்லாமல் வெறும் காலுடன் விளையாடிய இந்திய வீரர்களின் ஆட்டத்தை அனைவரும் பாராட்டினார்கள். இரு ஆண்டுகள் கழித்து 1950ஆம் ஆண்டு பிரேசில் நாட்டில் நடைபெற்ற உலகக்கோப்பைப் போட்டிகளில் பங்கேற்க இந்திய அணிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் சில காரணங்களால் இந்திய அணியால் பிரேசில் நாட்டைச் சென்றடைய முடியவில்லை. 1950ஆம் ஆண்டில் தான் இந்தியக் கால்பந்து அணியின் பயிற்சியாளராக சையத் அப்துல் ரஹீம் பொறுப்பேற்றுக் கொண்டார். 1963ஆம் ஆண்டு அவர் காலமாகும் வரை இந்தியக் கால்பந்து அணியின் பயிற்சியாளர் பொறுப்பில் தொடர்ந்தார். அவரது மேற்பார்வையில் 1951, 1962 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கால்பந்து ஆட்டங்களில் இந்திய அணி தங்கப் பதக்கங்களை வென்றது. 1956ஆம் ஆண்டு மெல்பர்ன் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியக் கால்பந்து அணி நான்காவது



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

இடத்தைப் பிடித்தது. இந்தியக் கால்பந்து வீரரான நெவில் டிசோசா அந்தப் போட்டியில் ஹாட்டிரிக் கோல் அடித்ததன் மூலம், ஒலிம்பிக் போட்டிகளில் ஹாட்ரிக் கோல் அடித்த முதலாவது ஆசிய வீரர் என்ற பெருமையைப் பெற்றார். அத்துடன், மொத்தம் நான்கு கோல்களுடன் அந்த ஒலிம்பிக் போட்டியில் அதிக கோல் அடித்த இரு வீரர்களில் ஒருவர் என்ற பெருமையும் அவருக்குக் கிடைத்தது. 1964ஆம் ஆண்டு நடைபெற்ற மெர்டேக்கா கோப்பைக்கான கால்பந்துப் போட்டிகளில் இந்திய கால்பந்து அணி இரண்டாவது இடத்தைக் கைப்பற்றியது. 1955, 1966, 1970 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற மெர்டேக்கா கோப்பைக்கான கால்பந்துப் போட்டிகளில் இந்திய அணி மூன்றாவது இடத்தைக் கைப்பற்றியது. 1970ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் சையத் நயிமுதின் தலைமையில் களமிறங்கிய இந்தியக் கால்பந்து அணி வெண்கலப் பதக்கத்தை வென்றது. 1982ஆம் ஆண்டு ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் இந்தியாவில் நடைபெற்றன. அதுமட்டுமின்றி, நேரு கோப்பைக் கால்பந்துப் போட்டிகள் என்ற பெயரில் புதிய சர்வதேசக் கால்பந்துப் போட்டிகளும் அதே ஆண்டு தொடங்கப்பட்டன. 2007, 2009, 2012 ஆகிய ஆண்டுகளில் நேரு கோப்பையை கைப்பற்றியதன் மூலம் கால்பந்துப் போட்டிகள் வரலாற்றில் இந்திய வீரர்கள் தங்களின் வெற்றியைத் தங்களது பக்கங்களில் எழுதினார்கள்.

இதனிடையே இந்தியாவில் தொழில்முறை கால்பந்துப் போட்டிகளை ஊக்கப்படுத்தும் வகையில், தேசிய கால்பந்து லீக் என்ற அமைப்பு 1996ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஐ லீக் போட்டிகள் 2007ஆம் ஆண்டிலும் இந்தியன் சூப்பர் லீக் அதாவது ஐஎஸ்எல் லீக் போட்டிகள் 2014ஆம் ஆண்டிலும் தொடங்கப்பட்டன. சமீப காலங்களில் பைச்சுங் புட்டியா, சுனில் சேத்ரி போன்ற வீரர்கள் இந்திய கால்பந்து போட்டிகளின் கதாநாயகர்களாக உருவெடுத்துள்ளனர்.

இந்தியாவில் தொழில்முறை கால்பந்துப் போட்டிகளை ஊக்கப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த முயற்சியின் ஒரு கட்டமாக ஐ லீக் மற்றும் ஐஎஸ்எல் லீக் போட்டிகள் நாட்டின் தலைசிறந்த போட்டிகளாக நடத்தப்பட்டு வருகின்றன. இந்தப் போட்டிகளில் இந்திய இளைஞர்களுடன் சேர்ந்து வெளிநாட்டு வீரர்களும் பங்கேற்று விளையாடுவதைப் பார்க்க முடிகிறது. கடந்த 2014ஆம் ஆண்டு மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட தேசிய இளைஞர்கள் கொள்கையில், கால்பந்துப் போட்டிகளை ஊக்கப்படுத்துவது முன்னுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

**வரைவு தேசிய இளைஞர்கள் கொள்கையில் விளையாட்டு**

வரைவு தேசிய இளைஞர் கொள்கை கடந்த 2022ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதில் இளைஞர் மேம்பாட்டுக்காக அடுத்த 10 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. அதில், முன்னுரிமை அளிக்க வேண்டிய அம்சங்களின் பட்டியலில் விளையாட்டும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் விளையாட்டு மேம்பாட்டுக்கான தேசியத் திட்டமாக கேலோ இந்தியா திட்டம் அறிவிக்கப்பட்டது. கால்பந்து போன்ற விளையாட்டுப் போட்டிகளில் இந்திய இளைஞர்கள் தங்களைத் தொடர்ந்து ஈடுபடுத்திக் கொள்வதற்கும், அதன் மூலம் தங்களின் திறமைகளை மெருகேற்றிக் கொள்ளவும் இத்திட்டம் வாய்ப்பளிக்கிறது. இந்தியாவின் இளம் கால்பந்தாட்ட வீரர்கள் என்றேனும் ஒருநாள் ஃபிபா உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகளில் விளையாட வேண்டும் என்ற விருப்பம் கொண்டிருக்கலாம். உண்மையான ஆர்வம், உறுதிப்பாடு, சாதிக்க வேண்டும் என்ற உணர்வு, திறமை ஆகியவற்றுடன் அதற்கான முயற்சிகளில் அவர்கள் ஈடுபட்டால், சாத்தியமாகாதது எதுவும் இல்லை. உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகளில் விளையாட வேண்டும் என்று நினைப்பவர்கள் மொராக்கோ போன்ற அணி வீரர்களிடம் இருந்து உத்வேகத்தைப் பெற வேண்டும். மொராக்கோ அணியின் வீரர்கள் கத்தார் நாட்டில் 2022ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் தேதி முதல் டிசம்பர் 18ஆம் தேதி வரை நடைபெற்ற 22வது ஃபிபா உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகளில் தங்களின் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, கத்தார் உலகக் கோப்பை போட்டிகளை தங்களது வாழ்நாளில் மறக்க முடியாத ஒன்றாக அமைத்துக் கொண்டனர். ஆசிய கால்பந்துப் போட்டித் தர வரிசையில் இந்திய அணி இப்போது 19வது இடத்தில் உள்ளது. ஃபிபா உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டிகளில் விளையாடுவதற்கு இந்திய அணி தகுதி பெறுவதற்கும் கடந்த காலங்களில் இழந்த பெருமையை மீண்டும் பெறுவதற்கும் கடுமையான உழைப்பு, திறமையான வீரர்களை அடையாளம் காணுதல், உலகின் தலைசிறந்த பயிற்சியை இந்திய வீரர்களுக்கு வழங்குதல் ஆகியவற்றைச் செய்ய வேண்டியது மிகவும் அவசியம் ஆகும்.

**– ஷிவேந்திர சதுர்வேதி,**
மூத்த வர்ணனையாளர்,
கால்பந்துப் போட்டி



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



# சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கு இளைஞர்களின் பங்கு

– அவினாஷ் மிஸ்ரா
மதுவந்தி தத்தா

அன்னை பூமிதான் நாம் வாழ்வதற்கான இடமும், நமது வாழ்க்கை தேவைகளுக்கான ஆதாரமும் ஆகும். எனவே, இயற்கையுடன் இயைந்து, அமைதியாக வாழ வேண்டியது தவிர்க்க முடியாதது ஆகும். சுற்றுச்சூழலுக்குத் தீங்கை ஏற்படுத்தக் கூடிய செயல்பாடுகள் நமது சூழல் அமைப்புகளையும், சுற்றுச்சூழல் பல்லுயிர் வாழும் சூழலையும் கடுமையாக பாதிக்கின்றன. கரிம வாயுக்களின் வெளியேற்றம் அதிகரிப்பதில் தொடங்கி, காடுகளை அழிப்பது, நிலங்களைச் சீரழிப்பது வரையில் ஏராளமான பாதிப்புகள் இதில் அடங்கும். அமெரிக்காவைச் சேர்ந்த நோபல் பரிசு வென்ற பொருளாதார வல்லுநரான மில்டன் ஃபிரைட் மேனின் கருத்துக்களுக்கு முற்றிலும் நேரெதிராக, உலகச் சந்தைகளில் சூழலியல் மாண்புகளுக்கு எந்த இடமும் கிடைக்கவில்லை. சூழலியல் மாண்புகள் எதனால் குறைவாக மதிப்பிடப்படுகின்றன? எதனால் சுரண்டப்படுகின்றன? என்பது குறித்து எல்லாம் 1962ஆம் ஆண்டிலேயே மில்டன் ஃபிரைட் மேன் விளக்கியிருக்கிறார். 2011 முதல் 2020ஆம் ஆண்டு வரையிலான 10 ஆண்டுகளை பல்லுயிர் பத்தாண்டாக ஐக்கிய நாடுகள் பொது அவை அறிவித்திருந்தது என்பதை நம்மில் சிலர் மட்டுமே அறிவோம். சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக, பல்வேறு நிலைகளில் மக்களைத் திரட்டுவதற்கான முயற்சிகள் மற்றும் செயல் திட்டங்களை நாம் பெருமளவில் மேற்கொண்ட போதிலும், இதுதொடர்பான நமது இலக்குகளை எட்டுவதற்கான நேரம் நெருங்கிவிட்ட சூழலில், இலக்குகளில் இருந்து வெகு தொலைவில் நாம் இருக்கிறோம் என்பது குறிப்பிடத்தக்கது. பல்லுயிர் வாழிடச் சூழல் அழிவுக்குள்ளாகி வருவதை எதிர்த்துப் போராடுவதற்காகவும், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான வழிகளை உருவாக்கவும் நாம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

இந்திய நாடாளுமன்றத்தில் 2022–23ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையைத் தாக்கல் செய்து பேசிய மாண்புமிகு இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், காலநிலை மாற்றத்தின் தீமைகள் தான் இந்தியாவின் வளர்ச்சியைப் பெருமளவில் பாதிக்கக்கூடிய வலிமையான வெளிப்புறக் காரணிகள் என்று கூறியிருந்தார். கரிம வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான ஐந்து அம்ச உத்தியில், நீடித்த வளர்ச்சியை எட்டுவதில் இந்திய அரசு எந்த அளவுக்கு உறுதிப்பாட்டுடன் உள்ளது என்பது குறித்து விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. கரிம வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்காக வனங்கள் மற்றும் நிலப் பயன்பாட்டை எவ்வாறு மேலாண்மை செய்வது? என்பது தான் அதிக அழுத்தம் தர வேண்டிய நடவடிக்கையாகும். பசுமை இல்ல வாயுக்களின் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளில் வேளாண் நிலங்கள் மற்றும் வன நிலங்களின் மேலாண்மையை மேம்படுத்துதல், நீர்வள மேம்பாடு மற்றும் நீரைத் தேக்கி வைப்பதற்கான கட்டமைப்புகளை உருவாக்குதல் ஆகியவை தான் மிகவும் சிக்கலான இரு நடவடிக்கைகள் ஆகும்.

இந்தியாவில் வாழத் தகுதி பெற்ற, குறைந்த அளவு கரிம வாயு வெளியேற்றத்துடன் கூடிய வளமான நகரங்களை உருவாக்குவதற்கான வாய்ப்புகளை நாம் ஏற்படுத்தித் தரவேண்டும். பசுமைப் பகுதிகளின் பரப்பை அதிகரித்தல், குறைந்த அளவில் எரிசக்தி தேவைப்படும் கட்டடங்களை உருவாக்குதல், தண்ணீர் விநியோகத்தை அதிகரித்தல், கழிவுகள் மற்றும் நகர்ப்புறப் போக்குவரத்தில் இருந்து பசுமை இல்ல வாயுக்கள் வெளியேறுவதை குறைத்தல் போன்றவை இதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கியமான நடவடிக்கைகளில் சிலவாகும்.

### இளைஞர்கள்: எதிர்கால தலைமுறையினரின் வழிகாட்டிகள்

2030ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் கரிம வாயு



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

வெளியேற்றுதல் மற்றும் கரிம வாயு உருவாக்கத்தில் சமநிலையை ஏற்படுத்துதல், பூவுலகில் வருங்காலத் தலைமுறையினருக்கு தரமான வாழ்க்கையை உறுதி செய்தல், கல்வியின் தரத்தை மேம்படுத்துதல் உள்ளிட்ட இலக்குகளை எட்டுவதற்கு இளைஞர்களால் முன்னெடுக்கப்படும் காலநிலை சார்ந்த நடவடிக்கைகள் தான் வெற்றியைத் தேடித்தரும். இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், குறிப்பாக நகர்ப்புறங்களில் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் சூழலில், அதன் ஒட்டுமொத்தத் தாக்கத்தையும் கருத்தில் கொண்டு, நகர்ப்புற இளைஞர்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து கற்பிக்கப்பட வேண்டியது மிகவும் முக்கியமாகும். நமது சமுதாயத்தில் விலைமதிப்பற்ற வலிமையான மனிதவளம் என்பது இளைஞர்கள் தான். அவர்கள் தான் எதிர்காலத் தலைமுறையினருக்கு வழிகாட்டியாகத் திகழ்வார்கள். சுற்றுச்சூழலைப் பொறுத்தவரை இளைஞர்களுக்கு தனித்துவமான தேவைகளும், கடமைகளும் உள்ளன. சீரழிந்து வரும் சுற்றுச்சூழலில் தீயவிளைவுகளை மிக அதிக காலம் அனுபவிக்கப் போகிறவர்கள் அவர்கள்தான். அதன் காரணமாக, சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடும்படி அவர்கள் தான் அதிக அளவில் ஊக்குவிக்கப்பட வேண்டும். பசுமை இல்ல வாயுக்களின் வெளியேற்றம், காலநிலை மாற்றத்தால் ஏற்படக் கூடிய உடல்நல, சுகாதாரக் கேடுகள், மர்வரும் பருவநிலைகளின் தாக்கங்கள், பசுமை இல்ல வாயுகளின் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்காக தனிநபர்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் ஆகியவை குறித்து இளைஞர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறை கடைபிடிக்கப்பட வேண்டும். காலநிலை மாற்றத்தின் தீயவிளைவுகளைக் கட்டுப்படுத்துவதற்கான உத்திசார்ந்த செயல்திட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், கள ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், பல்லுயிர் வாழிடச் சூழலைப் பராமரித்தல், நில மேலாண்மையைக் கண்காணிப்பதற்கான நடவடிக்கைகள், நெருக்கடி மற்றும் பேரிடர் மேலாண்மை உள்ளிட்டவற்றை உருவாக்குவதற்கும், மேம்படுத்துவதற்கும் எதிர்காலத்தில் புதுமையான சிந்தனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நீடித்த வளர்ச்சி இலக்குகளை நோக்கி முன்னேறிச் செல்வதற்கு உடனடி கவனம் தேவைப்படுகிறது. நீடித்த வளர்ச்சி இலக்குகளை நாம் எட்டிப்பிடிக்க வேண்டும் என்றால், அரசு நிர்வாகம் மற்றும் முடிவெடுத்தல் நடைமுறையில் நியாயமான, அர்த்தமுள்ள வகையில் இளைஞர்களின் பங்கேற்பை அதிகரிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் உந்துசக்தியாகச் செயல்படுதல், நாட்டின் அமைதிக்கும், பாதுகாப்புக்கும் பங்களித்தல் ஆகியவற்றுக்கான திறமையும், சக்தியும் இளைஞர்களுக்கு உண்டு. இந்த உலகில் மிகவும் சிறப்பான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான சக்தியும், அனைத்து வகையான அரசியல் அர்ப்பணிப்பு மற்றும் போதிய வளங்களுடன் அனைவருக்கும் ஏற்ற சிறந்த இடமாக உலகை மாற்றும் வல்லமையும் இளைஞர்களுக்கு உண்டு. உலகில் இன்றைய நிலையில், 10 முதல் 24 வயதுக்கு உட்பட்ட மக்களின் எண்ணிக்கை 180 கோடியாகும். உலக வரலாற்றில் இதுதான் மிகப்பெரிய இளைய தலைமுறை ஆகும். இவர்களில் சுமார் 90 விழுக்காட்டினர் வளரும் நாடுகளில் வாழ்கின்றனர். அந்த நாடுகளின் மக்கள்தொகையில் இவர்கள் தான் கணிசமானவர்கள் ஆவர். நீடித்த நகரங்கள், சிறப்பான வாழ்வாதாரம் ஆகிய இலக்குகளை அடைவதற்கு இளைஞர்களின் இலட்சியம், படைப்புத்திறன் மற்றும் பிற திறமைகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நீடித்த வளர்ச்சி இலக்குகளை எட்டுவதற்கான ஆண்டான 2030ஆவது ஆண்டை நோக்கி நாம் வேகமாக பயணித்துக் கொண்டிருக்கும் நேரத்தில், இளைஞர்களின் பார்வைகளையும், கோணங்களையும் நாம் பரிசீலிக்க வேண்டியது அவசியம் ஆகும். ஒருபுறம் நீடித்த வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்திக் கொண்டே, மற்றொரு புறம் இளைஞர்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம், நமது கூட்டு எதிர்காலத்தை வடிவமைத்தல், புதிய சவால்களை எதிர்கொள்ளுதல், வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளுதல் ஆகியவற்றில் இளைஞர்கள் முக்கியப் பங்காற்றுவதை நம்மால் உணர முடியும்.

**நீடித்த வளர்ச்சி இலக்குகளும், இளைஞர்களின் பங்கும்**

**☼முக்கிய சிந்தனையாளர்கள்:**

இன்றைய அதிகார அமைப்பு, மாற்றங்களுக்கான முட்டுக்கட்டைகள், உறுதித்தன்மையற்ற நிலை, பாகுபாடுகள் ஆகியவற்றை அடையாளம் கண்டு அவற்றைத் தகர்க்க இளைஞர்களால் முடியும்.



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

**☼மாற்றங்களை நிகழ்த்துபவர்கள்:**

இளைஞர்களால் மற்றவர்களைத் திரட்டி நடவடிக்கை எடுப்பதற்கு முடியும். அதிகரித்து வரும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகங்களை அணுகும் வசதி ஆகியவற்றின் காரணமாக, உலகம் முழுவதும் இளைஞர்களின் தீவிரச் செயல்பாடுகள் அதிகரித்து வருகின்றன.

**☼புதுமைக் கண்டுபிடிப்பாளர்கள்:**

புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்துவதற்கு தேவையான அம்சங்கள் மற்றும் அது குறித்த பிற தகவல்கள் மற்றவர்களுக்கு கிடைக்காத நிலையில், இளைஞர்கள் அந்தப் பார்வையையும், அறிவையும் முதல் ஆளாக அடிக்கடி பார்க்கின்றனர். அதுமட்டுமின்றி, புதிய பார்வைகள் அவர்களுக்கு உள்ளன. தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து அவர்கள் நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதால், எந்தவொரு பிரச்சினை குறித்தும் தெளிவான கோணத்தையும், தனித்துவமான தீர்வுகளையும் இளைஞர்களால் வழங்க முடியும்.

**☼தகவல் பரப்புபவர்கள்:**

வளர்ச்சிக்கான செயல்திட்டங்கள் குறித்த விவரங்களை தங்களது சக இளைஞர்கள் மத்தியிலும், உள்ளூர் சமூகங்கள் மற்றும் சர்வதேச சமூகங்கள் மத்தியிலும் பரப்புவதற்காக இணைந்து செயல்படும் திறன் இளைஞர்களுக்கு உண்டு.

**☼தலைவர்கள்:**

இளைஞர்களுக்கு அவர்களின் உரிமைகள் மற்றும் தலைமைப் பண்புக்கான திறன்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினால், அவர்கள் தங்களின் சமூகங்கள் மத்தியிலும், நாடுகளிலும் மாற்றத்திற்கான தாக்கத்தை ஏற்படுத்துவார்கள். புறக்கணிக்கப்பட்ட குழந்தைகள் தங்களின் குடிமைச் சமூகத் தலைமைப் பண்பை வளர்த்துக் கொள்வதற்கு இளைஞர்களைத் தலைவர்களாகக் கொண்ட அமைப்புகள் தான் உதவுகின்றன என்பதால், அந்த அமைப்புகளை வலுப்படுத்த வேண்டியதும், ஊக்குவிக்க வேண்டியதும் மிகவும் அவசியமாகும்.

சுற்றுச்சூழலுக்குச் சாதகமான நடைமுறைகளையும், விதிமுறைகளையும் கடைப்பிடித்தல், இதுதொடர்பான நடவடிக்கைகளை தலைமை ஏற்று நடத்துதல் ஆகியவற்றுக்காக இளைஞர்கள் ஒன்றிணைந்து குரல் எழுப்பி வருவது அதிகரித்து வருகிறது. இளைஞர்களின் முயற்சிகள் உள்ளூர்த் திட்டங்களைத் தொடங்கி உலகளாவிய பிரச்சாரங்கள் வரை நீண்டிருக்கின்றன. அவற்றில் சில முன்முயற்சிகள், தேசியத் தலைவர்கள் மத்தியிலும் முடிவெடுக்கும் நிலையில் உழவர்கள் மத்தியிலும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவையாக உள்ளன. இளைஞர்கள் அதிக எண்ணிக்கையில் ஒருவரையொருவர் தொடர்பு கொள்கின்றனர் என்பதாலும், தகவல்களைப் பரப்புவதற்காகவும், மற்றவர்களுக்கு பல விசயங்களைப் புரியவைப்பதற்காகவும் அவர்கள் டிஜிட்டல் தளங்களைப் பயன்படுத்துகிறார்கள் என்பதால், அவர்களால் ஒரு தகவலை அதிக எண்ணிக்கையிலானவர்களுக்கு கொண்டு செல்லமுடியும். நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை குறிப்பாக, நீடித்த வளர்ச்சிக்கான 15வது இலக்காகப் பட்டியலிடப்பட்டுள்ள பூமியில் வாழ்க்கை என்ற தலைப்பிலான இலக்கை அடைவதில் இளைஞர்கள் மிக முக்கியப் பங்காற்றுகின்றனர். பூமியில் உள்ள சூழல் அமைப்புகள், காடுகள், பல்லுயிர் வாழிடங்கள் ஆகியவற்றை மீண்டும் பழைய நிலைக்கே கொண்டு சென்று பாதுகாக்க வேண்டும் என்பது தான், 15வது இலக்கு ஆகும்.

நீடித்த வளர்ச்சி இலக்குகளில் 15வது இலக்கை வெற்றிபெறச் செய்வதில் மாநில அரசாங்கம் மற்றும் தேசிய அரசாங்கத்துடன் இணைந்து அவர்களின் கொள்கைகள் மற்றும் செயல் திட்டங்களை களத்தில் செயல்படுத்துவதில் இளைஞர்கள் ஆற்றக்கூடிய பங்கு, 2030ஆம் ஆண்டுக்குள் நீடித்த வளர்ச்சி இலக்குகளை, அவற்றுக்கான நிதி மற்றும் தகவல் சேகரிப்பு மற்றும் பயன்பாட்டை அதிகரிப்பதற்கான தொழில்நுட்பம் ஆகியவற்றையும் உள்ளடக்கி செயல்படுத்துவதற்காக அரசு மற்றும் தனியார் கூட்டாண்மைகளை ஏற்படுத்திக் கொள்ளுதல், சமத்துவமான மற்றும் பன்முகத்தன்மை கொண்ட கொள்கை வடிவமைப்பு, செயல்பாடு, கண்காணிப்பு, மதிப்பீடு ஆகியவற்றில் இளைஞர்களைப் பங்கேற்கச் செய்தல் ஆகிய அனைத்தும் மிகவும் முக்கியமாகும்.

**கொள்கைச் செயல்பாடுகள்**

ஒரு நாட்டின் முதுகெலும்பு அந்த நாட்டின் இளைஞர்கள் தான். சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் சிறப்பாகப் பங்களிக்க இளைஞர்களால் முடியும். இளைஞர்களால் தங்களின் வாழ்க்கை முறையையும், அதனால் சுற்றுச்சூழல் மீது ஏற்படும் தாக்கத்தையும் மாற்றிக்கொள்ள முடியும். சுற்றுச்சூழலுக்கு ஏற்ற நடைமுறைகளை செயல்படுத்துதல், பல்வேறு பொருள்களையும் மறுசுழற்சி செய்தல், நீர்வளம், மின்வளம் போன்றவற்றை சிக்கனமாகப் பயன்படுத்திப் பாதுகாத்தல் ஆகியவற்றின் மூலம், தங்களின் வீடுகள், பள்ளிகள், இளைஞர்



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

அமைப்புகள் ஆகியவற்றை சூழலியலுக்குச் சாதமாக மாற்றி அமைக்க இளைஞர்களால் முடியும். சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் இளைஞர்களை ஈடுபடுத்துவதன் மூலம், சுற்றுச்சூழல் குறித்த அவர்களின் பார்வைகளிலும், நடத்தையிலும் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்த முடியும். அதுமட்டுமின்றி, அவர்களின் குடும்பத்தினர், குறிப்பாக அவர்களின் பெற்றோரின் நடத்தை மற்றும் பார்வையிலும் சுற்றுச்சூழல் குறித்த தாக்கத்தை ஏற்படுத்த இயலும்.

இளைஞர்களுக்கு நேரடியாக வேலைவாய்ப்பு வழங்கும் வகையிலும், இளைஞர்களுக்கு முழு நேர மற்றும் கண்ணியமான வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருவதற்கான நகரங்களின் திறமையை மேம்படுத்தும் வகையிலும் அரசின் உத்திகள் அமைய வேண்டும். தேசிய நகர்ப்புறக் கொள்கைகளின் ஓர் அங்கமாக, நீண்டகால வேலைவாய்ப்பு வளர்ச்சிக்கான விரிவான உத்திகளை உருவாக்கிச் செயல்படுத்துவதற்கான சுதந்திரம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரிகளுக்கு வழங்கப்பட வேண்டும். சுற்றுச்சூழல் வலிமைக்கும், நகர்ப்புற வாழ்க்கைத்தரம், பொருளாதார வளர்ச்சி, காலநிலை மாற்றம், பல்லுயிர் வாழிடச் சூழல் மற்றும் சூழல் அமைப்புகள் மீதான கண்காணிப்பு, அனைத்து நிலைகளிலும் அவற்றின் சேவைகள், இயற்கையுடன் சமநிலையில் இருக்கக்கூடிய பொருளாதார மாதிரிக்கு மாறுவதற்கான பயணம் ஆகியவற்றுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்து தேசிய நகர்ப்புறக் கொள்கை, ஆழ்ந்த அறிவையும், புரிதலையும் கொண்டிருக்கிறது. உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காகச் செய்யப்படும் முதலீடுகள், நகர்ப்புறங்களில் பொருளாதார மேம்பாடு, வளமை, வறுமை ஒழிப்பு, சுற்றுச்சூழல் நீடித்த தன்மை, சுகாதாரம் ஆகியவற்றின் மீது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் இளைஞர்களின் பங்கேற்பை வலுப்படுத்துவது என்பது, அரசு அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் சூழலியல் மீட்புத் திட்டங்கள்; சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளின் புதிய வடிவங்களை இளைஞர்களே உருவாக்கிக் கொள்ளுதல், புத்தாக்கத் தீவிரச் செயல்பாடுகளுக்கான முன்னுதாரணமாக தங்களை முன்னிறுத்திக் கொள்ளுதல்; இன்னும் சிறப்பான சுற்றுச்சூழல் கல்வியை வழங்குதல் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கம் அளித்தல் ஆகியவற்றுக்கான வாய்ப்புகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளின் ஓர் அங்கம் ஆகும். மக்களிடம் சுற்றுச்சூழல் குறித்த உணர்வை அதிகரிக்க வேண்டும் என்றால், அதற்கு சுற்றுச்சூழல் கல்வி மிகவும் முக்கியமாகும். சுற்றுச்சூழல் பிரச்சினைகளை எதிர்கொள்ளுதல் மற்றும் மேலாண்மை செய்வதற்காக சமூகத்திற்குத் தேவைப்படும் திறமைகளில் மிக முக்கியமான அம்சம் என்பது அதன் அறிவுசார் தளம் ஆகும். அத்தகைய அறிவுசார் தளத்தை உருவாக்குவதற்கான முதல் நடவடிக்கை தான் சுற்றுச்சூழல் கல்வி ஆகும்.

சுற்றுச்சூழலைப் பொறுத்தவரை இளைஞர்களுக்கு தனித்துவமான தேவைகளும், கடமைகளும் உள்ளன. இளைய சமுதாயத்தினரின் வாழ்நாள் நீண்டதாக இருக்கும் என்பதால், தங்களது பெற்றோர் விட்டுச் சென்ற தோல்வியடைந்த சுற்றுச்சூழலின் தீய விளைவுகளை அவர்கள் அதிக காலம் அனுபவிக்க வேண்டி இருக்கும். நல்வாய்ப்பாக இளைஞர்களுக்கு புதுமைகளைக் கண்டுபிடிக்கும் திறன் அதிகமாக உள்ளது. அதன் காரணமாக, சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கு மிகச் சிறந்த தீர்வுகளைக் கண்டுபிடிப்பதற்கு அவர்களால் முடியும். இன்றைய கொள்கை உருவாக்கச் செயல்திட்டத்தின்படி எதிர்காலத் தலைமுறையினரின் பிரச்சினைகளைத் தீர்ப்பது மிகவும் சவாலானது ஆகும். எனினும், இறுதியில் சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான கால அவகாசத்தை நீட்டித்துக் கொடுத்தால் போதுமானது. இந்த அவகாசம் என்பது, நீண்ட காலமாக இருக்க வேண்டிய தேவை இல்லை. நிகழ்கால முடிவெடுக்கும் நடைமுறையைக் கடந்து, குறுகிய காலமாக இருந்தால் கூட போதுமானது.

அண்மையில் நடைபெற்ற நீடித்த மேம்பாட்டிற்கான உலக உச்சிமாநாட்டில் பங்கேற்றதன் மூலம் சமூக இலட்சியங்கள் மற்றும் நீதிக்கான சிந்தனைகள் ஆகியவற்றை மக்களிடம் விளக்க முடியும் என்பதை இளைஞர்கள் நிரூபித்திருக்கின்றனர். பொருளாதார அடிப்படைக்கு எதிரான சுற்றுச்சூழலில் உலகத்தால் இயங்க முடியாது என்பதை மற்றவர்களை விட இளைஞர்கள் மிகவும் தெளிவாகப் புரிந்துகொண்டிருக்கின்றனர். சுற்றுச்சூழல் சார்ந்த பிரச்சினைகளைக் கையாளக்கூடியவர்களாக இளைஞர்களை முன்னேற்ற மிகவும் சிறந்த வழி சுற்றுச்சூழல் கல்வி தான். சுற்றுச்சூழல் சார்ந்த பிரச்சினைகளில் இளைஞர்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய தகவல்களின் முதன்மை



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

ஆதாரமாகத் திகழ்வது ஊடகங்கள் தான். எனவே, நீடித்த வளர்ச்சிக்கான விரிவான சமூகக் கற்றல் நடைமுறையை ஊக்குவிப்பதற்கு சுற்றுச்சூழல் கல்வியாளர்களும், ஊடகங்களும் இணைந்து அதிக ஒருங்கிணைப்பு கொண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

சுற்றுச்சூழலை மதிக்கக்கூடிய நீடித்த வாழ்க்கை முறை ஊக்குவிக்கப்படும். நமது வளங்களை முதல் முறையும், மறுசுழற்சி செய்து மறுமுறையும் சிறப்பாகப் பயன்படுத்துவதற்கு நாம் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். காலநிலை மாற்றம், பல்லுயிர் வாழிடச் சூழல் அழிவு, மாசு மற்றும் கழிவு ஆகிய உலகளாவிய மூன்று பிரச்சினைகளை உலகம் இப்போது எதிர்கொண்டு வருகிறது. கடந்த பல பத்தாண்டுகளாக, சுற்றுச்சூழலைப் பற்றி எந்தக் கவலையும் இல்லாமல் நீடிக்கும் பொருத்தமற்ற உற்பத்தியும் நுகர்வும் தான் உலகம் இப்போது எதிர்கொண்டு வரும் பேரிடர்களுக்குக் காரணமாகும். இந்த உலகில் நாம் எவ்வாறு வாழ்கிறோம்? எவ்வாறு பொருள்களை நுகர்வு செய்கிறோம் என்பதுதான் மிகவும் முக்கியமாகும். கிளாஸ்கோ நகரில் 2022ஆம் ஆண்டு நடைபெற்ற காலநிலை மாற்றத்திற்கான ஐக்கிய நாடுகள் செயல் திட்டத்தில் கையெழுத்திட்ட நாடுகளின் 26வது மாநாட்டில் (COP 26) பங்கேற்றுப் பேசும் போது, 'லிவீதிணி' என்ற தத்துவத்தை நமது பிரதமர் முதன் முதலில் முன்வைத்தார். சுற்றுச்சூழல் பாதுகாப்பைக் கருத்தில் கொள்ளும் வாழ்க்கை முறையை இந்தத் தத்துவம் போதிக்கிறது. எந்தச் சிந்தனையும் இல்லாமல் விருப்பம் போல பொருள்களை நுகர்வு செய்து, வீணாக்குவதற்கு பதிலாக சிந்தனையுடன் செயல்பட்டு திட்டமிட்ட முறையில் பொருள்களை நுகர்வு செய்வதுதான் இந்தத் தத்துவத்தின் நோக்கமாகும். ஒருங்கிணைந்த செயல்பாடுகளின் வலிமையை உறுதி செய்வதன் மூலம், கூடுதல் நீடித்த எதிர்காலத்தை நோக்கிய நடவடிக்கைகளை கொஞ்சம் கொஞ்சமாக ஒவ்வொரு நாளும் மேற்கொள்வதற்கு ஊக்குவிப்பதுதான் LiFE தத்துவத்தின் நோக்கம் ஆகும். அதுமட்டுமின்றி, சமூகக் கட்டமைப்புகளின் சக்தியை வலுப்படுத்துவதன் மூலம், காலநிலை மாற்றம் தொடர்பான சமூக நடைமுறைகளில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும் LiFE தத்துவம் முயல்கிறது. 'பூவுலகின் நலனுக்கு ஆதரவான மக்கள்' என்ற தலைப்பில் உலகளாவிய தனிநபர் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கும், LiFE இயக்கம் முயற்சி செய்கிறது. சுற்றுச்சூழலுக்குச் சாதகமான வாழ்க்கைச் சூழலை ஏற்றுக்கொண்டு கடைபிடிப்போம் என்ற உறுதிமொழி அளிப்பவர்கள் இந்தக் கட்டமைப்பில் அங்கம் வகிப்பார்கள். 'பூவுலகின் நலனுக்கு ஆதரவான மக்கள்' அமைப்பின் மூலம் சுற்றுச்சூழலுக்குச் சாதகமான செயல்பாடுகளை வலியுறுத்தக் கூடிய, சாத்தியமாக்கக் கூடிய சூழல் அமைப்பை உருவாக்க இந்த இயக்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இப்போது செயல்பாட்டில் உள்ள பயன்படுத்திவிட்டு வீசியெறியும் பொருளாதாரம் ஆபத்தானது ஆகும். எந்தவித சிந்தனையும் இல்லாமல் பூலகிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் நுகர்வுதான் இதற்குக் காரணம். இந்த முறையை முற்றிலுமாக அகற்றிவிட்டு, எந்தவொரு பொருளையும் திட்டமிட்டு, நுகர்வு செய்யக்கூடிய சுழற்சிப் பொருளாதாரத்தை நிலைநிறுத்துவது தான் இந்த இயக்கத்தின் நோக்கமாகும். இந்தியாவிற்கு நீடித்த எதிர்காலத்தை உறுதி செய்ய வேண்டும் என்றால், LiFE கொள்கையை அதன் உண்மையான உணர்வுடன் இளைஞர்கள் பின்பற்ற வேண்டும்.

### ஆலோசனை, விழிப்புணர்வை அதிகரித்தல் மற்றும் திறன்மேம்பாடு செய்தல்

தேசிய நீடித்த வளர்ச்சி குறித்த கலந்தாய்வுகளுக்கு இளைஞர்கள் சார்ந்த பார்வையை வழங்குவதற்கும், இந்தக் கலந்தாய்வுக்கு இளைஞர்கள் அர்த்தமுள்ள வகையில் ஈடுபடுத்தப்படுவதை உறுதி செய்யவும் தேவையான திட்டமிடல் பயிலரங்குகளை நடத்துதல், பிரச்சாரங்களை மேற்கொள்ளுதல் ஆகியவற்றில் இளைஞர்களைத் தலைவர்களாகக் கொண்ட அமைப்புகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. இளைஞர்களுக்கு இளைஞர்களே பயிற்சி அளித்தல், கல்வி புகட்டுதல், திறன் மேம்பாடு செய்தல் ஆகியவற்றின் மூலம் இந்த இயக்கங்களில் பங்கேற்கும் இளைஞர்கள் அதன் நோக்கத்தை எட்டுவதற்குப் பங்களிக்கின்றனர். அரசின் திட்டங்களில் இளைஞர்களுக்கான கொள்கைகளைச் சேர்த்தல், பொதுத்திட்டமிடல் நடைமுறையில் இளைஞர்களைப் பங்கேற்கச் செய்தல் ஆகியவற்றுக்காக கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் அரசுப் பிரதிநிதிகளுக்கு தொடர்ந்து உதவி செய்து வரும் இளைஞர் அமைப்புகள், போதிய நிதி, வளம் மற்றும் அங்கீகாரம் இல்லாமல் தடுமாக் கொண்டிருக்கின்றனர். வளர்ச்சி நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணிகளையும், திறன் மேம்பாட்டுப் பணிகளையும், நிதியுதவி மற்றும் ஒழுங்குமுறை ஆதரவின் மூலமாகவே மேம்படுத்த முடியும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான பாடங்களை இளைஞர்களுக்கு



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

சுவையாகக் கற்பிக்க வேண்டுமானால், அதற்கு டிஜிட்டல் கற்பித்தல் முறைகளையும், சாதாரண கற்பித்தல் முறைகளையும் ஒன்று சேர்க்க வேண்டும். அதுமட்டுமின்றி, உலகம் முழுவதும் உள்ள இளைஞர்களை ஒருங்கிணைத்து, உலகளாவிய பிரச்சினைகளை அவர்கள் அறிந்து கொண்டு, அவற்றுக்கு உள்ளூர்த் தீர்வுகளைக் கண்டுபிடிக்க உதவ வேண்டும். இதற்கு அரசின் உதவிகள் தேவை.

நீடித்த சூழல் அமைப்பை எட்டுவதற்கான நடைமுறைகளை விரைவுபடுத்த வேண்டும், 2030ஆம் ஆண்டிற்குள் கரிமச் சமநிலையை ஏற்படுத்த வேண்டும் என்றால், அதற்காக உள்ளூர் அளவிலும், மாநில அளவிலும், தேசிய அளவிலும் இளைஞர்களால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் ஆதரவு அளிக்க வேண்டியது அவசியம் என்று மத்திய, மாநில அரசுகள் உணர்ந்து கொண்டிருக்கின்றன.

**இனி செல்ல வேண்டிய பாதை**

ஒட்டுமொத்த வணிகத்திற்குச் சாதகமான சூழலில், கல்வி, நிதி, கட்டமைப்பு, சந்தை மேம்பாடு ஆகிய துறைகளில் தொழில்நுட்ப உதவிகள் மற்றும் துறை சார்ந்த உதவிகளை வழங்கக் கூடிய சூழல் அமைப்புகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் இளம் சமூகத் தொழில் முனைவோர் ஈடுபட்டிருக்கின்றனர். இதையே வேறு வார்த்தைகளில் கூறவேண்டுமானால், இளம் சமூகத் தொழில் முனைவோருக்கு ஆதரவு அளிக்கக்கூடிய வலிமையான வணிகச் சூழல் நமது சூழல் அமைப்பில் ஏற்படுத்தப்பட வேண்டும். அதாவது, வணிகத்திற்குச் சாதகமான சூழலை மேம்படுத்துவது மிகவும் முக்கியம்... ஆனால் அதுமட்டுமே போதுமானது அல்ல. இளைஞர்கள் அவர்களின் திறமைகளை முழுமையாக வெளிப்படுத்துவதற்கு உதவுவதற்காக முழுமையான இலக்கை நோக்கிய கவனம் கொண்ட சமூகத் தொழில்முனைவுச் சூழல் அமைப்பை உருவாக்குவதற்கான அணுகுமுறை தேவைப்படுகிறது. இளம் சமூகத் தொழில் முனைவோர், நாட்டின் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டிற்கும் உள்ளடக்கத்திற்கும் வகை செய்வார்கள் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றுதான் என்றாலும் கூட, அவர்களின் முழுத் திறனையும் இப்போது உள்ள சூழல் அமைப்புகள் அரிதாகவே பயன்படுத்திக் கொள்கின்றனர். இளைஞர்கள் மேம்பாடு மற்றும் சமூகத் தாக்கம் ஆகிய இரு கோணங்களில் இளம் சமூகத் தொழில்முனைவோரின் முழுத்திறனையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றால், அதற்கு சாத்தியமான, சிறப்புத் தேவைகளுடன் வடிவமைக்கப்பட்ட சமூகத் தொழில்முனைவுச் சூழல் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

இளம் தொழில்முனைவோர் முன்னேற வேண்டுமென்றால், அவர்களுக்கு ஊக்கம் அளித்து வளர்க்கும் சூழல் உருவாக்கப்பட வேண்டும். படைப்புத் திறனை ஊக்குவிக்கக் கூடிய சமூக நிறுவனங்கள், சமூக உள்ளடக்கத்தை ஏற்படுத்தக் கூடிய நிறுவனங்கள், இளைஞர்களின் வேலைவாய்ப்பின்மையையும், தகுதிக்கு ஏற்ற வேலை கிடைக்காத தன்மையையும் எதிர்த்துப் போராடக் கூடிய நிறுவனங்கள், நீடித்த வளர்ச்சியை மேம்படுத்தக்கூடிய நிறுவனங்கள் ஆகியவற்றைத் தொடங்குவதற்கு சாதகமான சூழல் இளைஞர்களுக்கு உருவாக்கித் தரப்பட வேண்டும். பல்வேறு வகையான பங்குதாரர்களை, குறிப்பாக இளைஞர்களைக் கொண்ட சாட்சியங்களின் அடிப்படையிலான உத்திகளைப் பயன்படுத்தக் கூடிய தொழில்முனைவுச் சூழல் அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும். அனைத்து சூழல் அமைப்புகளின் அம்சங்கள் இடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தக்கூடியவையாக அவை இருக்க வேண்டும்.

பசுமை வேலைவாய்ப்புகளுக்கு ஏற்ற கல்வித் திட்டங்களையும், வேலை வழங்கும் நடைமுறைகளையும் வலுப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. தேசிய காலநிலை சார்ந்த இலக்குகளை அடைவதற்கு உதவக்கூடிய அனைவரையும் உள்ளடக்கிய எதிர்காலத்திற்குத் தேவையான மனிதவளத்தை உருவாக்குவதற்கு ஏற்ற கல்வித்திட்டம், ஆராய்ச்சி, வேலைவாய்ப்பு ஆலோசனை, வேலைவாய்ப்பு வழங்குதல் ஆகியவற்றுக்கான தேவைகள் அதிகரித்து வருகின்றன. பசுமைக் கல்வி பயிலும் மாணவர்கள், பணியாளர்களாகவும், பணி வழங்குபவர்களாகவும், வாடிக்கையாளர்களாகவும், சமூக உறுப்பினர்களாகவும், முதலீட்டாளர்களாகவும் மாறுவதை உறுதி செய்யும் வகையில், அனைத்து கல்வித் திட்டங்களிலும் சுற்றுச்சூழல் மற்றும் சமூக ரீதியாக நீடித்த வளர்ச்சிக்கான தகவல்கள் மற்றும் திறன்கள் சேர்க்கப்பட வேண்டும். பசுமைத் தொழில்முனைவை ஊக்குவிக்கும் வகையில், நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான பணிகளில் ஈடுபட்டிருப்பவர்கள், பசுமைப் பொருளாதார வேலைவாய்ப்பு வழங்குபவர்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியோருக்கு இடையிலான தொடர்பை இந்தத் திட்டம் வலுப்படுத்த வேண்டும்.

**–அவிநாஷ் மிஸ்ரா,**
ஆலோசகர் (இயற்கை வளங்கள், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் பிரிவு), நிதிஆயோக், புதுதில்லி

**–மதுவந்தி தத்தா,**
இளம் சுற்றுச்சூழல் வல்லுநர், நிதிஆயோக், புதுதில்லி



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/



# வேலைவாய்ப்பிற்கான திறன்கள்

– ஹேமங் ஜானி

இந்திய மக்களின் சராசரி வயது 29 ஆண்டுகளாகவும், உலகத்தில் உள்ள இளைஞர் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு இந்தியாவில் இருக்கும் சூழலிலும், நமது நாடு உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடாக விளங்குகிறது. இந்த ஆண்டு நாம் அமிர்த காலத்தில் அடியெடுத்து வைத்துள்ளோம். அதாவது, இந்தியா @100 என்ற இலக்கை நோக்கி நாம் பயணம் மேற்கொள்ளும் 25 ஆண்டு கால அமிர்த காலம் தொடங்கியுள்ளது. மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் செயல்பட்டு வரும் அரசானது 2025ஆம் ஆண்டுக்குள் 5 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் கொண்ட நாடாக இந்தியாவை மேம்படுத்த உறுதி பூண்டுள்ளது. மேலும் 2047இல் இந்தியாவை வளர்ந்த தேசமாக மாற்றவும் உறுதி கொண்டுள்ளது. அரசுத்துறைகள், தனியார் துறை மற்றும் இலாப நோக்கம் இல்லாமல் செயல்படுகின்ற அமைப்புகள் ஆகியவை இணைந்து பல்வேறு முன்னெடுப்பு நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளன. இத்தகைய நடவடிக்கைகளால் எதிர்பார்க்கப்படும் பலன்கள் ஏற்படும்.

தேசக் கட்டுமானத்தில் இளைஞர்களின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். இளைஞர் உறவுகள், விளையாட்டுகள் அமைச்சகமானது (MoYAS) ஏப்ரல் 2022இல் தேசிய இளைஞர் கொள்கையின் வரைவுத் திட்டத்தை வெளியிட்டுள்ளது. இந்த வரைவுத் திட்டமானது நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG) என்பதோடு ஒத்திசைந்த வகையில் இளைஞர் மேம்பாட்டை ஏற்படுத்துவதற்கான பத்தாண்டுக்காலத் தொலைநோக்குப் பார்வையுடன் உருவாக்கப்பட்டுள்ளது.




1. கல்வி
2. வேலைவாய்ப்பும் தொழில்முனைவும்
3. இளைஞர் தலைமைத்துவமும் வளர்ச்சியும்
4. ஆரோக்கியம், உடல்தகுதி, விளையாட்டுகள்
5. சமூக நீதி

ஆகியன வரைவுத் திட்டத்தின் முக்கியமான ஐந்து கவனக்குவிப்பு அம்சங்களாகும். தேசிய மாணவர் படை (NCC), நாட்டு நலப்பணித் திட்டம் (NSS), நேரு யுவ கேந்திரா சங்காதன் (NYK) ஆகிய அமைப்புகள் இந்த தொலைநோக்குப் பார்வையை செயல்படுத்துவதை நோக்கிப் பணியாற்றுகின்றன. இளைஞர் உறவுகள், விளையாட்டுகள் அமைச்சகத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் ராஜீவ்காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனமானது (RGNIYD) கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அதுமட்டுமல்லாமல் இந்த நிறுவனமானது இந்தியாவில் இளைஞர் மேம்பாட்டுக்கான சிறப்புத் தகுதி பெற்ற மையமாகவும் விளங்குகிறது.

2020ஆம் ஆண்டில் கோவிட் 19 பெருந்தொற்றின் காரணமாக இந்தியா மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் பரவலாக சமூகப் பொருளாதாரத்தில் சீர்குலைவு ஏற்பட்டது. இந்தப் பெருந்தொற்றுக் காலத்தில் ஆத்மநிர்பார் பாரத் அபியான் (சுயசார்பு இந்தியா



https://www.tnpscthervuthunaivan.com/




திட்டம்) திட்டத்தின் கீழ் நிலம், உழைப்பாளர், பணவீக்கம் மற்றும் சட்டங்கள் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு ரூ.20 இலட்சம் கோடி (உள்நாட்டு மொத்த உற்பத்தியில் சுமார் 10 சதவிகிதம்) மதிப்பிலான நிவாரணத் தொகுப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. கல்வி சார்ந்த மனஅழுத்தம், சம வயதினரின் வற்புறுத்தல், பதட்டம். மனச்சோர்வு, உணவு உண்பதில் முறையற்ற தன்மை, கற்றலில் சிரமங்கள் உள்ளிட்ட எண்ணற்ற மனநலப் பிரச்சினைகளை இளைஞர்கள் சந்திக்க வேண்டி இருந்தது. இளைஞர்களுக்கு மனஅழுத்தம் இல்லாத சூழலை உருவாக்கித் தரும் வகையில் மாண்புமிகு பிரதமர் பரிக்ஷா பே சர்ச்சா என்ற நிகழ்ச்சியின் வாயிலாக இளைஞர்களுடன் கலந்துரையாடினார். மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமுதாயத்தினரை ஒருங்கிணைக்கக் கூடிய ஒரு கலந்துரையாடல் நிகழ்வாக அது இருந்தது. மக்களின் நடத்தையில் தாக்கத்தை ஏற்படுத்தி உடலுழைப்புச் சார்ந்த ஆக்க ரீதியான வாழ்க்கை முறையை அவர்கள் மேற்கொள்ளும் வகையில் ஃபிட் இந்தியா இயக்கம் 2019ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

ஒராண்டில் சுமார் 85 இலட்சம் புதிய பட்டதாரிகள் உருவாகும் வகையில் இந்தியாவில் தற்போது ஆயிரத்திற்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் செயல்பட்டு வருகின்றன. கோவிட் 19 பெருந்தொற்றின் காரணமாக அறிவிக்கப்பட்ட ஊரடங்கு அனைத்து மாணவர்களையும் பாதித்தது. பள்ளிக்கூடங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் ஆன்லைன் கற்றல் முறை கொண்டு வரப்பட்டது. இதில் தொழில்நுட்ப வசதி கிடைக்காத நிலைமை மிகப்பெரிய சவாலாக அமைந்தது. அரசின் ஸ்வயம் பிரபா (PM e-VIDYA) என்ற முன்னெடுப்பு திட்டமானது, 22 DTH சானல்கள் கொண்ட தொகுப்பின் மூலம் 24X7 நேரமும் தரமான கல்வி நிகழ்ச்சிகளை தொலைதூரத்தில் உள்ள மாணவர்களும் பார்த்து கற்றுக் கொள்ள உதவியது. பிஎம் இவித்யா திட்டத்தின் மூலம் 25 கோடி பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு கல்வி அளிக்கப்பட்டது. டிஜிட்டல் / ஆன்லைன் / ஒலிபரப்பு ஆகியவற்றின் மூலம் கல்வி போதிக்கும் அனைத்து முயற்சிகளையும் ஒருங்கிணைத்து மாணவர்களுக்கு பல்முனை அணுகுதல் வசதியை ஏற்படுத்தித் தரக்கூடிய ஒரு முன்னெடுப்பு நடவடிக்கையாக இது அமைந்தது. கல்வித் தொழில்நுட்ப வர்த்தகம், கல்வி நிலையங்கள், மாணவர்கள் ஆகியோரை இணைக்கும் ஒரு பாலமாக தொழில்நுட்பத்திற்கான தேசியக் கல்விக் கூட்டமைப்பு (National Education Alliance for Technology - NEAT) என்ற அமைப்பை கல்வி அமைச்சகம் உருவாக்கியுள்ளது. இந்த அமைப்பினை அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் (All-India Council for Technical Education - AICTE) நடைமுறைப்படுத்தி வருகிறது. தரமான கல்வி குறைந்த செலவில் கிடைக்க வேண்டும் என்பதற்காக கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களுக்கு பல்வேறு கல்வி உதவித் தொகைத் திட்டங்களை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. உலகத்தின் கல்வி மையமாக இந்தியா மாற வேண்டும் என்ற நோக்கத்தில் அரசு 2020ஆம் ஆண்டில் புதிய கல்விக் கொள்கையை அறிவித்துள்ளது. ஸ்வயம் (SWAYAM) போர்ட்டலில் ஒரு மாணவர் இப்பொழுது 9ஆம் வகுப்பு முதல் முதுநிலைப் பட்டப்படிப்பு வரையிலும் இணைத்தின் வழியாகப் படிக்க முடியும். டிஜிட்டல் பாகுபாட்டை நீக்கக்கூடிய ஒரு பாலமாக இது செயல்படுகிறது. ஒரு மாணவர் இலவசமாக இந்தப் போர்ட்டலில் பதிவு செய்து கொண்டு, குறிப்பிட்ட சில படிப்புகளுக்கு கிரெடிட்டுகளை ஈட்டி, தங்களது கல்விக்கூடப் பட்டியலுக்கு அவற்றை மாற்றிக் கொள்ள முடியும்.

இளைஞர்களுக்கு வேலை கிடைக்கின்ற வாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் மாண்புமிகு பிரதமர் இலக்கு நிர்ணய அடிப்படையில் ஒற்றைக் குறிக்கோளுடன் ரோஜ்கர் மேளா மூலம் 10 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பினைக் கொடுக்கக் கூடிய வேலையமர்த்தல் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. 2022ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 75 ஆயிரம் பணியமர்த்தல் கடிதங்களும், அதே ஆண்டு நவம்பர் மாதத்தில் 71 ஆயிரம் பணியமர்த்தல் கடிதங்களும் வழங்கப்பட்டுள்ளன. இதே நிகழ்வில் கர்ம யோகி பாரத் தொழில்நுட்ப மேடை மாண்புமிகு பிரதமரால் தொடங்கி வைக்கப்பட்டது. கர்மயோகி பிராரம்ப் (Karamyogi Prarambh} கவனப்படுத்தப்பட்டது. மத்திய



https://www.tnpscthervuthunaivan.com/

அரசின் ஊழியர்கள் மற்றும் பயிற்சி துறையின் (Department of Personnel and Training - DoPT) நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் சிறப்பு நோக்கச் செயல் வாகனமாக கர்மயோகி பாரத் உள்ளது. அனைத்து அரசு ஊழியர்களுக்கும் திறன் கட்டமைப்பை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். ஒருங்கிணைந்த அரசு ஆன்லைன் பயிற்சி (iGOT - Integrated Government Online Training) கர்மயோகி தளத்தில் செயல்படுகிறது. பல்வேறு அரசுத் துறைகளில் புதியதாக நியமிக்கப்படுகின்ற பணியாளர்களுக்கு ஆன்லைன் புத்தாக்கப் பயிற்சி அளிக்கும் திட்டமாக கர்மயோகி பிராரம்ப் உள்ளது. அரசு ஊழியர்களுக்கான நன்னடத்தை விதிகள், பணியிட நெறிமுறைகள், நேர்மை, மனிதவளக் கொள்கைகள், பலன்கள், ஊக்கத்தொகைகள் போன்றவற்றை இது உள்ளடக்கியுள்ளது. புதியதாகப் பணியில் சேரும் ஊழியர்கள் அரசு கொள்கைகளைப் புரிந்து கொண்டு அதனைப் பழக்கப்படுத்திக் கொள்ளவும், தாங்கள் ஏற்றிருக்கும் புதிய பாத்திரத்தைத் தடங்கல் இல்லாமல் சிறப்பாக நிறைவேற்றுவதற்கும் இது உதவியாக அமையும். ஒருங்கிணைந்த அரசு ஆன்லைன் பயிற்சி (iGOT) கர்மயோகி தளத்தில் அவர்கள் தங்களது அறிவு, தொழில்திறன் மற்றும் போட்டித் திறன்களை மேம்படுத்திக் கொள்வதற்காக வேறு பல படிப்புகளையும் படிப்பதற்கு இது உதவும். ரோஜ்கர் மேளா நடத்தப்படுவதுடன் பிரதம மந்திரி தேசியத் தொழில் பழகுதல் மேளா (Pradhan Mantri National Apprenticeship Mela - PMNAM) திட்டத்தின் கீழ் 10 இலட்சம் தொழில் பழகுநர் வாய்ப்புகளும் இளைஞர்களுக்குக் கிடைக்க உள்ளது. தொழில்திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைதல் அமைச்சகமானது திறன் இந்தியா இயக்கத்தின் ஒரு பகுதியாக நாடு முழுவதும் இதனைச் செயல்படுத்த உள்ளது. 2026ஆம் ஆண்டின் இறுதியில் சுமார் 60 இலட்சம் வாய்ப்புகள் இளைஞர்களுக்கு கிடைக்கும். இதன் நோக்கம் என்பது ஓராண்டில் 10 இலட்சம் இளைஞர்களுக்குத் தொழில்திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிப்பதே ஆகும். பாதுகாப்புப் படைகளில் இளைஞர்களைப் பணியில் அமர்த்தும் அக்னிபாத் திட்டமானது அரசின் மற்றொரு உருமாற்றச் சீர்திருத்தம் ஆகும். இதன் மூலம் 46 ஆயிரம் இளைஞர்கள் அக்னி வீரர்களாக நான்கு ஆண்டுகளுக்கு தற்காலிகமாகப் பணியில் அமர்த்தப்படுவார்கள்.

2020ஆம் ஆண்டிற்கான வர்த்தகத்தை எளிதில் மேற்கொள்ளுதல் (Ease of Doing business - EoDB) என்பதில் உலக வங்கியின் தரவரிசைப் பட்டியலில் உள்ள 190 நாடுகளில் இந்தியா 63ஆவது இடத்தை வகிக்கின்றது. இந்தியத் தொழில் கூட்டமைப்பு (Confederation of Indian Industries - CII) மற்றும் இ.ஒய் (EY) ஆகியவை அண்மையில் மேற்கொண்ட மதிப்பீட்டின்படி அடுத்த 5 ஆண்டுகளில் 475 பில்லியன் அமெரிக்க டாலர் நேரடி அந்நிய முதலீடாக இந்தியாவிற்குக் கிடைக்க வாய்ப்புள்ளது. பொருளாதார வளர்ச்சிக்கும், சீர்திருத்தங்களுக்கும் அரசு தரும் முக்கியத்துவம் காரணமாக முதலீடு இந்த அளவில் கிடைக்கக் கூடும். டிசம்பர் 2022 அன்றுள்ளபடி ஸ்டார்ட்அப் இந்தியா முன்னெடுப்புத் திட்டத்தின் கீழ் 86,227 ஸ்டார்ட்அப்புகளை தொழில் அபிவிருத்தி மற்றும் பன்னாட்டு வர்த்தகத்துறை (Department for Promotion of Industry & Internal Trade - DPIIT) அங்கீகரித்துள்ளது. மேலும், இந்தத் துறையானது இளம் தொழில் முனைவோர்களுக்கு நிதி உதவி அளிப்பதோடு ஒழுங்குமுறை விதிகளுக்கு இணங்க நடப்பதற்கு ஆலோசனை வழங்குகிறது. சந்தை வாய்ப்புகளுக்கும் இந்தத் துறையானது உதவியாக உள்ளது. "நியோடெரிக் இன்னோவேட்டர்களாக இந்தியாவின் 10 இலட்சம் சிறுவர்களை உருவாக்குதல்'' என்ற திட்டமும் செயல்படுத்தப்படுகின்றது. அதாவது 722 மாவட்டங்களில் உள்ள சுமார் 10 ஆயிரம் அடல் டிங்கரிங் ஆய்வுக்கூடங்களில் (ATL) செயலூக்கமாக 75 மில்லியனுக்கும் அதிகமான மாணவர்கள் பங்கேற்று வருகின்றனர். இவர்களுக்கு 5800க்கும் அதிகமான மாற்றத்தின் வழிகாட்டிகள் உதவி புரிகின்றனர். உலக அறிவுசார் சொத்துரிமைக் கழகத்தின் (WIPO) 2022 சர்வதேசப் புத்தாக்கக் குறியீட்டு எண் தரவரிசைப் பட்டியலில் 132 நாடுகளுக்கு மத்தியில் இந்தியா 40ஆவது இடத்தை வகிக்கின்றது. ஐசிடி சேவைகளை அதிக அளவில் ஏற்றுமதி செய்தல் மற்றும் இதர காரணிகள் காரணமாக இந்தியாவிற்கு இந்த இடம் கிடைத்துள்ளது. 2014ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட 'இந்தியாவில் உற்பத்தி செய்யுங்கள்' என்ற முன்னெடுப்புத் திட்டமானது புத்தாக்கம், உலகத்தரத்திலான உள்கட்டமைப்பு வசதிகளைக் கட்டமைத்தல், உற்பத்தி, வடிவமைப்பு ஆகியவற்றில் இந்தியாவை உலகத்தின் மையமாக ஆக்குதல் ஆகியவற்றிற்கு உதவியாக உள்ளது. 2015இல் தொடங்கப்பட்ட டிஜிட்டல் இந்தியா திட்டமானது இணைய இணைப்பு



https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

கிடைப்பது அதிகரித்ததன் காரணமாக நாட்டின் இணைய உள்கட்டமைப்பு வசதியை குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துள்ளது. மேலும் இந்தத் திட்டம் தொழில்நுட்பத்தின் மூலம் நாட்டிற்கு அதிகாரம் அளித்துள்ளது. கோவிட்19 பெருந்தொற்றுக்குப் பிறகான காலகட்டத்தில் ஃபின்டெக் (Fin-Tech), இ–சுகாதாரம் மற்றும் இ–கற்றல் ஆகியவை அதிகரித்ததன் காரணமாக இந்தியாவில் 2026ஆம் ஆண்டிற்குள் 100 கோடி பில்லியன் ஸ்மார்ட் போன் பயனாளர்கள் இருப்பார்கள் என்று அண்மைக்கால ஆய்வு எடுத்துக்காட்டுகின்றது. நாடு முழுவதும் 5ஜி சேவைகளை பிரதமர் தொடங்கி வைத்திருப்பது உள்நாட்டு தொலைத்தொடர்பியல் வலைப்பின்னலை வலுப்படுத்துவதாக அமையும்.

அரசு சேவைகளைத் திறம்பட நிறைவேற்றுவதை உறுதி செய்வதிலும் கடைசி மனிதருக்கும் சேவைகளின் பயன் கிடைக்கச் செய்வதிலும் குடிமைப் பணியாளர்களுக்கு முக்கியமான பொறுப்புள்ளது. இந்திய அரசின் தகுதிறன் கட்டமைப்பு ஆணையம் (Capacity Building Commission - CBC) 2021, ஏப்ரல் முதல் நாளில் உருவாக்கப்பட்டது. குடிமைப்பணி ஊழியர்களின் திறனை மேம்படுத்துவதற்காக உலகத்தரத்திலான உள்கட்டமைப்பு வசதிகளின் வாயிலாக அரசின் மனிதவள மேலாண்மைச் செயல்பாடுகளை புரட்சிகரமாக மேம்படுத்துவதே இந்த ஆணையத்தின் நோக்கம் ஆகும். இந்த முன்னெடுப்பு நடவடிக்கையானது ''குடிமைப்பணி ஊழியர்கள் தகுதிறன் கட்டமைப்புக்கான தேசியத் திட்டம் (National Programme for Civil Services Capacity - NPCSCB) மிஷன் கர்ம யோகி'' என்று அழைக்கப்படுகின்றது. இதுவே உலக அளவில் மிகப் பெரிய தகுதிறன் கட்டமைப்புத் திட்டம் ஆகும். இந்தியாவில் மத்திய அரசு, மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் வேலை செய்கின்ற 1.5 கோடி அரசு ஊழியர்களையும் உள்ளடக்கிய திட்டமாக இது உள்ளது. அமிர்த காலத்திற்கான 21ஆம் நூற்றாண்டு குடிமைப்பணி ஊழியர்களை உருவாக்குவதற்காகப் பயிற்சி அளிக்கும் முக்கியமான பொறுப்பினை தகுதிறன் கட்டமைப்பு ஆணையம் மேற்கொண்டுள்ளது. இந்தியாவின் ஆன்மாவில் காலூன்றிய தகுதி பெற்ற சிவில் சேவையை உருவாக்குவதே இந்த ஆணையத்தின் நோக்கமாகும். இந்தியாவின் முன்னுரிமைகளைப் புரிந்து கொள்ளுதல், திறன்மிக்க சேவைகளையும், பலன் அளிக்கும் பொதுச் சேவைகளையும் வழங்குவதில் ஒத்திசைவுடன் பணியாற்றுதல் ஆகியவற்றுடன் குடிமைச் சேவை உருவாக்கப்படும். திறன் கட்டமைப்புக்கான கவனக் குவிப்பு பகுதிகளாக தேசிய முன்னுரிமைகள், உருவாகி வரும் தொழில்நுட்பங்கள், குடிமக்களை மையமாகக் கொண்டிருத்தல் ஆகியவை உள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் தகுதிறன் கட்டமைப்பு ஆணையமானது இணைய வழி திறன் கட்டமைப்புப் பயிற்சித் திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது. நாடு முழுவதும் 14 ஆயிரம் நேரு யுவ கேந்திரா தன்னார்வலர்களுக்கு (NYKS) தலைமைத்துவம், தொடர்பியல் திறன்கள் மற்றும் தன்னார்வச் சேவையில் பயிற்சி அளிப்பதுவே இதன் நோக்கம் ஆகும். வருடாந்திரத் திறன் கட்டமைப்புத் திட்டங்களுடன் இதே போன்ற செயல்திட்டங்கள் தகுதிறன் கட்டமைப்பு ஆணையத்தால் ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றன. இவை இந்திய அரசின் அனைத்து அமைச்சகங்கள் மற்றும் துறைகளில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இந்தியாவின் இளைஞர்கள் எதிர்கொள்கின்ற சவால்களை அரசு ஒற்றை இலக்கு கொண்ட இயக்க முறையில் கையாண்டு வருகின்றது. ஆனால், அனைத்துப் பிரச்சினைகளையும் அரசால் மட்டுமே தீர்த்து வைக்க முடியாது. தனியார் துறையும், இலாபநோக்கம் இல்லாத அமைப்புகளும் சம அளவில் பங்கேற்பது என்பது மிகவும் முக்கியமானதாகும். அண்மைக்காலத்தில் சீனாவில் மீண்டும் கோவிட்19 பெருந்தொற்று பரவி வருவது, ரஷ்யா உக்ரைன் போரின் பாதிப்புகள் ஏற்படுத்துகின்ற சர்வதேச உணவு நெருக்கடி, விநியோகத்தில் ஏற்படும் தொடர் நெருக்கடி, தற்போதுள்ள புவி அரசியல் சவால்கள் ஆகியன இந்தியாவின் கவனத்திற்குரிய முக்கிய கரிசனங்களாக உள்ளன. இந்தியாவின் 2023ஆம் ஆண்டிற்கான ஜி20 தலைமைப் பதவியானது வசு தெய்வக் குடும்பகம் அல்லது ''ஒரு பூமி ஒரு குடும்பம் ஒரே எதிர்காலம்'' என்ற மையக் கருத்துடன் செயல்படும் போது, உலகத் தலைவர்களுக்கு அது உதவியாக இருப்பதோடு, சர்வதேசக் குடிமக்களுக்கு அமைதியையும், வளமையையும் வழங்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

**– ஹேமங் ஜானி,**
தகுதிறன் கட்டமைப்பு
ஆணையத்தின் செயலாளர்.


https://www.tnpscthervuthunaivan.com/

2ம் பக்கம் தொடர்ச்சி...
https://www.tnpscthervuthunaivan.com/

**விண்வெளித் தொழில்நுட்பம்**



2017ஆம் ஆண்டு ஜூன் 23ஆம் தேதி கலாம் செயற்கைக்கோள் எனப்படும் வெறும் 64 கிராம் எடை கொண்ட உலகின் மிகச் சிறிய செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தியதன் மூலம் உலக விண்வெளி அரங்கில் இந்தியா புதிய சாதனையைப் படைத்தது. கலாம் பெயரில் செயற்கைக்கோளை வடிவமைத்துத் தயாரித்தது விண்வெளி விஞ்ஞானிகளோ, அல்லது பொறியாளர்களோ அல்லர்... மாறாக, தமிழ்நாட்டைச் சேர்ந்த 18 வயது மாணவனும், அவனது குழுவினரும் தான் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் சிறிய செயற்கைக்கோள், இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் ஏவுதளத்தில் இருந்து செலுத்தப்பட்டது. வெறும் 64 கிராம் எடை கொண்ட இந்தச் செயற்கைக்கோளை ரிபத் ஷாருக் என்ற மாணவர் தனது ஆறு நண்பர்களுடன் இணைந்து உருவாக்கியிருந்தார். திறன்மிகு கைபேசியை விடவும் குறைந்த எடை கொண்ட இந்தச் செயற்கைக்கோளை கார்பன் ஃபைபர் பாலிமர் மூலம் மாணவர்கள் உருவாக்கியுள்ளனர். விண்ணில் செலுத்தப்பட்ட பிறகு விண்வெளியில் குறைவான புவிஈர்ப்பு விசை சூழலில், 12 நிமிடங்களுக்கு இந்தச் செயற்கைக்கோள் இயக்கப்பட்டது.

ஸ்நேகதீப் குமார் என்ற 17 வயது இளைஞர், கடந்த 2022ஆம் ஆண்டு ஜூலை 1ஆம் தேதி அமெரிக்க அரசால், கென்டுக்கி சபையின் மூலம் வழங்கப்படும் கென்டுக்கி கர்னல் விருதை வென்றார். இந்த விருதை, இந்தியாவில் இருந்து வென்ற மிகச் சிலரில் ஸ்நேகதீப் குமாரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. வளர்ந்து வரும் வான் இயற்பியல் வல்லுநரான ஸ்நேகதீப் குமார், நெபுலா விண்வெளி அமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளார். முழுக்க முழுக்க மாணவர்களால் உருவாக்கப்பட்ட முதல் அமைப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது.

விண்வெளிக் கல்வி தொடர்பாக இந்திய மாணவர்களுக்கு இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் பயிற்றுவிக்கும் நோக்குடனும், தொண்டு நிறுவனமும், புத்தொழில் நிறுவனமுமான ஜென்எக்ஸ்ஸ்பேஸ் (GenexSpace) நிறுவனத்துடன் இணைந்து, 24 வயது தொழில் முனைவோரான சி.நிகிதா என்பவர் புகழ்பெற்ற விண்வெளிக் கல்வி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பை (Space Education Research and Development - SSERD) உருவாக்கியுள்ளார்.

**விளையாட்டு**

இங்கிலாந்தின் பர்மிங்ஹாம் நகரில் 2022ஆம் ஆண்டு ஜூலை ஆகஸ்ட் மாதங்களில் நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இந்திய அணியின் ஒட்டுமொத்த பதக்கப் பட்டியலில் 61 பதக்கங்களுடன் நான்காவது இடத்தைப் பிடித்தது. மல்யுத்தப் பிரிவில் தான் இந்தியா அதிகபட்சமாக 12 பதக்கங்களை வென்றது. அவற்றில் ஆறு தங்கப்பதக்கங்கள் அடங்கும். அடுத்தபடியாக, வலுதூக்கும் போட்டிகளில் 10 பதக்கங்களை இந்திய அணி கைப்பற்றியது. பர்மிங்ஹாம் காமன்வெல்த் போட்டியில் கடைசியாக இந்தியா வென்ற பதக்கம் ஹாக்கிப் போட்டி மூலம் கிடைத்தது. இந்தியக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைத்த இந்திய வீரர்களை கௌரவிக்கும் வகையில், கடந்த 2022ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சியில் 2022ஆம் ஆண்டு தேசிய விளையாட்டு மற்றும் சாகச விருதுகளை வழங்கினார்.

2022ஆம் ஆண்டுக்கான மேஜர் தயான் சந்த் கேல் ரத்னா விருது டேபிள் டென்னிஸ் வீரரான சரத் கமல் அச்சந்தாவுக்கு வழங்கப்பட்டது. காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் தனிநபர் போட்டி, கலப்பு இரட்டையர், அணிப்போட்டி ஆகியவற்றில் மொத்தம் மூன்று தங்கப் பதக்கங்களையும், ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் அவர் கைப்பற்றினார்.

2022ஆம் ஆண்டுக்கான அர்ஜுனா விருதுகள், ஒலிம்பிக் போட்டிகளிலும், மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டிகளிலும், காது கேளாதோருக்கான ஒலிம்பிக் போட்டிகளிலும் பங்கேற்றவர்கள் என மொத்தம் 25 பேருக்கு வழங்கப்பட்டது.

தடகளப் போட்டிகளில் மிகச் சிறப்பாக செயல்பட்டமைக்காக 2022ஆம் ஆண்டுக்கான அர்ஜுனா விருது சீமா புனியா என்ற வீராங்கனைக்கு வழங்கப்பட்டது. இவர் துரோணாச்சாரியார் விருது, வாழ்நாள் சாதனை விருதாக தயான் சந்த் விருது, ராஷ்ட்ரிய கேல் புரோத்சகந்த் புரஸ்கார், மௌலானா அபுல்கலாம் ஆசாத் கோப்பை, டென்சிங் நார்கே தேசிய சாகச விருது உள்ளிட்ட மேலும் பல விருதுகளையும் வென்றிருக்கிறார்.

இந்தியாவைச் சேர்ந்த 23 வயது நீரஜ் சோப்ரா, 2020ஆம் ஆண்டு டோக்கியோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார். இதன் மூலம் ஒலிம்பிக் போட்டிகளின் தடகளப் பிரிவில் இந்தியாவுக்கு முதன் முறையாக தங்கப்பதக்கம் வென்று கொடுத்தவர் என்ற சாதனையை அவர் படைத்தார்.

சென்னையைச் சேர்ந்த பதின்வயது சதுரங்க வீரரான பிரக்ஞானந்தா, நார்வே நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற உலக சதுரங்க சாம்பியன் மேக்னஸ் கால்சனை வீழ்த்தி, புதிய சாதனை படைத்தார். இந்தப் போட்டி, ஏர்திங்ஸ் மாஸ்டர் சதுரங்கப் போட்டிகளின் அங்கமாக கடந்த 2022ஆம் ஆண்டு பிப்ரவரி 23ஆம் தேதி ஆன்லைனில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. 16 வயதே ஆன பிரக்ஞானந்தா, 39 காய் நகர்த்தல்களில் கால்சனை வீழ்த்தி சாதனை படைத்தார். பிரக்ஞானந்தா இதுவரை மூன்று சர்வதேசப் பட்டங்களை வென்றிருக்கிறார். 2019ஆம் ஆண்டு நடைபெற்ற எக்ஸ்ட்ராகான் சதுரங்க ஓபன் போட்டிகளில் பங்கேற்ற போது, பிரக்ஞானந்தாவுக்கு 13 வயது தான். அந்தப் போட்டியில் பிரக்ஞானந்தா சிறப்பாக விளையாடினார்.

● பத்திரிகை தகவல் மையம்


https://www.tnpscthervuthunaivan.com/

https://www.tnpscthervuthunaivan.com/

ISSN 0971 - 8362
THITTAM (YOJANA - TAMIL)

Published on: 1st Week of Every Month
Posted on : 7th February 2023
Posted at Egmore RMS / 1 Patrika Channel

Registrar of Newspapers for India No.24495/74
"Registration" No.TN/CC(S)DN//566/2021-2023
WPP No.: TN/PMG (CCR) WPP No. 150/2021-2023




Published by Shri Sanjay Ghosh, Senior Editor/ Deputy Director on the behalf of DG, Publications Division, Ministry of information and Broadcasting, Govt. of India.
and Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., No. 142, Jani Jan Khan Road, Royapettah, Chennai - 14. Ph: 044-28482441.
Published at 'A' Wing, Ground Floor, Rajaji Bhavan, Chennai - 600 090. Ph: 24465382/24917673.

https://www.tnpscthervuthunaivan.com/